
கல்கி




KALKI 3.9.1967 40 காசு



FDSAGM8314TMA

ISN'T SHE BEAUTIFUL? OF COURSE, SHE IS!





she owes her beauty to **AFGHAN SNOW** *Beauty Aids- the aids to beauty that have aided millions of maidens to glamour and irresistible charm.*

AFGHAN SNOW—AN EXCELLENT ALL ROUND COMPLEXION AID.

AFGHAN SNOW—AN IDEAL SKIN TONIC THAT VANISHES PIMPLES AND WRINKLES. PRESERVES THE PETAL SOFT DEWY COMPLEXION. AVAILABLE IN 4 SIZES.

AFGHAN FACE POWDER—AVAILABLE IN 4 SHADES FOR FLAWLESS COVERAGE AND SMOOTHNESS.


AFGHAN LIPSTICK—A WIDE RANGE OF SHADES TO KEEP YOUR LIPS LUSTROUS AND MOIST.

AFGHAN NAIL POLISH—IN SPARKLING COLOURS FOR EVERY TASTE. IT HELPS PROTECT BRITTLE NAILS.

AFGHAN CREAM CAKE—A CREAM BLENDED POWDER IN A HANDY COMPACT. AN INSTANT BEAUTY AID THAT ADDS A SOFT MATTE FINISH TO ANY MAKE-UP, IMPARTING DELICATE NATURAL BEAUTY

AFGHAN SNOW BEAUTY AIDS

E. S. PATANWALA BOMBAY-77 (INDIA)




கல்கி

பொருளடக்கம்

பிலவங்க, ஆவணி 18 - செப்டம்பர் 3










"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே ; சம்பவங்களும் கற்பனையே.

இலங்கையில் 40 சதம் (தபால் செலவு தனி)


அடுத்தபடி?
வருடம் நாலுகோடி டாலர் உதவி தேவை



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 27 □ இதழ் 5

நாட்டைத் துண்டாடும் நாசத் திட்டம்

சர்வகலாசாலைகளில் பிரதேசமொழிகளே போதனை மொழியாக வேண்டுமென 1947ல் ராஜாஜி கூறியதுதான் தமக்குப் பிரமாணம். என்கிறார் மத்திய கல்வி மந்திரி ஸ்ரீ திரிகுண ஸேன் அவர்கள். வங்காளத்தில் ராஜாஜி கவர்னராக இருந்த போது, சர்வகலாசாலைகளில் தாய் மொழிப் போதனையே வேண்டும் என்று பேசிய பேச்சுக்களை ஸ்ரீ ஸேன் மேற்கோள் காட்டுகிறார். ராஜாஜி முன்னுக்குப் பின் முரணாக நடக்கிறார் என்றும் கூறுகிறார்.

இதில் முரண்பாடில்லை. போதனை மொழி என்பது என்ன என்பதை ராஜாஜி தெள்ளத் தெளிவாக விளக்கியிருக்கிறார். புத்தகங்கள் எந்த மொழியில் உள்ளனவோ அதுவே போதனையல்ல. புத்தகங்களோடு அவற்றுக்கு ஆசிரியர்கள் தரும் விளக்கங்களும் சேர்ந்தே போதனை. புத்தக மொழி ஆங்கிலமாயிருந்தாலும், மாணாக்கர் நலனை முன்னிட்டு விளக்கங்களை ஆசிரியர்கள் பிரதேச மொழியிலும் தரலாம். அகில இந்தியாவிலும் படிப்பாளிகள் தங்கு தடையின்றிச் செல்ல வசதியாகவும், நமது அகில உலகத் தொடர்பு முறிவுபடாதிருக்கவும், நாள்தோறும் முன்னேறும் ஸயன்ஸ்"களிலும் கலைகளிலும் நாம் பின்தங்கிவிடாதிருக்கவும், பட்டப் படிப்புக்குப் பின் விசேஷ ஆராய்ச்சிகள் செய்வதற்கு அனுகூலமாகவும் ஆங்கிலப் புத்தகங்களையே நாம் பின்பற்ற வேண்டும்; எனினும் மாணாக்கர்களுக்கு விஷயத்தைப் புரிய வைப்பதற்கும், அவர்களது ஐயங்களை நீக்குவதற்கும் ஆசிரியர்கள் தமது விளக்கங்களில் தாராளமாகத் தாய்மொழியைப் பயன்படுத்தலாம் — இதுவே ராஜாஜியின் யோசனை. புத்தகம் — விளக்கம் என்ற இரு வேறு அம்சங்கள் இருப்பதைப் புரிந்து கொள்ளாமல் அவர் அன்றைக்கு அப்படிச் சொன்னார், இன்றைக்கு இப்படிச் சொல்கிறார் என்று குறை சொல்வதில் பொருள் இல்லை.

அப்படியே ராஜாஜி கருத்தை மாற்றிக் கொண்டிருந்தாலும் அது தவறு இல்லை. ''நானாக ஆக நான் அநுபவத்தாலும், சிந்தனையாலும் வளர்ச்சி அடைந்தால் அது தவறு என்று ஸ்ரீ ஸேன் கருதுகிறாரா?'' என்று கேட்கிறார் ராஜாஜி. கருத்தை மாற்றிக் கொள்ளும் அறிவு நெகிழ்ச்சியும், தீரமும், ஆன்மசத்தியமும் ராஜாஜிக்கு இருப்பதற்காக நாடு அவரைப் போற்றும் போது, இதை ஒரு குறையாக ஸ்ரீ ஸேன் எண்ணினால் அது பரிதாபம்.

அது எப்படியாயினும், போதனை மொழிப் பிரச்னையைப் பற்றி ராஜாஜி இன்று கூறுவதை நாட்டின் இன்றையத் தேவைகளை ஒட்டித்தான் பார்க்கவேண்டுமே ஒழிய, அவர் முன்பு கொண்டிருந்த கருத்துக்களில் அதை உரைத்துப் பார்க்க வேண்டிய அவசியமே இல்லை. 'ராஜாஜி ஆதியில் சொன்னதைத்தான் ஏற்போம்; இப்போது அவர் தம் புதிய கருத்துக்களைத் தெளிவாக விளக்கினாலும் அதைக் கேட்க மாட்டோம்' என்று கூறுவது மதியீனம். அறிவாளிகள் அனைவரும், நாட்டின் முன்னேற்றத்தில் அக்கறையுள்ள அனைவரும், குறுகிய பிரதேசப் பித்துப் பிடிக்காத அனைவரும், நியாயம் உணர்ந்த அனைவரும் இன்று அவர் சொல்வதை ஒப்புக் கொள்வார்கள்.

பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்குத் தாய்மொழியில் போதிப்பதே முறை. ஆனால் இந்தியாவைப் படிப்பாளிகளிடையே பல திட்டுக்களாகத் துண்டிக்காதிருக்க வேண்டுமாயின் சர்வகலாசாலைகளில் ஆங்கிலம் நீடிக்க வேண்டும். ஆங்காங்கு பிரதேசமொழியிலேயே படிப்பு அமைந்துவிட்டால் படிப்பாளிகள் மற்ற ராஜ்யங்களுக்குச் செல்ல முடியாமல் முடக்கப்படுவர். தாய்மொழிகளில் மக்களிடையே உள்ள வேற்றுமைகளை உத்தியோகத் துறையிலும் வேற்றுமையாக்குவதற்கே சர்க்காரின் திட்டம் உதவும். 'ஒற்றுமை, ஒருங்கிணைப்பு, ஐக்கியப்பாடு' என்

றெல்லாம் ஒருபுறம் முழங்கும்போது நாட்டின் படிப்பாளிச் சமூகத்திடையே நிலவும் ஒற்றுமையைத் தகர்த்து வேற்றுமையை விதைக்கத் திட்டம் போட்டிருக்கிறார்கள். நாடு முன்னேற வேண்டும் என்று கோஷிக்கும் போதே, ஆங்கிலத்தை அகற்றிக் காலத்தை இருநூறாண்டுகள் பின்னுக்குத் தள்ளப் பார்க்கிறார்கள்.

இவ்விஷயத்தில் உபராஷ்டிரபதி டாக்டர் வி. வி. கிரி அவர்களின் குரலுக்கு மத்திய சர்க்கார் உரிய மதிப்புத் தந்தாக வேண்டும். கிரி அவர்களைச் சமீபத்தில்தான் பெருவாரியான ஆளும் கட்சியினர் தேர்ந்தெடுத்துப் பதவியில் அமர்த்தியுள்ளனர். எனவே, அவரது கருத்தை அவர்கள் அலட்சியம் செய்வதற்கில்லை. ஸ்ரீ கிரி என்ன சொல்கிறார்? "ஆங்கிலத்தை அகற்ற வேண்டும் என்று இப்போது நான் கூறினால் மிகப் பெரிய மனிதனாகி விடலாம். என்றாலும், மற்றவர்களைப் போல் என்னால் உண்மைக்கு மாறுபட்ட இரண்டாவது குரலை எழுப்ப முடியாது" என்கிறார் நமது உபராஷ்டிரபதி.

ஆங்கிலத்தை அகற்றிப் பிரதேசமொழிக்கு இடம் தர வேண்டும் என்று ஆட்சியாளர்கள் கூறினாலும், உண்மையில் அவர்களது ஆசை ஹிந்திக்கு ஆதிபத்தியம் தருவதுதான். இதற்கு ராஜாஜி இன்று மட்டுமல்ல, என்றுமே ஒப்புதல் தந்திருக்க மாட்டார். இருபதாண்டுகளுக்குமுன் ஸ்ரீ ஸேன் அவர்கள் ராஜாஜியிடம் ஹிந்தியைப் போதனை மொழியாக்கலாமா என்று கேட்டிருந்தாலும் அவர் கூடாது என்றுதான் கூறியிருப்பார். இதற்கு எவ்வளவு நீண்ட காலம் அவகாசம் கேட்டிருந்தாலும் ராஜாஜி ஒப்பியிருக்க மாட்டார். ஹிந்தி ஆதிக்கத்துக்காகச் செய்யும் எந்த மறைமுக ஏற்பாட்டையும் வங்காளமோ தென் இந்தியாவோ எந்த நாளும் ஏற்க முடியாது.

மொழிவாரி மாகாணங்கள் பிரித்ததால் ஏற்பட்ட தீயவிளைவுகளைக் கண்டபின்னும் கல்வித் துறையில் புதிதாக மொழிவாரிப் பிரிவினைகள் செய்ய முற்படுவது எத்தகைய அறிவீனம்? சிவசேனை போன்ற பிரதேச வெறியர்களின் இயக்கங்கள் தலைதூக்கியிருக்கும் போது, மேலும் அகில பாரத உணர்வுக்கு மாறான பிரதேச அபிமானத்துக்குத் தூபம் போடலாமா? தென்னிந்தியர்களைக் கொன்று போடுவோம், என்று சிவசேனை செய்கிற பயமுறுத்தல் ஏதோ பெண்களையும் குழந்தைகளையும் அச்சுறுத்துகிற காரியமே ஒழிய நடைமுறையில் நிகழாது என்று ஆறுதல் கூறிவிடலாம். என்றாலும், குறுகிய பற்றுக்கள் எப்படியெல்லாம் மக்கள் மனத்தை ஆட்டி வைக்கக் கூடும் என்பதை இது தெளிவுபடுத்துகிறது. இத்தகைய மனப் போக்குக்கு வலுத் தருகிற காரியங்களை இப்போது செய்வது அபாயகரமல்லவா? தேசம் ஒன்று என்ற உணர்வை ஏற்படுத்துவதற்கான காரியங்களில் ஈடுபட வேண்டிய சமயத்தில் ஐக்கிய சக்தியை அகற்றி நாட்டைப் பிளக்கப் பார்க்கிறார்கள்.

சூழல் இருண்டு வருவது ஸ்ரீ ஸேன் அவர்களுக்கே தெரியத்தான் செய்யும். எனினும், ஆங்கிலத்தைப் போல் ஹிந்தியைக் கொண்டு நாட்டில் ஐக்கியத்தை ஏற்படுத்தி, அதை சிதறாமல் காக்கலாம் என்று நினைக்கிறார் போலும்! அப்படி அவர் எண்ணினால் அது மாயப் பிரமைதான்!

ஆங்கிலம் தெரிந்தவர்களின் சதவிகிதம் பற்றிப் பிரதமர் உள்படப் பலரும் கூறிவிட்டனர். இது பொருந்தாத வாதம். பெருவாரியான சாமானியப் பொதுமக்கள் தத்தம் பிரதேசத்திலேயே இருந்து விடுகிறார்கள். படித்தவர்கள் இன்று ஆங்கிலத்தின் துணைகொண்டு நாடெங்கிலும் சென்று வாழ்கின்றனர். இவர்கள் யாவரும் ஆங்கிலத்தில் படித்தவர்கள் என்பதே நமக்கு முக்கியம். சதவிகிதக் கணக்கு எப்படியாயினும் அறிவாளிகள் முடக்கப்படுவது தேச முன்னேற்றத்துக்கு ஊறு விளைவிக்கும்.

பிரதமரை நம்பலாம் என்றார் தமிழக முதல்வர். நாமும் அவர் குறுகிய நலன்களை விட்டு மேலெழுந்து நிற்பார் என நம்பினோம். ஆயினும், அவர் நமது நம்பிக்கையைப் பூரணமாக நிறைவேற்றவில்லை. மும்மொழித் திட்டம் காலவரையின்றி நீடிக்க வேண்டும் என்றும், ஆங்கிலத்தின் அவசியத்தைத் தாம் உணர்ந்திருப்பதாகவும் அவர் சமீபத்தில் சென்னையில் கூறியிருப்பது நம்பிக்கைக் கதிர்களேயாகும். என்றாலும், தொடர்பு மொழியாகக் கண்ணுக்கெதிரே அரும் பணியாற்றும் ஆங்கிலத்தைப் பாராதவர்போல், பாரதத்துக்கு ஒரு தொடர்பு மொழி வேண்டும் என்கிறார் அவர். ஆங்காங்கு பிரதேச மொழிகளைக் கல்வி பீடத்தில் ஏற்றிவிட்டு, ஆங்கிலத்துக்குப் பதில் ஹிந்தியைத் தொடர்பு மொழியாக்க எண்ணுபவர்களுடன் சேர்ந்தே பிரதமரும் பேசி, நம் நம்பிக்கையைக் குலைத்து விட்டார். 'தொடர்பு மொழி' என்கிற சொற்றொடர் ஆட்சி மொழிப் பிரச்னையையும் போதனை மொழியில் ஒரு விதமாக இணைத்துக் குழப்பத்தை அதிகமாக்குகிறது.

மீண்டும் சொல்கிறோம்: போதனை என்பது ஏதோ ஒரு மொழியில்தான் நடக்க வேண்டும் என்ற இறுக்கமான விஷயமல்ல; அறிவை விஸ்தரிப்பதற்கான ஒரு வளைந்து கொடுக்கும் மார்க்கமே போதனை. கருவிகளுக்கு எண்ணெய் போட்டுப் பிடிப்பைத் தளர்த்துவது போல், தாய்மொழி என்ற எண்ணெய் போட்டு ஆங்கிலத்துக்குப் போதிய நெகிழ்ச்சி தர முடியும். என்றாலும், அகில இந்தியத் தொடர்பு என்ற ஒன்றுக்காக ஆங்கிலத்திலேயே பாடம் இருக்க வேண்டியதையும், அதன் விளக்கம் மட்டுமே அவசியமாகும் போது தாய்மொழியில் அமையலாம் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். பிரதேச மொழியின் பேரில் எழுப்புகிற கோஷத்தால், நமக்குத் தனித்து வாழுகிற ஓர் இனிய சபலம் உண்டாகும். ஆனால் இது தேச ஐக்கியத்துக்கு நாசம் விளைவிக்கும். பிரதேச மொழிகளுக்குக் கோயில் கட்டி அங்கு அகில இந்தியத் தொடர்பு மொழியான ஆங்கிலத்தைப் பலி கொடுக்காதிருப்போம். இது அரசியல் பிரச்னை அல்ல; அதைவிட ஜீவாதாரமான ஒரு பிரச்னை. இதைத் தீர்க்க காங்கிரஸார் காட்டுவதைவிட மிகச் சிறந்த விவேகமும் நேர்மையும் தேவை.

அரிசியில் வேண்டாம் அரசியல் விஷமம்!

1952ல் ராஜாஜி தமிழகத்தில் முதன் மந்திரி பதவி ஏற்று, தஞ்சை மாவட்டத்தில் கம்யூனிஸ்டுகளின் கொட்டத்தை அடக்கியதிலிருந்து, பதினைந்து ஆண்டுகளாகத் தலையெடுக்க முடியாமல் தவித்தனர் கம்யூனிஸ்டுகள். சென்ற தேர்தலின்போது தி. மு. க. அவர்களுக்குப் பரிவு காட்டியது. ''இது கூடா நட்பு, வேண்டாம்'' என்று வள்ளுவரைப் போல் ராஜாஜி எச்சரிக்கை செய்தும், கூட்டணியில் இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியையும் சேர்த்துக் கொண்டார்கள். இப்படித் தி. மு. க.வின் சிநேகத்தைப் பெற்ற கம்யூனிஸ்டுகள், தி. மு. க. ஆட்சிக்கே அவப்பெயர் உண்டாக்கும் வகையில் நெற்களஞ்சியமான தஞ்சை மாவட்டத்தில் கிளர்ச்சிகளைத் தூண்டிவிட்டுக் கொண்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. பருவமழை நன்கு பெய்திருப்பதோடு, ஏ. டி. டி. 27 என்ற அற்புத குறுவைப் பயிர் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதால், பயிர் செழித்து அடுத்த ஆண்டும் தமிழகத்தில் உணவுப் பஞ்சமே தோன்ற வழியில்லை என்று பெருமிதம் கொண்டுள்ளனர் தி. மு. க. ஆட்சியாளர்கள். இந்நிலையில், மழை பெய்தும் உரம் வைத்தும் அடையும் பயனை நிர்ப்பயனுக்கும் வகையில் நிலச்சுவான் — உழவுத் தொழிலாளர் தகராறு இப்போது தஞ்சையில் தோன்றியிருப்பதை ஆட்சியினர் கவலையுடனும், நடுநிலையுடனும் கவனிக்க வேண்டும்.

கேரளத்திலும், வங்கத்திலும் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் அதிக தானியம் ஒதுக்க வேண்டும் என்று போராடி வரும் கம்யூனிஸ்டுகள், எங்கே தமிழ் நாட்டில் அதிக தானியம் விளைந்துவிடப் போகிறதோ என்று விசனப்பட்டு, அதற்குக் குந்தகம் விளைவிக்கும் காரியங்களில் ஈடுபட்டிருப்பதாகத் தோன்றுகிறது. தஞ்சை வயலில் நெல்லுக்குப் பதில் கிளர்ச்சியை விளைவித்து வருபவர்கள் விஷயத்தில் தி. மு. க. அரசாங்கம் உறுதியுடன் நடந்து கொள்ள வேண்டும்.

உழவர்களுக்கு உண்மையாகவே உள்ள குறைகளைத் தீர்த்துக் கொள்ளச் சுமுகமான வழிகள் உண்டு. நடவு வேலையை நிறுத்துவது சொந்தக்காரர்களை மட்டும் பாதிக்காது. வேலை நிறுத்தம் செய்பவர்கள் உள்பட அனைவருமே உற்பத்திக் குறைவால் பாதிக்கப்படுவார்கள். தானிய லட்சுமியின் புனித சாம்ராஜ்யத்தில் வேலை நிறுத்தம், தீச் செயல்கள் முதலியன நிகழாதிருக்கட்டும். நடுக்கண்ட நியாயத்தை திரு அண்ணாதுரை வழங்குவார் என்ற நம்பிக்கையும் பலிதமாகட்டும்!

சேவையின் உருவம்

பல்லாண்டுகளாக ஏழை மாணவர்களுக்கு வித்யாதானமும் அன்னதானமும் செய்து வரும் மயிலை ராமகிருஷ்ண மாணவரில்லத்தின் பொருளாளர் ஸ்ரீ டி. எஸ். கிருஷ்ண ராவ் அவர்களின் மறைவு அவரை அறிந்த அனைவருக்கும் தீராத் துயரமாகவே இருக்கும்.

மக்கள் சேவையே மாதவன் சேவை என்ற ஸ்வாமி விவேகானந்தரின் கருத்துக்கேற்ப நிறுவப்பட்ட இவ்வில்லத்தில், அந்தக் குறிக்கோளின் ஓர் உருவகமாகவே பணியாற்றியவர் ஸ்ரீ கிருஷ்ண ராவ் அவர்கள். 1913ல் ஓர் ஏழை மாணவராக இல்லத்தில் சேர்ந்த அவர் பட்டதாரியாகி, மத்திய அர்பன் பாங்கில் உத்தியோகம் ஏற்ற பின்னும் மாணவரில்லத்தை மறந்துவிடவில்லை. தம் உடல் பொருள் ஆவியை அதன் பொருட்டே செலவிட்டார் என்பது வார்த்தைக்கு வார்த்தை உண்மை. இல்லத்தின் முதல் இரண்டு காரியதரிசிகளாயிருந்த ஸ்ரீ ராமஸ்வாமி ஐயங்காருக்கும், ஸ்ரீ ராமானுஜாச்சாரியாருக்கும் வலது கரமாக விளங்கினர் அவர். ஸ்ரீ ராமானுஜாச்சாரியார் நாடகக் குழு அமைத்து, இல்லத்தின் நிதியத்துக்காக நடத்திய நூற்றுக்கணக்கான நாடகங்களை லட்சோப லட்சம் மக்கள் கண்டு களித்த நாட்கள் உண்டு. அந்த நாடகங்களைக் காணாத ஒரே ஜீவன் ஸ்ரீ கிருஷ்ண ராவ் தான். ஏனெனில் நாடகம் நடந்து முடியும் மட்டும் டிக்கட் கட்டை வைத்துக் கொண்டு பொருள் சேர்ப்பதிலேயே ஈடுபட்டிருப்பாராம் அவர். 1948லிருந்து மறைவு வரை இல்லத்தின் பொருளாளராக இருந்தார். ஸ்ரீ ராமானுஜாச்சாரியாரின் மறைவுக்குப் பின் பத்தாண்டுகளாகப் பொருளாளராக மட்டுமின்றி இல்லத்தின் உயிர்நாடியாகவே இருந்தார். மாணவரில்லத்தைத் தவிர தமக்குத் தனியாக ஓர் இல்லம் உண்டு என்ற பிரக்ஞையே இன்றி, எந்தச் சிரமத்தையும் பொருட்படுத்தாது இவ்வில்லத்துக்குப் பொருள் சேர்க்க ஆடி ஓடி அலைந்து வந்தார். இல்லத்தின் ஆயிரக்கணக்கான பழைய மாணவரின் விலாசம் அவ்வளவையும் கரதலப் பாடமாக வைத்திருந்து, அவர்களுக்கு விடாமல் கடிதம் எழுதி நன்கொடை வாங்குவதில் அவருக்கு இருந்த நிபுணத்துவம் அதிசயமானது.



சேவையின் புனிதம் பற்றி நிறையப் பேசுகிறோம். ஆனால் ஆத்மார்த்தமாகச் சேவை செய்யும் புனிதர்களைத் துர்லபமாகத்தான் காண்கிறோம். அப்படிப்பட்ட ஓர் அபூர்வ மனிதரை ஸ்ரீ கிருஷ்ணராவின் மறைவில் இழந்துவிட்டோம்.

என்ன சேதி?

- வரவேற்கிறோம்
- வேலை நீக்கமா? பதவி உயர்வா?
- மகாலிங்கம் எழுப்பும் குரல்
- தேசியத் திருவிழா

சென்னை சட்டமன்ற மேல்சபைப் பட்டதாரிகள் தொகுதியில் திரு ஆர். எம். சேஷாத்ரி அவர்களும், ஆசிரியர்கள் தொகுதியில் திரு அறிவழகன் அவர்களும் வெற்றிபெற்றிருக்கிறார்கள். அவர்களை மனமார வாழ்த்தி வரவேற்கிறோம். சுதந்திரக் கட்சி அங்கத்தினர் டாக்டர் ஹண்டே, சென்னை சட்டசபைக்கு பார்க் டவுன் பகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டதால் காலியான ஸ்தானம் மாற்றுக் கட்சிக்குப் பறி போகாமல் சுதந்திரக் கட்சிக்கே நிலைத்தது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்.

ஸ்ரீ ஆர். எம். சேஷாத்திரி அவர்கள் நிர்வாக அநுபவமும் சட்டஞானமும் நிறைந்தவர். அத்தகையவர் மேல்சபையில் இருப்பது ஆட்சியாளர்களுக்கும் தமிழகத்துக்குமே பேருதவியாகும். மக்கள் உரிமையில் கண்ணும் கருத்துமாக இருந்து நல்ல பாதுகாப்பாளராகத் திகழுபவர் சட்டசபையாளராயிருப்பது மிகவும் பொருத்தமேயன்றோ?

உத்தரப் பிரதேச நிதிமந்திரி காரியாலயத்துக்கு, ரிஸர்வ் பாங்கு மானேஜர் ஒரு கடிதம் எழுதினார். ஆங்கிலத்தில் அல்லாமல் ஹிந்தியில் கடிதங்கள் எழுதினால் கவனிக்கப்பட மாட்டாது என்று பொருள்படும்படி எழுதினார். ஹிந்தியர், ஹிந்தி அல்லாதார் அனைவரும் அடங்கிய அகில இந்திய ஸ்தாபனமான ரிஸர்வ் பாங்கு அதிகாரி நியாயமானதைத்தான் சொன்னார். ஆனால் இவ்விஷயம் தில்லி மக்கள் சபையில் பெரும் கூப்பாட்டைக் கிளப்பி விட்டது. ஸேத் கோவிந்ததாஸ் அவர்கள், "அந்த மானேஜரை வேலையை விட்டுத் துரத்துங்கள்" என்றார். தி. மு. க. அங்கத்தினர்களும் பாரபட்சமற்ற மற்றவர்களும் இப்படித் துணிச்சலோடு நடந்து கொண்ட மானேஜரைப் பாராட்டிப் பதவி உயர்வு அளிக்க வேண்டும் என்றனர். ஒரு பிரதேசத்துக்கு மட்டும் உரிய மொழியை நாட்டுக்குப்பொதுவான நிறுவனத்தில் நிலைநாட்டப் பார்ப்பதை எதிர்த்த அதிகாரி வெகுமானத்துக்கு உரியவர் என்றே நாமும் கூறுகிறோம்.

"ஈ. வெ. ரா. பெரியார் போன்றவர்கள்தான் காங்கிரஸ் கட்சியைக் கெடுத்து விட்டார்கள். அன்று காங்கிரஸை ஆதரித்து விட்டு இன்று தி. மு. க.வுக்குத் துதி பாடும் ஈ. வெ. ரா.வுக்கு அன்றே காங்கிரஸில் இடம் கொடுக்க வேண்டாம் என்று கூறினேன். ஆனால் காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் இதைக் கேளாததால் இன்று தமிழகத்தில் காங்கிரஸ் இந்நிலைக்கு வந்துவிட்டது.... ஈ. வெ. ரா. பெரியார் தமக்கு வேண்டிய அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு வாங்கித் தரவும் அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளவுமே 1954 முதல் காங்கிரஸை ஆதரிப்பதாகக் கூறி, காங்கிரஸ் கட்சியை அடுத்துக் கெடுத்துவிட்டார்" என்று கோவை தொழிலதிபர் திரு என். மகாலிங்கம் குறைகூறியுள்ளார்.

திரு மகாலிங்கம் அவர்களின் குரல் இன்று தமிழகத்தின் ஆட்சிபீடத்தில் இருப்பவர்களுக்கு ஏதாகிலும் பயன்படுமா?

சுதந்திரத் திருநாளன்று சென்னையில் ஏற்பட்ட கலவரங்களைக் கேள்விப்பட்டுத் திடுக்கிடாதவர்கள் இல்லை. இதற்கெல்லாம் காரணம் அந்த நல்ல நாளைக் கடந்த பல ஆண்டுகளாகக் காங்கிரஸார் தங்களது கட்சிப் பிரசாரத்துக்கு உபயோகப்படுத்திக் கொண்டதேயாகும்.

சுதந்திர நாள், குடியரசு நாள், மகாத்மா காந்தி — பிறந்த நாள், அமரரான நாள் போன்ற நாட்களைக் கட்சிக் கண்ணோட்டத்தோடு கொண்டாடாமல், சர்வ கட்சிக் கூட்டம் நடத்தி பரஸ்பர அன்பைப் பரிமாறிக் கொண்டு தேசியத் திருவிழாவாகக் கொண்டாட வேண்டும். இதற்குத் தி. மு. க. ஆட்சி வழிகாட்டியாக விளங்க வேண்டும்!



காமகோடியின் கருணைமொழி

துக்கங்களுக்கெல்லாம் காரணம் பிறவிதான். இனி பிறக்கா விட்டால் கவலையே இல்லை. பணம் வேண்டுமென்றால் பணக்காரனிடம் போவதுபோல், பிறப்பு வேண்டாம் என்றால் பிறப்பில்லாதவனிடம்தான் போக வேண்டும். பிறப்பு வேண்டாம் என்பதுபோல் இறப்பும் கூடாது. இறந்தால் மறுபடி பிறவி எடுக்கத்தான் வேண்டும். இறவாமல் அமிருதமாகிவிட வேண்டும். அப்போது பிறப்புக் கிடையாது. பிறப்புக்குக் காரணம் காமன். இறப்புக்குக் காரணம் காலன். காமனையும் காலனையும் வென்றோமானால் அப்புறம் உற்பத்தியும் இல்லை, அழிவும் இல்லை. அதற்காகத்தான் காமனைக் கண்ணால் எரித்தவரும், காலனைக் காலால் உதைத்தவருமான ஈசுவரனை சரணம் அடைய வேண்டும்.

ராஜாஜியின் கருத்துக்கள்

சிவசேனையுடன் தமக்குச் சம்பந்தம் இல்லை என்றோ, சிவசேனைக்குத் தமது அனுதாபம் கிடையாது என்றோ, ஸ்ரீ சவான் அவர்கள் தெளிவு செய்து விட்டால் மட்டும் போதாது. அவர் சூழ்நிலையையே தெளிவு செய்தாக வேண்டும். இதற்காகத் திட்டவட்டமான, சக்தி வாய்ந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். சிவசேனையின் நோக்கமும் உதாரணமும் தொத்துவியாதி போல் பரவி வருகின்றன. இவை இந்திய ஐக்கியத்தின் அஸ்திவாரத்தையே நொறுக்கிவிடக் கூடும். உள்துறை இலாகா என்பது மேலும் உயர்ந்த இடத்துக்கு இட்டுச் செல்கிற ஏணியல்ல. அது உள்நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தும் பொறுப்பை ஏற்றுள்ளது. ஸ்ரீ சவான் அவர்கள் பிறந்த ராஜ்யத்தில் சக்தி பெற்றுவிட்ட சிவசேனையை வலுவான முறையில் எதிர்ப்பதற்குத் தமக்குச் சுதந்திரம் இல்லை என அவர் கருதினால், உள்துறை மந்திரி பதவிக்குரிய பொறுப்பை நிறைவேற்றக் கூடிய அரசியல் பலமும் சுதந்திரமும் படைத்த வேறு ஒருவருக்கு அவர் இடம் தந்துவிட வேண்டும். என் வார்த்தைகள் கடுமையாக இருக்கலாம். ஆனால் நிகழ்கால நிலவரத்துக்கு அவை தேவைப்படுகின்றன.

* * *

இருபத்தைந்தாண்டுகளாக முறிவின்றிச் சிறப்புப் பணியாற்றியுள்ள சென்னை சர்வகலாசாலை உபஅத்தியட்சகர் டாக்டர் லட்சுமணசுவாமி முதலியார் அவர்கள், ஆங்கிலத்தையே நீடிக்க வேண்டும் என்பதைப் பல சந்தர்ப்பங்களில் வெகு தெளிவான விதத்தில் விளக்கியிருக்கிறார். ஆந்திரா சர்வகலாசாலை உபஅத்தியட்சகரான பேராசிரியர் கே.ஆர். ஸ்ரீநிவாஸ அய்யங்கார் அவர்களும் இதே கருத்தை ஆதரித்திருக்கிறார். உயர்கல்வி நிலையங்கள் பலவற்றுக்குக் காரண புருஷரான ஸ்ரீ கே. எம். முன்ஷி அவர்களும் இதே அபிப்பிராயத்தைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

* * *

யானை பிடிப்பதற்குக் கண்ணி வைப்பது போல், பிரதேசமொழி என்ற கண்ணியைக் காட்டி நாட்டைப் படுகுழியில் தள்ள முயற்சி நடக்கிறது. இந்தத் தந்திரத்துக்கு இதுவரை தமிழகம் ஏமாந்துவிடவில்லை. தமிழகம் வந்துள்ள ஸ்ரீமதி இந்திராகாந்தி அவர்கள் தமது உண்மையான உள்ளுணர்ச்சிப்படி ஆங்கிலத்தையே ஆபீஸ்களிலும் கல்லூரிகளிலும் நீடிக்க வேண்டும் என்று கூறியிருப்பின் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்! ஒரு தீங்கும் செய்யாத ஆங்கிலத்தின் மீது பைத்தியக்காரத்தனமாகச் செய்யும் தாக்குதல்களுக்குத் தாம் உடந்தையாயிருக்க முடியாது என்று ஸ்ரீமதி இந்திரா கண்டிப்பாகக் கூறியிருந்தால் எவ்வளவு நன்றாய் இருந்திருக்கும்! நாடு சமாளிக்க வேண்டிய பயங்கரமான பொருளாதார நெருக்கடியிலேயே தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்று தமது சகாக்களையும் ஆலோசகர்களையும் அவர் கேட்டுக் கொள்ளக் கூடாதா? படுகிணற்றில் விழுந்துவிட்ட அரசாங்கத்தின் நன்னடத்தையைக் கரையேற்றுவதற்காக முயற்சி எடுக்கக்கூடிய அமைதிச் சூழ்நிலை ஏற்பட அவர் ஏதேனும் செய்யக் கூடாதா? தம்மைப் பற்றியுள்ள நல்ல அபிப்பிராயத்தைக் கொண்டு இந்தியா — பாகிஸ்தான் பூசலைக் குறைத்து, இருநாட்டு நன்மக்களின் நன்றியையும் சர்வ தேசங்களின் மதிப்பையும் பெறும் வகையில் ஸ்ரீமதி இந்திரா செயலாற்றக் கூடாதா? அவர் தேசத்துக்குச் செய்யக்கூடிய பணிகள் இவையே. ஆங்கிலச் செய்தி யந்திரங்களையும், டைப்ரைட்டர்களையும் உடைத்து—வாசக சாலைகளைக் கொளுத்தி — அதன் மூலம் இந்தியாவுக்கும் ஹிந்திக்கும் ஹிந்து மதத்துக்கும் பெருமை தேடித் தருவதாக நினைக்கும் வெறியர்களிடமே மொழி குறித்த சாகஸத் திட்டங்களை விட்டுவிடலாம்.

* * *

ஸ்ரீ மொரார்ஜி தேசாய் அவர்களின் ஜப்பான் விஜயம் பற்றி விமரிசிக்கும் 'ஹிந்து'ப் பத்திரிகை, ஜப்பானிடமிருந்து தாராளமாகக் கடன் பெறுவது மட்டுமின்றி, அதனுடன் சர்வதேச ரீதியில் அரசியல் கூட்டுறவு கொள்வதும் அவசியம் எனக் கூறுகிறது. உண்மைதான். எனினும், ஜப்பானிடமிருந்து ராஜரீக உதவி பெறுவது அவ்வளவு எளிதான விஷயமல்ல. ஜப்பான் மக்கள் மகத்தானவர்கள்; மிகவும் ஜாக்கிரதையானவர்களும்கூட. அமெரிக்காவுடன் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று இந்தியா புரிந்து கொண்டாலொழிய, சர்வதேச ராஜரீகத்தில் நாம் ஜப்பானிடமிருந்து எதுவும் பெற முடியாது. போர் எதுவும் நம் நாட்டை நாசம் செய்யாத போதிலும், போரில் நசித்து மீண்டும் தலைதூக்கிய பிற நாடுகளிடமிருந்து நாம் உணவுக்கும் பொருளாதாரத்துக்கும் வெட்கமின்றிப் பிச்சை கேட்கலாம். ஆனால் இதுபோல் ராஜரீக உறவைப் பிச்சை கேட்டுப் பெற முடியாது. நாம் கௌரவமான அந்தஸ்து பெற்றாலே அத்தகைய உறவுக்கு ஆசைப்படலாம்.

* * *


நுரையீரலில் புற்றுநோய் ஏற்பட்டோ, இதய வியாதி உண்டாகியோ மாண்டு போகாதிருக்க வேண்டுமென விரும்புகிறவர்கள் கவனிக்க :

வாஷிங்டன், ஆக. 21


நுரையீரல் புற்றுநோய், மூச்சுக் குழல் தொல்லைகள், இதய நோய் இவற்றுக்குப் புகை பிடிப்பது ஒரு முக்கியமான காரணம் என்று 1964-ல் அமெரிக்க சர்க்கார் அறிக்கை கண்ட முடிவுகள் உண்மையானவையே என்று அமெரிக்க சுகாதார இலாகாவின் புதிய ஆராய்ச்சிகளும் வலுப்படுத்தியுள்ளன. எழுபது விஞ்ஞானிகள் இரண்டாயிரம் ஆராய்ச்சி பத்திரிகைகளை அடிப்படையாகக் கொண்டு இம்முடிவுக்கு வந்துள்ளனர்.




ஆவி
பறக்கும்
சூடு
வேண்டு
மென்பார்
சிலர்
ஆவி பறக்கும் சூடுடைய பானமோ,
ஐஸ் போல ஜில்லென்றிருக்கும்
குளிர்பானமோ எது வேண்டு
மானாலும், நம்பகமான எவரெஸ்ட்
ஃப்ளாஸ்க் தனியே, சூடாகவோ,
ஜில்லென்றோ அருந்துவீர்
அதிலிருந்தே.
சிலருக்குப் பிடிக்கும் சூடாக,
சிலர் வேண்டுமென்பார் ஜில்லென்றே.
அனைவரும் நம்புவது எவரெஸ்ட் ஃப்ளாஸ்க்,
எல்லோருக்கும் ஏற்றது அது ஒன்றே.
EVEREST
வாக்குவம்
ஃப்ளாஸ்குகள்
விக்டரி ஃப்ளாஸ்க் கோ. ப்ரை. லிட்.
பம்பாய் ● கல்கத்தா ● டெல்லி
மதராஸ் ● ஹைதராபாத்



பார்கோ
கேஸ் மான்டில்கள்
PARGO
சிறந்த ஒளிக்கும்
நீடித்த சேவைக்கும்
தயாரிப்பவர்கள் :
பார்கோ மாண்டில் ப்ராடக்ட்ஸ்
38/40, சர்வோதய பவன்
மார்வ் ரோடு, பம்பாய் - 64 N.B.









செய்திப் படங்கள்


1. பேராசிரியர் அ. சீநிவாசராகவன் அவர்களுக்குத் தூத்துக்குடியில் மதுரை பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் தலைமையில் மணிவிழா சிறப்பாக நடந்தது. அ. சீ. ரா வின் படத்தைத் துணைவேந்தர் திறந்து வைக்கிறார்.

2. பேராசிரியருக்குப் பாப்பரசர் சார்பில் பொற்பதக்கம் வழங்கப்படுகிறது.

3. அரக்கோணத்தில் நிறுவப்பட்டுள்ள சதர்ன் ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தொழிற்சாலைக்குத் தமிழக முதன்மந்திரி திரு அண்ணாதுரை விஜயம் செய்தார்.

4. தருமையாதீனக் கல்லூரி மாணவர் கழகத்தைத் தொடங்கி வைத்த திரு மீ. ப. சோமசுந்தரம் (சோமு) அவர்களுக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலை குருமகா சந்நிதானம் பொன்னாடை போர்த்தினார்.

5. கால்கேட் பேபி பவுடர் புகைப்படப் போட்டிக்கு வந்துள்ள படங்களை, கால்கேட்-பாமாலிவ் ஸ்தாபன அதிகாரிகள் மகாராஷ்டிர ராஜ்யப் பெண்மணிகள் கௌன்சிலைச் சேர்ந்த நீதிபதிகளிடம் வழங்குகிறார்கள்.



வடிகாலுக்கு ஒரு வழி



ஆ. ஞா. ஸே. குஞ்சிதபாதம்

தஞ்சை மாவட்டத்தில் பயிர் நிலங்களுக்கு வடிகாலமைக்கும் பிரச்னை நீண்ட நாட்களாகவே நிபுணர்களையும் திகைக்க வைத்து வந்திருக்கிறது. இதோ ஓர் எளிய சிக்கனமான முறையை விளக்குகிறார் கட்டுரை ஆசிரியர்.



“பாலையை எதிர்த்த பாவை”* என்னும் சுவாரசியமான புத்தகத்தில் வென்டி காம்ப்பெல் பர்டி என்னும் ஆக்ஸ்போர்ட் ஆங்கில ஆசிரியை ஆப்பிரிக்காவுக்குச் சென்று ஆங்கு மொராக்கோவிலும், டியூனிஷியாவிலும், அல்ஜீரியாவிலும் ஸஹாரா பாலைவனங்களின் ஓரங்களில் யூகலிப்டஸ் மரங்களை வளர்த்து, அவற்றின் நிழலில் உணவு தானியங்களைப் பயிரிடுவதில் வெற்றி யடைந்ததை இன்பச் சுவை ததும்பும் எழில் காப்பியம் போல் எழுதியிருக்கிறார். உணவு விவசாய ஸ்தாபனம் மூலம் ஐக்கிய நாடுகள் சபையின் கவனத்தை வெகுவாகக் கவர்ந்துள்ளது இந்தத் திறமையான சாதனை. மனித முயற்சியினால் ஒரு காலத்தில் மாபெரும் ஸஹாரா பாலைவனம் பல பசுஞ் சோலைகளாகத் திகழ்ந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை. நம்முடைய தமிழ் நாட்டிலும் திருச்செந்தூரில் மணல் பூமியைப் பயிரிடக் கூடியதாகச் செப்பனிடும் வேலை இப்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ளது. காலஞ்சென்ற டாக்டர் ராஜன் திருசங்கோம்பலை என்னும் திவ்விய ஸ்தலத்தில் கரம்பு நிலத்தைச் சீர்திருத்தித் தான்யலக்ஷ்மியின் அருள் சுரக்கும் விளை நிலமாக்கிய விந்தையை அழகான தமிழ் நடையில் எழுதியிருக்கிறார். சோர்வு மனப்பான்மையை அகற்றி எந்த விவசாயிக்கும் உற்சாகமளிக்க இந்த உதாரணங்களே போதுமானவையல்லவா?

சூரியனிலிருந்து அனல் பிழம்பான வாயுக் கோளமாகப் பிரிந்து மேடும் பள்ளமுமான மேற்பரப்புடன் குளிர்ந்த பூமியில் பாறைகள் நாளாவட்டத்தில் காற்றினாலும் மழையினாலும் கதிரவனின் வெப்பத்தினாலும் தூளாகி மண்ணாகிப் பரவியிருக்கின்றன. பிரபஞ்ச சிருஷ்டியில் ஜீவோற்பத்தி ஏற்பட்டுத் தாவரங்களும், பிராணி வர்க்கங்களும் புனரபி ஜனனம், புனரபி மரணம் என்ற கிரமத்தில் தோன்றி மடிந்து, அவற்றின் சேஷாம்சங்களும் மண்ணுடன் உறவாடிக் கலந்திருக்கின்றன. விவசாயம் சிறந்த பலனைத் தர வேண்டுமானால் முதலில் க்ஷேத்திரத்தை நன்கு ஆராய்ந்து மண்ணை வளமுள்ளதாகச் செய்ய வேண்டும். மண் வளம் பற்றிய அறிவை விவசாய விஞ்ஞானத்தின் ஓர் உட்பிரிவான சாஸ்திரமாக (Pedology) முதன் முதலில் சாங்கோபாங்கமாக 1878ல் எழுதியவர் வாஸிலி வாஸிலீவிட்ச் டாக்குச்சேவ் என்ற ரஷ்ய விஞ்ஞானியாவார்.

நன்றாக விளைகிற நிலத்திலிருந்து ஒரு கன அடி மண்ணை எடுத்துப் பரிசோதனை செய்து பார்த்தால் ஒரு கிலோகிராம் ஜீவ அங்கப் பொருள் இருக்கும். இந்தப் பொருள்களில் ஒரு பாதி காலதர்மத்தினால் உயிரிழந்தவையாயிருக்கும்; இன்னொரு பாதி உயிர்த் துடிப்புள்ளவை. உயிருள்ளவை தாவர வேர்கள், மண் புழுக்கள், பாக்டீரியா, பூசணம், பாசி, ஆக்டினோமைஸீட்ஸ், நிமடோட் முதலியன. வாய் கொப்பளிக்க உபயோகப் படுகிற ஹைட்ரஜன் பெராக்ஸைட், பொட்டாஷியம் பர்மாங்கனேட் இவற்றின் மூலம் அங்கப் பொருள்களை அகற்றிவிட்டால் எஞ்சியுள்ளவை மணல், வண்டல், களி இவை மூன்றும்.

மணல், வண்டல், களி இவற்றின் கலவையைப் பொறுத்து இலேசான மண் என்றும்,

* 'Woman Against the Desert'

கனமான மண் என்றும் இனம் பிரிக்கலாம்: மிருதுத் தன்மையுள்ள மண் என்றும், கடின மண் என்றும் தரம் வகுக்கலாம். மண்வள நூல்களில் பல பக்கங்கள் மண்ணின் பௌதிகத் தன்மை விவரிக்கப் பட்டிருக்கிறது. சர்வதேசமண் விஞ்ஞானசங்கம் 2 முதல் 0.2 மில்லி மீட்டர் வரையில் குறுக்களவு உடையவை களைப் பெருமணல் எனவும் 0.2 முதல் 0.02 மி. மீட்டர் வரையில் குறுக்களவு உடையவை களைப் பொடி மணல் எனவும் தர நிர்ணயம் செய்திருக்கிறது. வண்டலின் தனித்துகள்களின் குறுக்களவும் 0.02 முதல் .002 மி. மீ. வரையில் இருக்கும். 0.001 மி. மீ. என்பது ஒரு மைக்ரான். இனி பிரிக்க முடியாத ஒரு தனித் துகள் களியின் குறுக்கு வெட்டு இரண்டு மைக்ரான்களுக்கும் குறைந்த அளவு. சிறந்த பூதக்கண்ணாடியின் மூலம்தான் பார்க்க முடியும் இத்தப் பரிமாணங்களை.

உலக அரங்கில் மதச் சார்பற்றதும், பிற நாட்டு விவகாரங்களில் தலையிடாக் கொள்கையுடைய நம் பாரத தேசம் போலத்தான், இந்த மணலும், வண்டலும் விவசாயத்தில் சும்மா இருத்தலே சுகம் என்றிருக்கின்றன. செயலாற்றுவது முழுதும் களிமண்தான்.

பூமியில் நைட்ரிக் அமிலமும், கந்தக அமிலமும் எரு விடுவதால் கிடைக்கின்றன. தாவரங்களும் மற்ற ஜீவப் பொருள்களும் அழுகுவதனால் கரியமிலம் உண்டாகிறது. வானிலிருந்து பொழியும் மழையும் காற்றிலிருக்கும் கார்பன் டை ஆக்ஸைடைக் கரைத்துக்கொண்டு வந்து கரியமிலமாகச் சேர்ப்பிக்கிறது. அஸெடிக் ஆஸிட் அழுகும் அங்ககப் பொருள்களிலிருந்தும், ஆக்ஸாலிக் ஆஸிட் நுண்ணுயிர்களாலும், ஸிட்ரிக் ஆஸிட் பாசிகளிலிருந்தும் ஏற்பட்டு விடுகின்றன. இன்னும் சொல்ப சொல்ப அளவுகளில் மாலிக், ப்ரோபியோனிக், ப்யூடைரிக், பென்ஸாயிக், கார்பாலிக் அமிலங்கள் ஆவிர்பவிக்கின்றன. இவை எல்லாம் மண்ணின் பி. எச். தரத்தை எந்த அளவில் இறக்கிக் கொண்டு வந்துள்ளன என்பதைப் பரிசோதித்துப் பார்க்க வேண்டும். நிலம் அமிலத் தன்மை அடைந்து விட்டால் களி பாஸ்பேட்டைக் கிரகித்து வைத்துக் கொண்டு விடுகிறது. அந்த நிலையில் பாஸ்பேட் தண்ணீரில் கரைவதில்லை. களியில் உள்ள அலுமினியமும், இரும்பும், பாஸ்பேட்டுடன் இரண்டற இணைந்து ரசாயனக் கலவையாகிவிடுகின்றன.

தண்ணீர் பாய்ந்து காய்ந்தால் அந்த நிலம் நன்கு விளைவதில்லை என்பது நன்செய் சாகுபடியாளரின் அனுபவம். ஈரத்தில் பொட்டாஷியம் களியுடன் கலந்து இக்கியமாகிவிடுகிறது. மறுபடியும் அமிலத் தன்மையுள்ள நீரில் ஊறினாலும் இலேசில் பிரிவதில்லை. அந்த அளவுக்கு அந்தப் பொட்டாஷியம் நஷ்டம் தானே? வாசலில் கறிகாய்க்காரி வந்திருக்கும்போது பர்ஸில் பணமில்லாவிட்டாலும் ஒன்றுதான், நோட்டுக்குச் சில்லறை கிடைக்காவிட்டாலும் ஒன்றுதான். நோட்டுக்குச் சில்லறை மாற்றுகிறவரை கறிகாய்க்காரி காத்திருப்பாளா? நைட்ரஜனையும் கூட இப்படித் தண்ணீர் பாய்ந்து காய்ந்தால் எலிப் பொறியில் சிக்கிய எலி மாதிரி களிமண் பிடித்து வைத்துக் கொள்கிறது. கற்பனை இல்லை. விஞ்ஞானிகள் சொல்கிறார்கள்.

இப்போது நிலத்தின் அமிலத் தன்மையை மாற்ற நிலத்தில் சுண்ணாம்பு சேர்க்கிற வழக்கம் தமிழகத்தில் பரவலாக இல்லை. சுண்ணாம்பிடுவதனால் அமில நிலையில் செயலிழந்திருக்கும் பாக்டீரியா சுறுசுறுப்படைகிறது. அலுமினியம், மாங்கனீஸ், இரும்பு ஆகியவை தண்ணீரில் கரையாதவை யாகின்றன. அவற்றினால் ஏற்படும் கெடுதல் குறைந்துவிடுகிறது. சுண்ணாம்பு மண்ணில் தண்ணீரை அதிகம் கவரச் செய்கிறது. தண்ணீரைத் தேக்கிக் கொள்ளும் சக்தியை அதிகரிக்கிறது. பயிர்கள் இடமாவதனால் மண் அரிப்பும் குறைகிறது. தாய்வானில் (ஃபார்மோஸா) மூன்று டன் வரையில் சுண்ணாம்பு ஒரு ஹெக்டேருக்குப் போட்டதனால் 95 சதவிகிதம் விளைச்சல் அதிகரித்திருக்கிறது. இலங்கையிலும் சுண்ணாம்பு பலன் அளித்திருக்கிறது. மைசூர், ஹிமோகாவிலும் இந்திய விவசாயப் பரிசோதனைக் குழு (ஐ. சி. ஏ. ஆர்.) சுண்ணாம்பிட்டு விளைவைப் பெருக்கி யிருக்கிறது; ஒரிஸ்ஸா, கட்டாக்கிலுள்ள அரிசி ஆராய்ச்சிக் கழகத்திலும் ஹெக்டேருக்கு ஆயிரம் கிலோகிராம் சுண்ணாம்பு, 20 கிலோ ஸூபர் பாஸ்பேட், 0.28 கிலோ ஸோடியம் மாலிப்டேனம் இவற்றைப் போடுவதனால் பிரமாதமான விளைச்சலை உண்டாக்க முடியும் என்று நிரூபணம் செய்யப்பட்டது.

கி. மு. 500க்கு முன்பே ரோம சாம்ராஜ்யத்தில் சுண்ணாம்பை இட்டு நிலத்தை வளப்படுத்தும் முறை இருந்தது. இங்கிலாந்தின் ராதம்ஸ்டெட் ஆராய்ச்சி நிலையம்தான்



மகாதேவ கோவிந்தரானடே ஒரு முறை பம்பாயில் வாழ்ந்த பெரிய பாதிரியார் ஒருவரைச் சந்திக்கச் சென்றார்.

பாதிரியாரின் மேஜை மீது பற்பல மத நூல்கள் கோபுரம் போலக் குவிந்திருந்தன. எல்லாவற்றுக்கும் மேலாக 'பைபிள்' வைக்கப்பட்டிருந்தது.

கிறிஸ்தவ மதத்தின் பெருமையைக் கூறிக்கொண்டே வந்த பாதிரியார், பேச்சுவாக்கில், "புவியில் உள்ள அறநூல்களில் 'பைபிள்'தான் எல்லாவற்றிலும் உயர்ந்தது; சிறந்தது. பாருங்கள், இங்கேகூடப் 'பைபிள்'தான் எல்லா நூல்களுக்கும் மேலாக இருக்கிறது" என்றார்.

ரானடே அந்தப் புஸ்தகக் கோபுரத்தை அடியிலிருந்து உச்சி வரை ஒரு முறை பார்த்தார். பைபிள் எல்லாவற்றுக்கும் மேலாக இருப்பதையும் கண்டார்; எல்லாவற்றுக்கும் கீழாக் கீதை வைக்கப்பட்டிருந்ததையும் அவர் கண்கள் காணத் தவறவில்லை. சட்டென்று ரானடே கூறினார்: "மெய்தான்! ஆனால் ஒரு விஷயத்தை மறந்து பேசுகிறீர்கள். எல்லா அறநூல்களுக்கும் ஆதாரம் கீதைதான். அதன் அஸ்திவாரத்தில்தான் உங்களுடைய இந்தப் புத்தகக் கோபுரமே நிற்கிறது."

பாதிரியாரின் கண்கள் பகவத்கீதையில் படிந்தன.

விஞ்ஞான ரீதியில் சுண்ணாம்பிடும் அவசி யத்தை முதன் முதலில் வெளியிட்டது. பன்னிரண்டாவது நூற்றாண்டில் ஜெர்மன் ரைன் பிரதேசங்களிலும் பதினெட்டாவது நூற்றாண்டில் ஸைலீஷியா, ஸாக்ஸனி, ஹோல்ஸ்டீன் நாடுகளிலும் சுண்ணாம்பு பற்றி விவசாயிகள் நன்கு அறிந்திருந்தனர் என்ப தற்குச் சான்றுகள் இருக்கின்றன. நம் நாட்டு விவசாயிகளுக்கா சுண்ணாம்பு பற்றித் தெரிந் திராது? சுண்ணாம்பில் இருக்கிறது சூட்சுமம் என்னும் விவசாயப் பழமொழி இன்பத் தேன் ஒத்த செந்தமிழில் இன்னும் வழங்கவில்லையா?

பயிருக்குத் தண்ணீர் தேவை என்பதை யும் ஏட்டில் எழுதிப் படிக்க வேண்டுமா, என்ன? மண் இல்லாமல் தண்ணீரில் மட்டும் உரங்களைக் கரைத்துச் செடிகளை வளர்த்தலைச் சாத்தியமாக்கி யிருக்கிறது விஞ்ஞானம். ஆனால் தண்ணீரின் தேவையின்றி மண் ணிலே செடியை வளர்க்க முடியும் என்பது நினைத்துப் பார்க்கவும் இயலாத காரியம். மண்ணியல் நூல்களில் நீர்ப்பாசனம் பற்றி விவரமாக எழுதியிருக்கிறார்கள். நீர்ப்பாச னம் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கி யம் நிலத்தில் அதிகமாக இருக்கும் நீரை வடிப்பதும். தண்ணீர் அதிகமாகத் தேங்கிப் பயிர்கள் மூழ்கினால் பயிரின் ஒளிச் சேர்க்கை (Photo Synthesis) க்கு வேண்டிய வெளிச்சமும் காற்றும் தடுக்கப்படுகின்றன. நுண்ணுயிர்கள் பூமியில் இருக்கும் தண்ணீரிலுள்ள பிராண வாயுவைத் திறமையுடன் பிரித்துக்கொண்டு நைட்ரஜன் அயனியை விடுவித்து அமி லத் தன்மையைக் கூட்டிவிடும்.

தண்ணீரை வடிகட்டத் தரையின் மேற் பரப்பில் நம் நாட்டில் வடிகால்கள் இருக் கின்றன. அமெரிக்கப் பண்ணைகளில் நிலத்தின் அடியில் வரிசை வரிசையாக வடிகுழாய்கள் அமைத்து நீரை வெளியேற்றுகின்றனர். டிராக்டர்கள், கம்பைன்கள் ஆகிய இயந்திரச் சாதனங்கள் தடைப்படாமல் ஓடுவதற்கு மட்டுமின்றி, மண்ணிலும் ஈரம் சீரான அளவில் இருப்பதற்கு இந்த ஏற்பாடு செய் திருக்கிறார்கள். அமுதம் போன்ற தண்ணீரும் அளவுக்கு மிஞ்சினால் நஞ்சுதானே?


'சென்ற ஆண்டு டிசம்பரில் தஞ்சாவூரில் நடந்த அறிவு வார விழா நிகழ்ச்சியின்போது கோயமுத்தூர் அரசினர் விவசாயக் கல்லூரி முதல்வர் பி. டபிள்யூ. எக்ஸ். பொன்னையா அவர்கள் உரை நிகழ்த்தினார். தஞ்சாவூர் மாவட்டம் நெற்களஞ்சியம் என்று சொல் கிறார்களே, இங்கு ஒரு விவசாயியாவது இருவழி பண்டிட் ஆகியிருக்கிறாரா என்று ஒரு கேள்வி கேட்டார். கூடியிருந்த நிலச்சுவான் தார் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு மேலே டாக்டர் அவர்கள் என்ன சொல்லப் போகிறாரோ என்று கவனத்துடன் கேட்கத் தயாராக இருந்தனர். "பாவம், உங்களைப் பற்றி ஒன்றும் குறை சொல்வதற் கில்லை. இயற்கையின் விபரீத விளையாட் டுக்கு நீங்கள் என்ன செய்ய முடியும்?" என்று அவர் அனுதாபப் பட்டார். தஞ்சாவூர் மாவட்டத்தில் சமுத்திர மட்டத்துக்கு மேல் அதிக உயரமில்லாத பூமியிலிருந்து மழைக் காலத்தில் தண்ணீரை வடிய வைப்பது ஒரு நீண்ட காலப் பிரச்னை.

டெல்டாப் பிரதேசத்தில் ஓர் ஆறு விட்டு ஓர் ஆறு வடிகாலுக்கென்றே ஒதுக்கி விடுவது கொள்ளிடக் கரையிலிருந்து வேதாரண்யம் வரையில் சமுத்திரத்தின் ஓரமாக (ஹாலந்து தேசத்து 'டைக்'போல) சுவர் கட்டி ராக்ஷஸப் பம்புகளால் தண்ணீரைக் கடலுக்கு இறைத்து விடுவது என்பன போன்ற பலப் பல யோச னைகள் இதுவரையில் கூறப்பட்டிருந்தன. ஆனால் பல சிக்கல்களும், ஏராளமான செலவு களும் உள்ள மற்ற யோசனைகளைவிட டாக் டர் பொன்னையா அவர்கள் சொன்ன ஆலோ சனையே மிகவும் சுலபமாக நிறைவேற்றக் கூடியதாக இருக்கும். செங்குத்தான வடி முறையை (Vertical Drawings) வெள்ளம் பாதிக்கும் இடங்களில் எல்லாம் பிரயோகப் படுத்த வேண்டும் என்று சொன்னார். ஒவ் வொரு வயலிலும் குழாய்களைக் கீழேயுள்ள நீர் மட்டம் வரை இறக்கித் தண்ணீரை வடிய விடலாம் என்று டாக்டர் பொன்னையா அவர்கள் சொன்னது பொன்னான கருத்து என்றுதான் வரவேற்கப்பட வேண்டும். கிராம மண்பாண்டத் தொழிலாளர்கள் செய்யக் கூடிய சுட்ட களிமண் குழாய்களே போதும்; அதிகச் செலவு இல்லாத முறை இது.

ஹாரி பர்கஸ் ரோ, க்வின்ஸி ஸொட் ஏர்ஸ் இருவரும் எழுதிய 'விவசாய வடிகால் பொறியியல்' (Engineering for Agricultural Drainage) என்ற நூலில் பூமியில் துவார மிட்டுக் குழாய்களைப் பூமியின் தண்ணீர் மட்டம் வரை செலுத்தும் வடிகால் முறை விவரிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா மின்னி ஸோட்டாவில் துளைப்பணமிட்டுக் குழாய்கள் மூலம் தண்ணீரை வடிய வைத்திருக்கிறார்கள். எந்தச் செலவும் இல்லாமல் இந்தக் குழாய்கள் அங்கு பயன் அளிக்கின்றன. வடக்கு அயோ வாவிலும் இம்மாதிரிக் குழாய் வடி சாத னங்கள் ஏராளம்; முப்பது நாற்பது ஆண்டு களுக்கு மேலாக இவை எந்தவிதமான இடை யூறுமின்றி நல்லபடியாக இருக்கின்றன.

"மழைக்காலத்தில் தண்ணீர் மட்டம் பூமி யில் உயரக் கூடும். ஆகையால் இந்தக் குழாய்கள் தண்ணீரை வடிக்கமாட்டா" என்று ஆட்சேபம் சொல்பவர்களும் இருப் பார்கள். எதையும் இலேசாக ஆட்சேபிக்கக் கூடியவர்கள் எந்தத் துறையில்தான் இல்லை? கோடையில் நல்ல ஊற்று இல்லாத கிணற் றில்தான் மழையிலும் நீர்மட்டம் அதிகம் உயரும். நல்ல கிணறு எதிலாவது தரை மட் டத்துக்குத் தண்ணீர் மழைக்காலத்திலும் வருவது சாத்தியமில்லை. ஆகவே செங்குத் தான வடிகுழாய்கள் மூலம் மேலேயுள்ள தண்ணீர் தன் பாரத்தினால், பூஆகர்ஷணத் தினால் பூமியில் இறங்கித்தான் ஆகவேண்டும். அமெரிக்காவில் செயல்படும் முறை நம் நாட்டிலும் பலனளித்துத்தானேயாக வேண் டும்? அனுபவத்தில் நாம் பார்க்க வேண்டும்.

பரீட்சார்த்தமாக இந்த முறை வெற்றி யடைந்துவிட்டால் பல விவசாயிகளும் இந்தச் சுலபமான வடிகால்களைத் தத்தம் நிலங்களில் அதிகச் செலவின்றி அமைத்துக் கொண்டு விட முடியும். தஞ்சாவூர் மாவட்டம் மறுபடி யும் நெற்களஞ்சியம் என்ற பெருமைக்கு உண்மையாகவே அருகதையுள்ளதாகிவிடும்.



பாரத் ஹெவி எலக்டிரிக்கல்ஸ், ரீஜினல் மானேஜர் திரு G. A. விசுவநாதன் அவர்கள் குமாரர் திரு G. V. கல்யாண் B. E., பொறி இயல் துறையில் விசேஷப் பயிற்சி பெற மேற்கு ஜெர்மனிக்குச் சென்ற மாதம் விமான மூலம் புறப்பட்டார்.

அத்தியாயம் 5

குதிரைப் பந்தய மைதானத்திலிருந்து ரவி வீட்டுக்குத் திரும்புவதற்கு முன்னால் முத்து வந்து அவனுக்காகக் காத்துக் கொண்டிருந்தான்.

ரவி வந்ததும் முத்து, ''ரவி! என்னடா இது. என்னை ராஜரத்தினம் வீட்டுக்குள்ளே அனுப்பி வைத்துவிட்டு நீ எங்கோ போயிட்டியே!'' என்று அங்கலாய்த்தான்.

''நான் உன்னை விட்டுவிட்டுப்போனது எவ்வளவு நல்லதாப் போச்சு தெரியுமா?'' என்று ஆரம்பித்த ரவி தனது குதிரைப் பந்தய மைதானத்தில் அடைந்த அனுபவத்தை விஸ்தாரமாகச் சொல்லி முடித்தான். ''எல்லாம் சனீசுவரன் கிருபையாலேதாண்டா நடந்தது. அந்தப் பேர்லே ஒரு குதிரை ஓடினதுமில்லாமல் ஜெயிக்கவும் ஜெயிச்சிடுச்சு!'' என்றான் ரவி.

''என்னடா இது? சனீசுவரன் பேரிலே குதிரையா?''

''கரெக்டாத்தான் பேர் வெச்சிருக்காங்க. ரேஸுக்குப் போறவங்களை என்னிக்காவது ஒரு நாள் சனீசுவரன் பிடிக்காமல் விடுமா? அதைக்

யாரோ இவர் யாரோ?



'சோ'

காட்டறதுக்குத்தான் அந்தப் பேரிலே ஒரு குதிரையையே ஓட்டறாங்க!''

''ரவி! இந்த ரேஸுக்குப் போகிற பழக்கம் என்னடா பழக்கம்? குதிரை நல்லா ஓடும்னு நம்பிப் பணம் கட்டறாங்களே, இது முட்டாள்தனம் இல்லையா?''

''கரெக்ட். அதைவிட மனுஷனை நம்பிப் பணம் கட்டலாம்.''

''என்னடா சொல்றே நீ?''

''ஆமாண்டா! எந்த மனுஷனையாவது நம்பிப் பணம் குடுத்துப் பாரு. உடனே அவன் எப்படி ஓடறான் தெரியுமா? ஒரே நிமிஷத்திலே இருக்கிற இடம் தெரியாமல் ஓடிப்போயிடுவான்!''

''குதிரைப் பந்தயத்தையே ஒழித்துக்கட்டப் போறதாப் பேசிக்கிட்டாங்களே — எப்படா அந்தக் கெட்ட பழக்கத்தைத் தடை செய்யப் போறாங்க?''

''போடா, முட்டாள்! தடை செஞ்சிருக்கிற கெட்ட பழக்கத்தையே திருப்பிக் கொண்டு வந்துடணும்னு கூச்சல் போடற காலம் இது!''

பேச்சு திசை மாறிப் போய்க்கொண்டிருப்பதைத் தடுத்து, முத்து, ''சரி... சரி... ஆக மொத்தம் உங்க குடும்ப

வைரி சின்னத்துரையை நல்லாச் சிநேகிதம் பிடிச்சுக்கிட்டே!'' என்று பேச்சைத் திருப்பினான்.

''இனிமேல் நான் சொல்கிறபடியெல்லாம் அவர் கேட்பார்டா. அவருக்கு என்மேல் அவ்வளவு நம்பிக்கை வந்திருக்க!''

''எப்படித் தெரியும்?''

''நம்பிக்கை வராமல் இருந்தால் விட்டுக்கு வரச் சொல்லிக் கூப்பிடுவாரா?''

''எனக்கு என்னமோ அப்படித் தோணலை.''

''பின்னே ஏண்டா அவர் என்னை விட்டுக்கு வரச் சொல்லிக் கூப்பிட்டாரு?''

''அங்கே குதிரைப் பந்தய மைதானத்திலே உன்னோட பேசிக்கிட்டு நிக்கிறதை நாலு பேர் பார்த்தாங்கன்னு அவமானம்னு உன்னை வீட்டுக்குக் கூப்பிட்டிருப்பாரு.''

''மெட்ராஸுக்கு வந்ததுக்கு லாபம் நல்லாப் பேசக் கத்துக்கிட்டே.''

''மெட்ராஸுக்கு வந்து வேறு என்ன கத்துக்க முடியும்? எங்கே பார்த்தாலும் பேச்சுத்தான். மேடை மேடையாகப் போட்டு அரசியல்வாதிங்க பேசிக்கிட்டே இருக்கிறாங்க!''

''ரொம்ப வாஸ்தவந்தாண்டா நீ சொல்றது. இந்த அரசியல்வாதிங்களெல்லாம் அடிக்கடி உண்ணாவிரதம் இருக்காங்களே, அதுக்குப் பதிலா, மௌன விரதம் இருந்தாங்கன்னு நம்ம நாடு எவ்வளவோ உருப்படும்.''

''அது எப்படிடா முடியும்? நம்ம அரசியல் நிர்ணயச்



சட்டத்திலேயே பேச்சுரிமை கொடுத்திருக்காங்களே!''

''அட போடா! அதை மாத்தறது. இப்பத்தான் அரசியல் நிர்ணயச் சட்டத்தை சினிமாக் கதை மாதிரி இஷ்டப்படி மாத்தி மாத்தி எழுதிடறாங்களே!''

''ஏண்டா டேய், ரவி! இந்த ராஜாக்களுக்கெல்லாம் பணம்

குடுத்துக்கிட்டிருந்தாங்களே—'ப்ரீவி பர்ஸ்' அதை நிறுத்தி விடப் போறாங்களாமே!''

''உனக்கென்னடா? நீ என்ன ராஜாவா?''

''அதுக்கில்லே. முதல்ல ராஜ்யத்தை யெல்லாம் நம்ம சேர்த்துக்கிறபோது இந்தப் பணம் குடுக்கிறதா ஒப்புக் கிட்டிருக்காங்களே, இப்ப மாத்தலாமா?''

''அவனோட பேசினியா?''


''நான்தான் அவனைப் பார்க்கவே இல்லையே!''

''அதை மறந்துட்டேன். ஏன்டா அவனைப் பார்க்காமல் வந்துட்டே?''

''நான் என்னடா செய்யறது? போன உடனே என் பெட்டி இருந்தது. எனக்குப் பயமாகவும் இருந்தது. அவள் பெட்டியை வெச்சுப்பிட்டு என் பெட்டியை எடுத்துக் கொண்டு வந்துட்டேன்.''

''ஏதாவது அறிவு இருக்கிறதா உனக்கு? அவனைப் பார்க்காமலே வந்துட்டியேடா. இனிமேல் இந்த மாதிரி சந்தர்ப்பம் எப்படிடா கிடைக்கும்?''

''அடுத்த தடவை நானும் அவனும் சேர்ந்து ஊருக்குப் போறபோது!...''





''அதுலே ஒண்ணும் தப்பில்லே. அப்பச் சொன்னாங்க. இப்ப இஷ்டமில்லே மாத்தறாங்க. ஆனால் அதை மாத்தறபோது இன்னொரு விஷயத்தையும் மாத்தினா நல்லாயிருக்கும்.''

''எதைடா மாத்தணும்?''

'''சத்யமேவ ஜயதே'ன்றதை மாத்திடணும். அதை 'அபத்தமேவ ஜெயதே'ன்னு ஆக்கிடணும்.''

''நமக்கேன்டா இந்த வம்பெல்லாம்'' என்று முத்து மீண்டும் பேச்சு எங்கோ போவதை உணர்ந்து கூறினான்.

''அட முத்து, மறந்தே போயிட்டேனே!'' என்றான் ரவி திடீரென்று ஞாபகம் வந்தவனாக. ''உன் கதை என்ன ஆச்சு? போன காரியம் வெற்றியா, தோல்வியா?''

''வெற்றிதான். என் பெட்டியைக் கொண்டு வந்துவிட்டேன்.''

''பெட்டி கிடக்கட்டுண்டா.... அந்தப் பொண்ணைப் பாத்தியா, பேசினயா, நாளைக்கு வரேன்னு சொன்னியா?''

''ஒவ்வொண்ணாக் கேளு!''

''அந்தப் பொண்ணைப் பார்த்தியா?''

''இல்லே!''

''வடிகட்டின முட்டாள்டா நீ!''

''முட்டாளை எதுக்கடா வடிகட்டணும்?''

ரவிக்கு ஆத்திரம் பீறிட்டுக்கொண்டு வந்தது. ''அறைஞ்சேனுத் தெரியுமா? .....சரி, என்ன நடந்ததுன்னு விவரமாகச் சொல்லித் தொலை!''

முத்து நடந்தவற்றை அவன் அறிந்த வரையில் விவரமாகச் சொல்ல ஆரம்பித்தான். அதைச் சொல்லி முடிப்பதற்குள் ரவியிடம் அவன் பல பட்டங்கள் பெற்றுக் கொண்டான். முட்டாள், மண்டு, மடையன், பயந்தாங்கொள்ளி, பித்துக்குள்ளி, மக்கு, அசடு. இத்தியாதி, இத்தியாதி.

கடைசியில் ''யாரோ வர சத்தம் கேட்டுது. கையிலே எடுத்த என் பெட்டியோட அப்படியே மாடிப் படிக்குக் கீழே ஒளிஞ்சுக்கிட்டேன்'' என்று முத்து சொல்லும்போது ரவியின் முகம் ரௌத்ராகாரமாக மாறியது.

கடைசியாக முத்து, ''மாடியிலேயிருந்து வந்த வேலைக்காரன் ஏதோ கடிதாசை மேஜையின் மேல் வைக்கிறதைப் பார்த்தேன். அவன் மேலே போன உடனே, இதுதான் சமயம்னு நான் ஓடி வந்துட்டேன்'' என்று கூறித் தனது வீரப் பிரதாபத்தை முடித்து ''இதோ பார் என் பெட்டி'' என்று அதையும் ரவியின் கையில் எடுத்து வைத்தான்.

நிராயுதபாணியாக இருந்த ரவிக்குப் பெட்டி கையில் கிடைத்தவுடன் ஆவேசம் வந்துவிட்டது. அதை அப்படியே தூக்கி முத்துவின் மேல் விட்டெறிந்து, ''பெரிய பெட்டி, இதைக் கொண்டு வரத்தான் போனியோ? நீ காதலிக்கவே லாயக்கில்லேடா!'' என்று எரிந்து விழுந்துவிட்டு, மேலே என்ன திட்டலாம் என்று சற்றுத் தயங்கினான். அப்போது அவன் முகத்திலே ஒரு வியப்பு ஏற்பட்டது. ஒரு கணம் அந்தப் பெட்டியையே உற்று நோக்கினான். ''அட! அது என்னடா அது! பெட்டிக்கு அடியிலே ஏதோ கவர் ஒட்டிக்கிட்டிருக்குது?'' என்று கூறி அந்தக் கவரை எடுத்தான். சப்த நாடியும் ஒடுங்கி நின்று கொண்டிருந்த முத்துவும் ஆச்சரியத்தோடு இது எப்படி இங்கு வந்து சேர்ந்தது என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

''இது என்னடா முத்து — கவர்?'' என்றான் ரவி, கவரைப் பார்த்தவாறே.

முத்துவுக்கோ ரவியின் ஆவேசம் தோற்றுவித்த பயம் இன்னும் விட்டபாடில்லை. ''எனக்குத் தெரியாது... நான் எடுத்துக்கிட்டு வரலே. வரபோது பெட்டி கொஞ்சம் கனமாக இருந்தது. இந்தக் கவர் ஒட்டிக்கிட்டதனாலே தான் போலிருக்குது. இல்லே...இல்லே! கவர்னாலே பெட்டி கனமாயிடுமா?''— என்று ஏதோ உளறிக் கொண்டிருந்த போது ரவி கடிதத்தைத் தன் மனத்துக்குள்ளேயே ஒரு முறை படித்து முடித்தான்.

''டேய், முத்து! உன் காதல் நிச்சயமா தெய்விகக் காதல்தாண்டா. கடவுள் உனக்குத் திரும்ப உதவி புரிஞ்சிருக்கார்!''

''புரியாமல் பேசறியே...கோபம் வந்தால் உனக்குப் பைத்தியம் பிடிச்சுடுமா?''

''டேய், முத்து! இது என்ன கடிதாசு தெரியுமா? ராஜரத்தினம், டாக்டர் மேகநாதன்னு ஒருத்தருக்கு எழுதியிருக்கிற கடிதாசு.''

''யார் அவர் டாக்டர் மேகநாதன்?''

''அவர் ஒரு டாக்டர். முட்டாள்! அவரு யாருன்னு எனக்கு என்ன தெரியும்? இந்த ராஜரத்தினம் வீட்டிலே யாருக்கோ உடம்பு சரியில்லையாம். அதனாலே டாக்டரை வரச் சொல்லிக் கடிதாசு எழுதியிருக்கார். முக்கியமான விஷயம் என்ன தெரியுமா?''

''தெரியும்'' என்றான் முத்து.

''என்ன?''

''டாக்டர் மேகநாதன் ஒரு டாக்டர்!''

''தமாஷ் பண்ணாதே. சொல்றதைக் கவனமாக் கேளு. இந்த டாக்டரை ராஜரத்தினம் பார்த்ததே கிடையாதுன்னு கடுதாசியிலே தெளிவா எழுதியிருக்கார்.''

''அதனாலேதான் தைரியமா அந்த டாக்டரைக் கூப்பிட்டிருக்கார்!''

''குறுக்கே பேசாதே முத்து! இப்போ டாக்டர் மேகநாதனுக்கு எழுதிய கடிதாசைத் தவறிப்போய் நீ கொண்டு வந்துட்டே. ராஜரத்தினம் டாக்டரை எதிர்பார்த்துக்கிட்டிருப்பார். டாக்டருக்குக் கடிதாசு போகலே — அதனாலே அவர் வரமாட்டாரு. அவருக்குப் பதிலாக நீ டாக்டராப் போய்விடு.''

''என்னது?'' முத்துவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. ''நான் டாக்டராப் போவதா?''

''ஏன்? நீ டாக்டராப் போறதுலே என்ன தப்பு? கிரிஜாவைச் சந்தித்துப் பேசறதுக்கு இதுதான் ஒரே வழி. ராஜரத்தினத்தின் வீட்டிலேயே தங்கலாம். அவரையும் சிநேகிதம் பண்ணிக்கிட்டுக் கல்யாணத்தையே முடிச்சுக்கலாம்.''

''எனக்கு வைத்தியத்தைப் பத்தி ஒண்ணுமே தெரியாதே ரவி?''

''அதனுலேதான் டாக்டராப் போகச் சொல்றேன்.''

''ரவி! இந்த விளையாட்டெல்லாம் வேண்டாம் ரவி'' என்று முத்து அழ மாட்டாக் குறையாகக் கெஞ்சினுன்.

''பயந்து சாகாதேடா. இந்தக் கடிதாசை முதல்லே படி'' என்று கூறி முத்துவிடம் கடிதத்தைக் கொடுத்தான் ரவி.

முத்து படித்து முடித்தவுடன், ரவி முத்துவிடம், ''என்ன எழுதியிருக்கிருர் படிச்சியா?'' என்ருன்.

'' 'ராஜரத்தினம்'னு எழுதியிருக்கிருர்.''

''அதையா கேட்டேன்?''

''அதான் கடைசியாப் படிச்சேன். அதனுலேதான் ஞாபகம் வந்தது. சொன்னேன்.''

''சரி... அதுக்கு மேலே என்ன இருக்குது?''

'' 'இப்படிக்கு'ன்னு இருக்குது.''

''ஐயோ, கர்மம். டாக்டரை அவர் பார்த்ததே யில்லேன்னு எழுதியிருக்காரா, இல்லையா?''

''எழுதியிருக்கிருர். ஆனுல் அதை நிஜம்னு எப்படி நம்பறது? நம்பளை ஏமாத்தறத்துக்காக அப்படி எழுதியிருந்தால்?''

''நம்ப இந்தக் கடிதாசியைப் பார்ப்போம்னு அவருக்குத் தெரியுமா?''

''தெரியாதா? பின்னே ஏன் நாம் இதைப் பார்த்தோம்?''


''அதாண்டா, கடவுளாகப் பார்த்து இதை உன்கிட்ட சேர்த்திருக்கிருர்! முத்து, நான் சொல்றபடி செய். கிரிஜாவைப் பார்த்துப் பேசணும்னு, சுலபமான வழி — நீ டாக்டர் மேகநாதன்னு சொல்லிக்கிட்டுப் போறது தான்.''

''ரவி...அசோக்னு எழுதி யிருக்காங்களே, யாரா இருக்கும் அது?''

''ஏதோ சின்னப் பையனுத்தான் இருக்கணும்னு நினைக்கிறேன். அநேகமா அந்தக் கிரிஜாவுக்குத் தம்பியாக இருப்பான் அவன்!''

''வைத்தியம் பார்க்கச் சொன்னுல் நான் என்னடா செய்வேன்?''

''பயப்படாதே. நான் வழி சொல்லித் தரேன். கையிலே நிறையத் தூக்க மாத்திரைகளை எடுத்துக்கிட்டுப் போ. அந்தப் பயல் ரொம்பத் தொந்தரவு செய்தான்னு ஒரு தூக்க மாத்திரை கொடு. நல்லாத் தூங்கிடுவான். தூக்கத்திலேயிருந்து அவன் முழிச்சுக்கிட்ட உடனே இன்னொரு மாத்திரை கொடு. இப்படியே சமாளிச்சுடலாம். எல்லா மாத்திரையையும் சேர்த்து ஒரே யடியாக் கொடுக்காத வரைக்கும் நீயும்



அவர்: பணம் பேசுகிறதும்மா பேசுகிறது! ஞாபகம் வச்சுக்கோ!

அவள்: அப்படியா! அப்ப நீங்க ஆபீஸ் போகும் போது ஒரு பத்து ரூபாய் கொடுத்துட்டுப் போங்க! அதோட மத்தியானம் பூரா பேசிண்டிருக்கேன்... தனியாயிருந்தால் பொழுது போகல்லே! பேச்சுத் துணைக்கு இருக்கட்டும்!

பொழைச்சுக்கலாம்; அந்தப் பையனும் பொழைச்சிருப்பான்!''

''ரவி! நீ ஏதாவது தூக்க மாத்திரை கடை வைக்கப் போறியா?''

''முத்து! நான் ரொம்ப சீரியஸாகத் தான் சொல்றேன். உனக்குக் கிரிஜாவைப் பத்தி அக்கறை இல்லேன்னு இந்தப் பேச்சே வேண்டாம். விட்டு விடலாம். நீ கிரிஜாவை உண்மையாகவே காதலிச்சா — அவளையே கலியாணம் செய்துக்க விரும்பினுல்...''

''தூக்க மாத்திரையைக் கையிலே எடுத்துக்கணும்.''

''அவங்க குடும்பத்தோட பழக இதைவிட நல்ல சந்தர்ப்பம் உனக்குக் கிடைக்குமா? நல்லா யோசிச்சுப்பாரு.''

''நான் டாக்டர் வேஷம் போட்டுக் கிட்டா எப்படிடா இருப்பேன்?''

''அசல் கம்பௌண்டர் மாதிரி இருப்பே.''

''அப்போ அவங்க மட்டும் என்னைப் பார்த்து டாக்டர்னு நம்புவாங்களா?''

''கண்டிப்பா நம்புவாங்க முத்து. ஏன்னு இப்ப எல்லாம் கம்பவுண்டர் மாதிரி இருக்கிறவர்தான் நிஜமான டாக்டராக இருக்காங்க... டாக்டர் மாதிரி இருக்கிறவங்க கம்பவுண்டரா இருக்கிருங்க. காலமே தலை கீழாக

மாறிக் கிடக்கிறது. எல்லா விஷயங்களிலேயும் அப்படித்தான். பொம்பளை மாதிரி டிரஸ் பண்ணிக்கிட்டிருக்கவங்க ஆம்பிளைங்களா இருக்காங்க. ஆம்பிளை மாதிரி டிரஸ்லே வரவங்க பொம்பளைங்களா இருக்காங்க. கல்லூரி மாணவன் மாதிரி நாகரிகமா உடை உடுத்தியவன் பைத்தியக்காரனாக இருக்கிறான். ரௌடிங்களைப் பார்த்தா அரசியல்வாதி மாதிரி இருக்கிறாங்க—அரசியல்வாதிங்களைப் பார்த்தா ரௌடிங்க மாதிரி இருக்கிறாங்க.''

''ரவி, நீ என்ன அரசியல்வாதியா?''

''ஏன்?''

''பார்த்தால் ரௌடி மாதிரி இருக்கியே — அதனாலே கேட்டேன்.''

''அதெல்லாம் இருக்கட்டும். முத்து! என்ன சொல்றே, டாக்டர் மேகநாதனாகப் போறதுக்கு நீ தயாரா?''

''அவரும் அந்த வீட்டுக்கு வந்துட்டார்னா என்ன செய்யறது ரவி?''

''அவருக்குத்தான் கடிதாக போய்ச் சேரலையே. நம்மகிட்டத்தானே அந்தக் கடிதம் இருக்குது. அவர் எப்படி வருவாரு!''

''அப்போ தைரியமாப் போகலாம்னு சொல்றியா?'' — முத்துக்கே கொஞ்சம் தைரியம் வர ஆரம்பித்தது.

''ஒண்ணும் கவலைப்படாதே. ஆனால் முத்து, இந்த மாதிரி தலையை வெச்சுக்கிட்டு நீ டாக்டராகப் போக முடியாது. இந்தக் குடுமியை எடுத்துட்டுக் கிராப் வெட்டிக்கணும்!''

''கிராப்பா? ஐயோ நான் மாட்டேன்!'' என்று முத்து திடுக்கிட்டு அலறினான்.

''இந்தக் காலத்திலே எந்த டாக்டரு குடுமி வெச்சுக்கிட்டு இருக்காரு? அவங்க நம்ப வேண்டாமா?''

''நான் குடுமியை வெட்டிட்டேன்னு தெரிஞ்சால் எங்கப்பா என் தோலை உரிச்சுப்பிடுவாரு. நான் மாட்டவே மாட்டேன்.''

''அப்ப நீ கிரிஜாவை மறக்க வேண்டியதுதான். உனக்கு வேண்டியது குடுமியா, கிரிஜாவா என்பதை நீயே முடிவு செய்துகொள்!''

''என் குடுமியை வெட்டறதுலே உனக்கு ஏன் ரவி இவ்வளவு ஆசை? நீளமா அழகா இருக்குதே. அதை வெட்டிப்பிடணுமா?''

''முத்து! இப்ப அதாண்டா வழக்கம். நீளமா இருக்கிறதைச் சுருக்கிடணும். 'இந்தியா'ன்றதைச் சுருக்கி 'இந்தி'ன்றதுக்குள்ளே அடக்கப் பார்க்கிறாங்களே!''

''ஆமாண்டா! எனக்கு இப்போ இந்தியைப் பத்தித்தான் கவலையா?''

''இனிமேல் இந்தியைப் பத்திக் கவலைப்பட்டு என்ன பிரயோசனம்? தலைவிதியை அனுபவிக்கவேண்டியதுதான்.''

முத்து இப்போது ஒரு முடிவுக்கு வந்தான். தலைவிதியை அனுபவிப்போம் என்ற முடிவுதான் அது. குடுமியையும் கிரிஜாவையும் சீர்தூக்கிப் பார்த்து முன்னதைத் தியாகம் செய்வது என்று தீர்மானித்தான். டாக்டராகப் போனால் ஏதாவது குழப்பம் வந்தால் கூட ரவி தன்னைக் காப்பாற்றிவிடுவான் என்று எண்ணி மனத்தைத் தேற்றிக் கொண்டான்.

''சரி, ரவி! நான் டாக்டர் மேகநாதனா, ராஜரத்தினம் வீட்டுக்குப் போறதுன்னு தீர்மானம் செய்துட்டேன்!''

''குடுமி?''

''அதை விட்டுட்டு நான் மட்டும் போறேன்!''

''ஆஹா! பலே, முத்து! நீதான் வீரத் தமிழன்!'' என்று அவனைத் தட்டிக் கொடுத்தான் ரவி.


ஃ ஃ ஃ

செங்கற்பட்டில் டாக்டர் மேகநாதன் சென்னைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். ''இவ்வளவு அவசரமாக வரச் சொல்லித் தந்தியா?'' என்று ஆச்சரியப்பட்ட அவர், ''இந்தப் பணக்காரர்களே இப்படித்தான்!''—என்று மனத்தைச் சமாதானப்படுத்திக் கொண்டார்.

தமது காரில் ஏறி அமர்ந்த டாக்டர் மேகநாதனுக்கு, சென்னையில் இன்னொரு டாக்டர் மேகநாதன் அப்போது அவதாரம் செய்யப் போகிறார் என்று தெரிந்திருந்தால், அவர் சென்னைக்கு உடனே புறப்படாமல் இருந்து இந்தக் குழப்பத்தைத் தீர்த்து விட்டே புறப்பட்டிருப்பார். ஆனால் அப்போது எதிராஜுக்கு மிகுந்த ஏமாற்றமாக இருந்திருக்குமே!

டாக்டர் மேகநாதனின் கார் செங்கற்பட்டிலிருந்து சென்னையை நோக்கிப் புறப்பட்டது. அதைத் தொடர்ந்து ஒரு லாரியும் புறப்பட்டது. எதிராஜ் அந்த லாரியில் அமர்ந்திருந்தான் என்று சொல்லத் தேவையில்லை.

சிங்கப்பெருமாள் கோவில், கூடுவாஞ்சேரி, வண்டலூர், தாம்பரம் என்று கடந்து வந்து கொண்டிருந்தார் டாக்டர் மேகநாதன். அவரை ஒரு மகா புருஷராக மதிப்பவன் போல் எதிராஜ் அவருடைய அடிச்சுவட்டை விடாமல் தொடர்ந்து வந்தான். பல்லாவரம் வந்தது. எதிராஜின் லாரி வாயு வேகமாக நெருங்கி வந்தது. (தொடரும்)


அருணகிரி விலாஸ்
சீயக்காய் பவுடர்



இத்தாலியக் குட்டிக் கதைகள்

ஓர் ஏழை ஓர் அரசனிடம் வந்து, ''நான் உங்கள் சகோதரன். எனக்கு உதவுவது உங்கள் கடமை'' என்றான்.

''நீ என் சகோதரனா? எப்படி?'' என்று கேட்டான் அரசன்.

''உலகத்தில் வாழும் நாம் அனைவரும் ஆதாம், ஏவாள் என்ற பெற்றோர்களின் சந்ததிகள் அல்லவா? எனவே, நாம் சகோதரர்கள்தானே?'' என்றான் ஏழை.

இதைக் கேட்ட அரசன் அவனுக்கு ஒரு பைசாவைக் கொடுத்து, ''நீ போகலாம்'' என்றான்.

''மகாராஜா ! நீங்கள் மன்னராக இருந்தும் நான் உங்கள் சகோதரனாக இருந்தும் இந்த ஒற்றைக் காசைக் கொடுக்கிறீர்களே !'' என்று துயரத்தோடு சொன்னான் ஏழை.

''ஒற்றைக் காசு போதாதா? உலகத்தில் உள்ள எல்லாச் சகோதரர்களும் நான் கொடுத்தது போல் உனக்கு ஆளுக்கு ஒரு காசு வீதம் கொடுத்தால் நீ என்னைவிடப் பெரிய கோடீசுவரன் ஆகிவிடலாமே! அப்புறம் என்ன?'' என்று சொல்லி அவனை வெளியே அனுப்பினான் அரசன்.

அழுகைக் குரல் எப்போது கேட்கும்?

ஒரு திருடன் ஒரு வீட்டிலிருந்து பணத்தையும், நகைநட்டுக்களையும், பாத்திரங்களையும் தூக்கிக் கொண்டு புறப்பட்டான். அப்போது சிலர் அவனைப் பார்த்துக்கொண்டனர்.

''யாரப்பா நீ? இந்தச் சாமான்களை இந்த இரவு நேரத்தில் எங்கே தூக்கிக் கொண்டு போகிறாய்?'' என்று கேட்டார்கள்.

''ஐயா! நான் இந்த வீட்டில் குடியிருந்தேன். இங்கே ஒருவர் செத்துப் போய்விட்டார். இனி இங்கே வசிக்க முடியாது என்று என்னுடைய பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு வேறொரு வீட்டுக்குக் குடியேறப் போகிறேன்'' என்றான் திருடன்.

''இந்த வீட்டில் ஒருவர் செத்திருந்தால் அழுகைக் குரல் கேட்குமே! அப்படி ஒருவரும் அழக் காணோமே!''

''நாளைக் காலையில் அழப் போகிறார்கள், பாருங்கள்'' என்று கூறிவிட்டுச் சாமான்களோடு நடையைக் கட்டினான் திருடன்.

பாவ மன்னிப்பு

ஒருவன் ஒரு பாதிரியாரிடம் தான் செய்த பாவங்களை யெல்லாம் சொல்லி மன்னிப்புப் பெறுவதற்கு வந்தான். அப்போது பாதிரியார் வாத நோயினால் படுத்த படுக்கையாகக் கிடந்தார். அவருடைய புதுச் செருப்புக்கள் கட்டிலுக்குக் கீழே கிடந்தன. பாதிரியார் படுத்திருந்த அந்தக் கட்டிலுக்கு அருகில் வந்து முழந்தாளிட்டு வணங்கி, தான் செய்த பாவங்களை யெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாகச் சொன்னான் அவன். அப்படிச் சொல்லும் போதே அவருடைய புதுச் செருப்புக்களைத் திருடித் தன் பைக்குள்போட்டுக்கொண்டான்.

''நான் கடைசியாகச் செய்த பாவம், ஒரு ஜோடி புதுச் செருப்புக்களைத் திருடியது தான். அவை இப்பொழுதும் என்னிடம் தான் இருக்கின்றன'' என்றான் அந்த ஆசாமி.


''அப்படியானால் அந்தச் செருப்புக்களை உரியவரிடம் நீ சேர்ப்பித்துவிட வேண்டும்'' என்றார் பாதிரியார்.

''அவற்றை நீங்கள் வைத்துக் கொள்ளுகிறீர்களா?''

''எனக்கு வேண்டாம். அவற்றின் சொந்தக்காரரிடம் கொடுத்துவிடு.''

''சொந்தக்காரரிடம் கொடுக்கத்தான் விரும்பினேன். அவரே 'எனக்கு வேண்டாம்' என்கிறார். நான் என்ன செய்வது?''

''அப்படியானால் அவற்றை நீ தாராளமாக வைத்துக்கொள்ளலாம்'' என்றார் பாதிரியார்.







பாவமன்னிப்புப் பெற வந்த திருடன் புதுச் செருப்புக்களோடு வெளியே போய்விட்டான்.

மடாதிபதியின் யோசனை

ஒரு பிரபு ஒரு பெரிய மாளிகை கட்டுவதற்காகக் கடைகால் தோண்டச் செய்தார். அப்போது தோண்டி எடுத்த மண் பெரிய மலைமாதிரி குவிந்து விட்டது. அவ்வளவு மண்ணையும் எங்கே கொண்டு போய்ப் போடுவது என்று தெரியாமல் அவர் திகைத்துக் கொண்டிருந்தபோது, அவருக்குத் தெரிந்த ஒரு மடாதிபதி வந்து, "பிரபு! ஏன் திகைக்கிறீர்கள்? ஒரு பெரிய குழியை வெட்டச் சொல்லுங்கள். அதில் இந்த மண்ணையெல்லாம் கொண்டு போய்ப் போடச் சொல்லுங்கள்" என்று யோசனை கூறினார்.

"சொல்லலாம். ஆனால் அந்தப் பெரிய குழியை வெட்டும்போது மண்ணைத் தோண்டி எடுப்பார்களே! அம்மண்ணை எங்கே கொண்டு போய்ப் போடுவது?" என்று கேட்டார் பிரபு.

"அந்த மண்ணையும் அதே குழியில் போட்டு விடக் கூடியவாறு குழியைப் பெரிதாக வெட்டச் சொல்லுங்கள்."

"இரண்டு மண் குவியல்களையும் ஒரே குழியில் போடுவது எப்படி? இடம் இருக்குமா?"

"அதற்குத்தானே பெரிய குழியாக வெட்டச் சொல்கிறேன்" என்று பெருமிதமாகச் சிரித்துக் கொண்டே சொன்னார் மடாதிபதி.

தாந்தேயும் கொல்லனும்

ஒரு நாள் மகா கவி தாந்தே தெரு வழியாகப் போய்க் கொண்டிருந்தார். அப்போது ஒரு கொல்லன் இரும்பைக் காய்ச்சித் தட்டிக் கொண்டே, தப்பும் தவறுமாக அவருடைய கவிதை ஒன்றைப் பாடிக் கொண்டிருந்தான். இதைத் தாந்தேயினால் பொறுக்கமுடியவில்லை. நேரே அவனுடைய உலைக் கூடத்துக்குச் சென்று அங்கே இருந்த சம்மட்டி, குறடு போன்ற கருவிகளை எடுத்துத் தெருவில் எறிந்தார்.

கொல்லன் கோபம் கொண்டு, "நீ யார்? என்ன காரியம் செய்கிறாய்? எதற்காக என்னுடைய பொருள்களையெல்லாம் வெளியே எறிந்து பாழாக்குகிறாய்?" என்று கேட்டான்.

"நீ எதற்காக என்னுடைய பொருளைப் பாழாக்குகிறாய்?" என்று கேட்டார் தாந்தே.

"எது உன் பொருள்?"

"நீ தப்பும் தவறுமாகச் சிதைத்துப் பாடிக் கொண்டிருந்தாயே, அந்தக் கவிதைதான் என்



பொருள். இதை இயற்றியவன் நான்தான். என் பெயர் தாந்தே" என்றார் மகாகவி.

கொல்லன் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு தெருவில் கிடந்த தன் கருவிகளை உலைக்கூடத்துக்கு எடுத்துக் கொண்டு வந்தான்.

லோபி

ஒரு லோபி தானிய வியாபாரம் செய்து வந்தான். திடீரென்று தானிய விலை இறங்கி விடவே, அவன் மனம் உடைந்துபோய், முகட்டில் கயிற்றைக் கட்டி அதில் தூக்குப் போட்டுக் கொண்டான். அரை உயிரும் குறை உயிருமாக அவன் கூப்பாடு போட்டது, வெளியே இருந்த வேலைக்காரன் காதில் விழுந்தது. உடனே அவன் உள்ளே ஓடிக் கயிற்றை அறுத்து வியாபாரியின் உயிரைக் காப்பாற்றினான். வியாபாரி சுய உணர்வு பெற்றானோ இல்லையோ, வேலைக்காரனைப் பார்த்து, "நீ கயிற்றை அறுத்துப் பாழாக்கி விட்டாயே! உடனே கயிற்றின் விலையைக் கொடுக்கிறாயா, உன் சம்பளத்தில் பிடித்துக் கொள்ளட்டுமா?" என்று கேட்டான்.

வல்லவனுக்கு வல்லவன்

யூதர்களை மகா தந்திரசாலிகள் என்று சொல்வார்கள். ஆனால் ஜெனோவா நகரத்தான் ஒருவனை ஏமாற்றப் பன்னிரண்டு யூதர்கள் சேர்ந்தால்தான் முடியுமாம். அதே சமயத்தில் ஜெனோவாக்காரர்கள் பன்னிரண்டு பேர் சேர்ந்தாலும் ஒரு கிரேக்கனை ஏமாற்ற முடியாதாம்! எனக்குத் தெரிந்தவரையில் ஓர் இத்தாலிக்காரன் ஒரு கிரேக்கனை மட்டுமல்ல, இரண்டு கிரேக்கர்களையே ஏமாற்றியிருக்கிறான்.

அந்த இத்தாலிக்காரன் ஒரு சமயம் கிரீஸுக்குப் போயிருந்தான். அங்கிருந்து அவன் தாய்நாட்டுக்குத் திரும்பும்போது புதுச் செருப்புக்கள் வாங்கிப் போட்டுக்கொள்ள விரும்பினான். ஆனால் கையில் போதிய பணமில்லை. என்ன செய்யலாம் என்று ஒரு









அவர்: (சமையல்காரியிடம்) உன்னைத் தேடிண்டு யாரோ சொந்தக்காரன் வந்திருக்கான்!

சமையல்காரி: என் சொந்தக்காரர் தான் என்று நீங்கள் எப்படி நிச்சயமாகச் சொல்ல முடியும்!

அவர்: காணாமற் போன என் 'டை', டெரிலின் சட்டை இரண்டையும் அவன் அணிந்திருக்கிறான்!

நிமிஷம் யோசித்தான். மறு நிமிஷம் கடைத் தெருவுக்குச் சென்றான். ஒரு செருப்புக் கடையில் நுழைந்து. "என் காலுக்குச் சரியாக ஒரு ஜோடி செருப்புக்கள் தைத்துத் திங்கட் கிழமை காலையில் எனக்குக் கொடுக்க முடியுமா?" என்று கேட்டான். செருப்பு இன்ன இன்ன மாதிரி இருக்க வேண்டும் என்றும் விவரமாகச் சொன்னான்.

"செருப்பை நான் வந்து வாங்கிக்கொள்ள நேரம் இராது. என் வீட்டுக்கு அனுப்பி விடுங்கள்" என்று சொல்லித் தன் ஜாகை விலாசத்தையும் கொடுத்தான்.

"திங்கட் கிழமை எத்தனை மணிக்குக் கொடுத்து அனுப்புவது?" என்று கேட்டான் கடைக்காரன்.

"பத்து மணிக்கு அனுப்புங்கள்" என்று சொல்லிவிட்டு இத்தாலியன் போய்விட்டான்.

அதே ஆசாமி வேறொரு தெருவுக்குச் சென்று அங்கே உள்ள ஒரு செருப்புக் கடையில் நுழைந்து அங்கும் ஒரு ஜோடி செருப்பு தைப்பதற்கு ஆர்டர் கொடுத்தான். செருப்புகள் இப்படி இப்படி இருக்க வேண்டும் என்று முந்திய கடையில் சொன்னதுபோலவே சொன்னான். திங்கட் கிழமை காலையில் தன் ஜாகைக்குச் செருப்புக்கள் வந்துவிட வேண்டும் என்றும் தெரிவித்தான்.

"பத்துமணிக்குக் கொடுத்தனுப்பலாமா?" என்று கடைக்காரன் கேட்டான்.

"வேண்டாம். அப்போது நான் வீட்டில் இருக்க மாட்டேன். பதினொரு மணிக்கு அனுப்புங்கள்" என்று சொல்லிவிட்டு இத்தாலியன் போய்விட்டான்.

திங்கட்கிழமை காலையில் சரியாகப் பத்து மணிக்கு முதலாவது கடையைச் சேர்ந்த ஒருவன் புதுச் செருப்புக்களோடு வந்தான்.

ஆசாமி அவற்றைக் காலில் போட்டுப் பார்த்து, "வலது கால் செருப்பு சரியாக இருக்கிறது. இடது கால் செருப்புத்தான் முன் பக்கத்தில் கடிக்கிறது. இதைக் கொஞ்சம் சரி பண்ண வேண்டும்" என்றான்.

"சரிபண்ணிக் கொண்டு வருகிறேன். ஆனால் நாளைக்குத்தான் கொண்டுவர முடியும்" என்றான் கடைக்காரன்.

"நாளைக்கே கொண்டுவா" என்று இத்தாலியன் சொன்னான். கடைக்காரன் இடது கால் செருப்பை மட்டும் எடுத்துக்கொண்டு போய்விட்டான்.

பதினொரு மணிக்கு இரண்டாவது கடையைச் சேர்ந்தவன் வந்தான். அவன் கொண்டு வந்த புதுச் செருப்புக்களைக் காலில் போட்டுப் பார்த்த ஆசாமி, வலது கால் செருப்பு பொருந்தவில்லை என்றும், முன்புறத்தில் கடிக்கிறது என்றும், அதைச் சரிபண்ண வேண்டும் என்றும் சொன்னான்.

கடைக்காரனும் அப்படியே செய்வதாகக் கூறி இரண்டு செருப்புக்களையும் கையில் எடுத்துக்கொண்டு புறப்பட்டான். உடனே இத்தாலியன் அவனைத் தடுத்து, "இரண்டையும் ஏன் கொண்டு போகிறாய்? வலது கால் செருப்பை மட்டும்தானே சரிபண்ண வேண்டும்? நீ இரண்டையும் கடைக்குக் கொண்டு போனால் வேறு யாராவது இதே ஜோடியை விலைக்குக் கேட்பார்கள். நீங்களும் விற்று விடுவீர்கள். இந்த அழகான செருப்புக்கள் எனக்குக் கிடைக்காமல் போய்விடும். அப்புறம் மேற்கொண்டு ஒரு வாரம் நான் புதுச் செருப்புக்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கும்படி செய்துவிடுவீர்கள்" என்று சொன்னான். "அப்படிச் செய்ய மாட்டோம்!" என்றான் கடைக்காரன்.

"இல்லை, இல்லை. எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. ஏன், இடது கால் செருப்பை இங்கே வைத்துவிட்டுப் போவதால் உனக்கு என்ன நஷ்டம்? சுமைதானே குறையும்?" என்று ஆசாமி சொன்னான்.

கடைக்காரனும் அந்தச் செருப்பை வைத்து விட்டு, "நாளைக்குச் சரிபண்ணிக் கொண்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு வலது கால் செருப்பை மட்டும் எடுத்துக்கொண்டு போனான்.

ஒரு மணி நேரம் கழித்ததும் ஆசாமி இரண்டு செருப்புக்களையும் ஒன்றாக எடுத்து வைத்துக் காலில் போட்டுக் கொண்டு இத்தாலிக்குக் கப்பல் ஏறிவிட்டான்.

அடுத்த நாள் இரண்டு கடைக்காரர்களும் ஆளுக்கு ஒரு செருப்பைக் கொண்டு வந்தார்கள். ஆசாமி ஓடிவிட்டான் என்பதை அறிந்து ஒருவர் முகத்தை ஒருவர் பேந்தப் பேந்த விழித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

தமிழிலிருந்து ஹீப்ரு வரை!

—திலீபன்—


யார் யாரையெல்லாமோ அரசாங்கம் கௌரவித்துக் கொண்டாடும் இந்த நாளில் காலமெல்லாம் இலக்கியத் தொண்டாற்றியும், பட்டமோ, பதவியோ, பண முடிப்போ பெறாமல் எளிமையாகவே தம் பணியைத் தொடரும் பெரியவர் ஒருவர் நம்மிடையே வாழ்கிறார் என்றால் வியப்பாக இருக்கிறதா? அந்தப் பெரியவருக்கு வயது இப்போது 76. பெயர் – வி. சேஷாத்திரி அய்யர். தலைவர் ராஜாஜி எழுதிய 'வியாசர் விருந்'தைச் சுவை குன்றாமல் ''வியாஸன்றெ விருந்நு'' என்னும் தலைப்பில் மலையாளத்தில் படைத்த இவர் பல மொழிகளிலும் புலமை பெற்றவர். கிரீக், லத்தீன், இத்தாலி, ஸிரியன், பெர்ஷியன், பாலி, வங்காளி, வடமொழி, இந்தி, மராத்தி குஜராத்தி, உருது, கன்னடம், தெலுங்கு, தமிழ், மலையாளம், காஷ்மீரி, பஞ்சாபி, அஸாமீஸ், சைனீஸ், ஜெர்மன், ஜப்பனீஸ், இங்கிலீஷ், பிரஞ்சு, ரஷ்யன், போர்ச்சுகீஸ், டச்சு, ஸ்பானிஷ், நார்வீஜியன், டானிஷ், ஸ்விடிஷ், ஹீப்ரு, அரபி – இத்தனை மொழிகளிலும் வல்லமை பெற்ற இவர் ஒரு விந்தை மனிதர் இல்லையா? இத்தனை மொழிகளையும் ஆசான் இன்றித் தம் ஆர்வம் ஒன்றையே துணையாகக் கொண்டு சுயமாகவே கற்றுணர்ந்தார் என்றால், மகாபாரத காலத்து ஏகலைவனைத்தான் நம்மால் ஒப்புக்கு நினைத்துக் கொள்ள முடியும்.

1891 டிசம்பர் 6-ம் தேதி ஹரிப்பாடு என்னும் ஊரில் பத்மநாபய்யர் – லக்ஷ்மி அம்மாள் தம்பதிக்கு அருமை மகனாகப் பிறந்தார் சேஷாத்திரி. பத்மநாபய்யர் ஆங்கிலப் பள்ளி ஒன்றில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். பக்கத்து ஊரான மாவேலிக்கரையில் பத்தாவது வகுப்பில் பயின்றுகொண்டிருந்த போது, சேஷாத்திரியின் மொழி ஆர்வத்துக்கு முன்னோடியாய் அமைந்த சிறு சம்பவம் ஒன்று நிகழ்ந்தது: அதே பள்ளியில் ஒன்பதாவது வகுப்பில் படித்துக் கொண்டிருந்த மாணவன் ஒருவன், ''ஒரு பிராமணனாக இருந்தும் உனக்கு சம்ஸ்கிருதம் தெரியாதே!'' என்று கேலி செய்ய, துணுக்குற்ற சேஷாத்திரி இரண்டு மணி நேரத்துக்குள் தொடக்கப் புத்தகங்களை வாங்கிப் படித்துவிட்டு அந்த மாணவன் ஆச்சரியப்படும்படி பாடங்களை ஒப்பித்தார். அன்றிலிருந்து மொழிகள் பயில்வதே அவரது முக்கியமான பொழுதுபோக்காக அமைந்துவிட்டது.

மெட்ரிக்குலேஷன் தேறியபின் திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியில் சேர்ந்து இருபத்தொன்றாவது வயதில் பி. ஏ. பட்டம் பெற்றார். அவர் எடுத்துக் கொண்டிருந்த பிரிவு—சரித்திரம். இருபத்தி மூன்றாவது வயதில் பி. எல். தேறினார். பரீட்சை முடிவுகள் வெளிவருவதற்குமுன்பே ஸெயின்ட் ஜோஸப் பள்ளியில் ஆசிரியர் வேலை ஏற்றிருந்ததனால் இரண்டு வருடங்கள் அங்கேயே பணி புரிந்தார். பின், கொல்லம் நகரில் வக்கீல் தொழில் தொடங்கினார். ஆனால் ஒரு வருடத்துக்குள் அவருக்கு அந்தத் தொழில் சலித்துப் போய் விட்டதால், சப்ரிஜிஸ்திராராகச் சர்க்கார் வேலையில் சேர்ந்தார். தமது நீண்ட உத்தியோக வாழ்விலே பல பொறுப்புள்ள பதவிகளில் பணியாற்றிவிட்டு 1948ல் ஓய்வு பெற்றார்.

கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த தம் மகனைக் காணத் தில்லிக்குச் சென்ற சேஷாத்திரி அய்யர் அப்போது பாரதத்தின் கவர்னர் ஜெனரலாக இருந்த தலைவர் ராஜாஜியைச் சந்தித்தார். ராஜாஜி விரும்பியபடி, ''வியாசர் விருந்தை'' வங்காளியில் மொழி பெயர்க்க முன்வந்தார். சேஷாத்திரி அய்யரின் தெளிவான மொழி விளக்கத்தை ஆதாரமாகக் கொண்டு பிரபல வங்காள ஆசிரியர் ஞானமோகன் மைதி தொகுத்த ''வியாசர் விருந்து'' வங்காளி இலக்கியத்தில் தனி இடம் பெற்றது. பின் ஆங்கில மொழிபெயர்ப்பை அமைக்க அரும் பணி புரிந்தார் சேஷாத்திரி அய்யர். ஆங்கிலப் பதிப்பின் முன்னுரையில்

பன்மொழிப் புலவர் இவர். ● அடக்கமே உருவானவர். இந்த ● விந்தை மனிதர் பல மொழிகளைக் ● கற்றுக்கொண்ட விதமே இங்கு ● கட்டுரையாக வடிவெடுத்துள்ளது. ●



திரு வி. சேஷாத்திரி ஐயர்

ராஜாஜி. இவர் செய்த தொண்டை எடுத்துக் குறிப்பிட்டிருக்கிறார்.

விவேகாநந்தர் எழுதிய வங்காளி நூல் ஒன்றின் ஆங்கில மொழிபெயர்ப்பு கல்லூரி நாட்களில் இவர் நெஞ்சைக் கவர அதன் மூல நூலைப் படிக்க வேண்டும் என்ற ஒரே ஆர்வத்தால் அந்த மொழியையே கற்று விட்டார். இதே ஆர்வம்தான் அவரை ஒரு பன்மொழி மேதையாக மாற்றியது.



'முயன்றால் இயலாதது ஒன்றும் இல்லை' என்பது இவர் கருத்து. 'மொழிபெயர்ப்பு' என்ற நினைப்பே இவரது நூல்களைப் படிக்கும்போது ஏற்படுவதில்லை என்று தலை சிறந்த விமரிசகர்கள் ஏக மனதாக அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். இரண்டு மொழிகளிலும் ஆழ்ந்த ஞானம் மொழிபெயர்ப்பாளனுக்கு இருக்க வேண்டும் என்பது இவர் அபிப்பிராயம். இன்றைய மொழிபெயர்ப்பாளர்கள் இவரைப் பின்பற்றினால்தான், தமிழுக்கும் உலக இலக்கியத்துக்கும் இடையே பலமானதொரு பாலம் அமையும்.

பிரெஞ்சிலிருந்து மலையாளத்துக்கு மோன்டெயினின் கட்டுரைகள்; கிரீக்கிலிருந்து: ப்ளூட்டார்க்கின் பெரும் காப்பியங்கள், சாக்ரட்டீஸின் கருத்துக்கள், அரிஸ்டாட்டிலின்... அரிஸியலின் ஆத்ம சோதனை; ரஷ்ய மொழியிலிருந்து: டால்ஸ்டாயின் மதமும் வாழ்வும்; மராத்தியிலிருந்து தர்மானந்த கோஸாம்பியின் புத்தபிரான்; இந்தியிலிருந்து நம் மரங்கள்; சம்ஸ்கிருதத்திலிருந்து — கீதை; பல விவேகாநந்த இலக்கியங்கள், தமிழிலிருந்து வியாசர் விருந்து, இந்திய மொழிகளிலிருந்து பிற மொழிகளுக்குப் பல நூல்கள் — இப்படித் தமக்கே உரித்தானதோர் இலக்கியத்தையே உருவாக்கி விருக்கிறார் சேஷாத்திரி அய்யர். இப்போது, தம் மகனுடன் பம்பாயில் வாழும் இவர் இன்றும் இலக்கிய விஷயங்களில் வற்றாத ஆர்வத்தோடுதான் ஈடுபடுகிறார்.




வெற்றித் திருநகர்

திரு அகிலன் எழுதிய 'வெற்றித்திருநகர்' கல்கியில் வெற்றிகரமாகத் தொடர்ந்து பிரசுரமானது நேயர்கள் அறிந்ததுதான். இத்தனை பெரிய சரித்திரக் கதையை ஓர் அமெச்சூர் நாடகக் குழுவினர் நாடகமாக்கி அரங்கேற்றுவதென்றால் அது எவ்வளவு கடினமான காரியம் என்பதை ஊகிப்பது கஷ்டமில்லை.

சிரம சாத்தியமான இக்காரியத்தை சதர்ன் ரிக்ரியேஷன்ஸார் செய்து காட்டினார்கள். ஏராளமான பொருட் செலவில் அரங்க நிர்மாணம் செய்து நாடகம் நடத்தினார்கள். கலை ஆர்வத்தால் உந்தப்பட்டு அமெச்சூர்கள் அரங்கேறுவதையே பாராட்ட வேண்டியது தான். பாத்திரத்தின் தன்மை அறிந்து நடித்தால் அதற்காக இன்னும் கொஞ்சம் பாராட்டலாம். நடிப்பில் வெற்றியும் பெற்று விட்டால் ரொம்ப ரொம்பப் பாராட்டலாம். இவ்வளவு பாராட்டுதல்களையும் ஏககாலத்தில் ஓர் அமெச்சூர் குழு பெறுவது சாத்தியமா? இந்த நாடகம் அத்தகைய வெற்றியைக் கண்டதா என்று கேட்டால், மேடை ஏறி ஏறி மெருகுற்றால்தானே இயலும்? ஆயினும் ஒன்று. வெற்றித் திருநகர் நாடகத்தில் சாளுவ நரசிம்மராக நடித்த வி. சீனிவாசன் நடிப்பில் பெருமளவுக்கு வெற்றி பெற்றார் என்றே சொல்லலாம். மற்ற கதாபாத்திரங்களைப் பற்றி இப்போது கவலைப்பட்டுக் கொண்டிருப்பானேன்!

வேகத்தில் அக்கறையும் ஆர்வமும் காட்டும் விஞ்ஞான யுகம் இது. விண்வெளிக் கப்பல்களைச் செலுத்தி சந்திரனில் மனிதனைக் குடியேற்றத் திட்டமிடும் காலம் இது. காய் கறி உற்பத்தியிலிருந்து கப்பல் கட்டும் தொழில் வரை எதிலும் வேகத்தை அதிகரிக்க வேண்டும் என்பதே மனிதனின் குறிக்கோளாக இருக்கிறது.

ஆகாய வீதியில் 'ஜெட்' விமானங்கள் தோன்ற ஆரம்பித்த பிறகு உலகின் ரயில் போக்குவரத்துக்கள் — முக்கியமாக நெடுந் தூர ரயில் பிரயாணங்களில் மேல் வகுப்புப் பிரயாணிகளை இழந்து விட்டது. ஐக்கிய அமெரிக்க நாட்டில் போதுமான பிர யாணிகள் இல்லாததால் ரயில்வேக்கள் தொடர்ந்து இயங்க முடியாத அளவுக்கு ஸ்தம்பித்திருக்கிறது. விமானங்கள் ரயில் வண்டிகளை வெற்றி கொள்ளும் இந்த நிலை இந்தியாவில் வர இன்னும் எத்தனையோ காலமாகும். எனினும் பொதுவாக உலகம்





எங்கிலுமே பிரயாணிகள் ரயில் வண்டிகளின் வேகத்தை அதிகப்படுத்த வேண்டும் என்ற அவா இருந்து வருகிறது.

நம் பாரதத்தில் ஓடும் ரயில் வண்டிகளின் மிக அதிக வேகம் மணிக்கு 65 மைல்கள் தான். வட அமெரிக்காவில் ஓடும் ரயிலின் அதிக வேகம் மணிக்குத் தொண்ணூறு மைல்கள். இருந்தாலும் நியூயார்க்குக்கும் வாஷிங்டனுக்கும் இடையே ஓடும் ரயில் வண்டிகளின் வேகத்தை மணிக்கு 110 மைல்களாக்க முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இந்த வேக விஷயத்தில் மற்ற உலக நாடுகளை யெல்லாம் முந்திக் கொண்ட பெருமை ஜப்பானுக்குத்தான். டோக்கி யோவுக்கும் ஒஸாகாவுக்கும் இடையே ஓடும் டோக்கைடோ எக்ஸ்பிரஸ்ஸின் வேகம் மணிக்கு 125 மைல்கள். உலக நாடுகளில் உள்ள ரயில்வே இலாக்காக்களைச் சேர்ந்த நிபுணர்களில் பலர் 'டோக்கைடோ'வின் 'சூபர் எக்ஸ்பிரஸ்' எப்படி இயங்குகிறது என்பதை நேரில் காண ஜப்பானுக் குப் போகிறார்கள். இந்த சூபர் எக்ஸ் பிரஸ் முறையை அமைக்க 414 கோடி ரூபாய்கள் செலவாகி யிருக்கிறது. இதில் 60 கோடி ரூபாய் உலக பாங்கியின் கடன். இந்த எக்ஸ்பிரஸ் ரயில் பாதையின் மொத்த நீளம் 320 மைல்கள். இத்தனை பொருள்களைச் செலவழித்த போதிலும் வேகத்தில் மட்டுமல்லாது பொருளாதார ரீதியிலும் இந்தத் திட்டம் வெற்றிகரமாக அமையுமாறு பார்த்துக் கொண்டதைப் பாராட்ட வேண்டும். ஜப்பானிய ரயில்வே இலாகாவினர் பூர்வாங்க ஆராய்ச்சிகள் பல நடத்திப் புதிய டோக்கைடோ இருப்புப் பாதை, வியாபார ரீதியிலும் தகுதி வாய்ந்ததுதான் என்பதை உறுதிப் படுத்திக் கொண்டனர்.

டோக்கியோவையும் ஒசாகாவையும் இணைக் கும் இந்த இருப்புப் பாதை பிரதான நகரங்களான டோக்கியோ, யோக ஹாமா, நாகோயா, க்யாடோ, கோபே, ஒசாகா ஆகிய நகரங்கள் வழியே செல்கிறது. இதன் பாதை யான 320 மைல்களும் ஜப்பானின் பன்னிரண்டு ஜில்லாக்களின் வழியாகச் செல்கிறது. அந்த நாட்டின் ஜனத் தொகையில் 43 சதவிகிதத்தினர் இந்தப் பன்னிரண்டு ஜில்லாக்களில் வசிக்கிறார்கள். நாட்டின் தேசிய வருமானத்தில் 40 சத விகிதமும், தேசியத் தொழில் உற்பத்தியில் 69 சத விகிதமும் இந்தப் பன்னிரண்டு ஜில்லாக்களிலிருந்துதான் கிடைக்கின்றன. இதிலிருந்து இந்தப் பன்னிரண்டு ஜில்லாக் களின் இருப்புப் பாதை எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் புரிந்து கொள்ளலாம். ஜப்பானிய அரசாங்கம் 1956ல் நடத்திய ஆராய்ச்சிகளின் முடிவில் ஒரு விஷயத்தை அறிந்தது. 1970க்குள் இந்தப் பகுதியில் செல்லும் இருப்புப் பாதை யில் பிரயாணி வண்டிகளின் போக்கு வரத்து 2.8 மடங்கும், குட்ஸ் வண்டிகளின் போக்குவரத்து 1.8 மடங்கும் அதிகமாகும் என்பதை அறிந்தார்கள். இப்போதுள்ள சம்பிரதாயமான ரயில்வே முறையினால் இதைச் சமாளிக்க முடியாது என்ற முடி வுக்கும் வந்தார்கள். இதைவிட வேகமாகச் செல்லக் கூடிய புதிய வண்டிகளை உருவாக்க வேண்டும் என்று திட்டமிட்டது தேசிய நெடுந் தூர இருப்புப் பாதை விசாரணைக் கமிட்டி. 'புதிய டோக்கைடோ எக்ஸ்பிரஸ் லைன்' என்ற புதிய பாதை டோக்கியோவுக்கும்

ஒசாகாவுக்கும் இடையே அவசியத் தேவை என்று நிர்மானித்தது. இதன் முக்கிய நோக்கம் இவ்விரு நகரங்களுக்குமான பிரயாண நேரத்தை ஆறரை மணியிலிருந்து மூன்று மணியாகக் குறைப்பதே.

இந்தப் புதிய இருப்புப்பாதை 43 மைல் நீளத்துக்கு மலைகளைக் குடைந்து உருவாக்கிய சுரங்கங்கள் மூலமும் 35 மைல் நீளத்துக்குப் பாலங்களின் மீதும் ரஸ்தாக்களின் குறுக்கீடு — லெவல் கிராஸிங் போன்றவை இல்லாமலும் உருவாகியுள்ளது. வேலை 1959ல் தொடங்கியது. பூர்வாங்க வெள்ளோட்டம் 1962ல் நடைபெற்றுப் பரிசீலிக்கப்பட்டது. அதாவது இந்தப் பாதையை மூன்றே வருடங்களில் உருவாக்கி விட்டார்கள். 1963ம் ஆண்டு மார்ச் மாதம் ரயிலை மணிக்கு 150 மைல் வேகத்தில் ஓட விட்டுப் பரிட்சித்துப் பார்த்தார்கள். 1964ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1ந் தேதியிலிருந்து புதிய டோக்கைடோ பாதையில் வண்டிகள் மக்களுக்காக மணிக்குச் சராசரி 125 மைல் வேகத்தில் ஓடத் தொடங்கின.


இந்த சூபர் எக்ஸ்பிரஸ் ரயில் வண்டித் தொடரில் 132 பேர் பிரயாணம் செய்யக் கூடிய இரண்டு முதல் வகுப்புப் பெட்டிகளும் 855 பிரயாணிகளுக்கான பத்து இரண்டாம் வகுப்புப் பெட்டிகளும் ஆக, பன்னிரண்டு பெட்டிகள் இணைக்கப்பட்டிருக்கும். மூன்றும் வகுப்பு கிடையாது. இரண்டாம் வகுப்புப் பெட்டிகள் இரண்டில் ஒவ்வொன்றிலும் ஒரு பாதி சிற்றுண்டி சாலையாக விளங்கும். முதல் வகுப்புப் பிரயாணிகளுக்கென்று தனி உணவு விடுதிப் பெட்டி இணைக்கப் பட்டிருக்கும்.

இரண்டு ரயில்கள் எதிரும் புதிருமாகச் செல்லும்போது பிரயாணிகள் அந்தப் பெரும் சத்தத்தைச் சகிக்க முடியாமல் காதுகளைப் பொத்திக் கொள்வதைப் பார்த்திருக்கிறோம் அல்லவா? டோக்கைடோ எக்ஸ்பிரஸுக்குள் காற்றே புக வழியில்லையாதலால் துளிச் சத்தமும் கேட்காது. குளிர்ச்சாதனப்படுத்தப்

ரயிலிலுள்ள நவீன உணவு விடுதி



வேகம்



சரித்திர மாணவன்

பட்டுள்ள இந்த ரயிலில் எந்த விதமான விளம்பரமும் செய்யப்படுவதில்லை. வண்டியினுள் விளம்பரப் பலகைகளை அநுமதிப்பதில்லை.

இந்தப் பாதையை அமைக்குமுன் இந்தப் பிராந்தியத்தின் பூகோள அமைப்பு, சீதோஷ்ண நிலைகள், புயல், வெள்ளம், மண் சரிவு, பாறைகள் உருண்டு வருதல் ஆகியவைகளைப்பற்றிய விவரங்களை யெல்லாம் இப்பாதை செல்லும் வழி நெடுக ஆராய்ந்து அதற்கான தற்காப்பு முறைகளைக் கைக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த விந்தை வண்டி தானியங்கு முறையில் கட்டுப்படுத்தப்பட்டு இயங்குவது. ஆகவே இதன் வேகம் குறிப்பிட்ட அளவுக்கு மேல் போகவே முடியாது. அப்படி ஏதாவது ஒரு வண்டி அதன் நிர்ணயிக்கப்பட்ட வேகத்துக்குமேல் போகு

< உலகில் விரைவாகச் செல்லும் டோக்கைடோ எக்ஸ்பிரஸ்

மானுல் அதற்கான பிரத்தியேக மின்சார அமைப்பு அதைத் தானகவே அதன் குறியீட்டு அளவு வேகத்துக்குக் கொண்டு வந்து விடும்.

டோக்கியோ ஸ்டேஷனில் உள்ள மத்திய ரயில் கட்டுப்பாடு நிலேயத்தில் 'புதிய டோக்கைடோ' பாதையில் செல்லும் ஒவ்வொரு வண்டியின் போக்குவரத்தையும் அங்கிருந்தவாறே கண்காணிக்க வசதியிருக்கிறது. இந்தப் பாதையின் பிராந்தியத்தில் வீசும் காற்றின் வேகம் வண்டிகளின் குறித்த கால ஓட்டத்துக்குத் தடங்கலாக இருக்கக் கூடாது என்பதில் கவனம் செலுத்துகிருர்கள். பாதை நெடுகிலும் அமைக்கப்பட்ட இருபத்தி நான்கு அனிமோ மீட்டர்களின் அறிக்கைகள் டோக்கியோ ஸ்டேஷனில் உள்ள மத்திய ரயில் கட்டுப்பாடு நிலேயத்தில் பதிவாகின்றன. இதை மிக உன்னிப்பாகக் கவனித்து வண்டிகளின் ஓட்டத்தைக் கண்காணிப்பவர்கள் உடனுக்குடன் விவரங்களே ரேடியோ டெலிபோன் மூலம் வண்டியை ஓட்டிச் செல்லும் டிரைவர்களுக்கு அறிவிப்பார்கள். இந்த வண்டிகளின் வேகத்தை விரைவிலேயே மணிக்கு 150 மைல்களாக்கத் திட்டமிட்டிருக்கிருர்கள்.

இதுவரை வட அமெரிக்காவின் மிக வேகமான வண்டி 'கனடியன் நேஷனல் ரயில்வே'யில் ஓடும் ரயில் வண்டிகள்தான். இதன் அதிகபட்ச வேகம் மணிக்கு 90 மைல்கள். ஆனுல் ஜப்பானிய ஐக்கிய அமெரிக்க சாதனேகளேக் கண்டபிறகு கனடா ஏழு பெட்டிகள் கொண்ட 'டர்போ' வண்டிகள் ஐந்தை வாங்குவதற்கு முடிவு செய்துள்ளது. இவ்வண்டிகள் ஒவ்வொன்றும் ஏழரைக் கோடி ரூபாய்களுக்கு மேல் விலே மதிப்புடையது.

உலகின் பல்வேறு பகுதிகளிலுள்ள ரயில்வே அமைப்புக்கள், மணிக்கு 125 மைல் வேகத்துக்கு இணையாகச் செல்லத் திட்டமிடுவதில் ஆர்வம் காட்டுகின்றன. இதற்குத் தண்டவாளங்களே இடைவெளி விட்டு இணைக்கும் இப்போதைய 'ஜாயின்டட் டிராக்ஸ்' முறை மாறி இணைப்பு இல்லாது அமைக்கும் 'வெல்டட் டிராக்ஸ்' இடம் பெற வேண்டியது அவசியமாகிறது. உலகம் முழுவதிலுமே மணிக்கு இருநூறு மைல் வேகத்தில் ரயில்கள் செல்வது சர்வ சாதாரணம் என்ற நிலே விரைவிலேயே வரக்கூடும்.


சோடா பாயீ (ஹிந்தி)

பெரிய பெரிய நடிகர்கள் ஒன்றுபோல நடித்து உருவாகிய பல திரைப்படங்களேப் பார்த்துப் பார்த்துப் பழகிய கண்களுக்குத் 'தம்பி' என்னும் பொருள் தரும் இந்த ஹிந்திப் படம் நிச்சயம் ஒரு மாற்றத்தைத் தரும். காரணம், இப்படத்தில் சிறுவர்களின் நடிப்பு சிறப்பாக அமைந்திருக்கிறது.

தமிழில் சில ஆண்டுகளுக்கு முன் வெளிவந்த 'அண்ணி'யின் ஹிந்திப் பதிப்புத்தான் சோடா பாயீ. சிறுவன் ராமுவாக வரும் மகேஷ்குமார், நடிப்பில் நிகரற்று விளங்குகிருன். அநாயாசமான அவனது நடிப்பும் துடிப்பும் கதையில் உள்ள பல குறைகளேயும் பலவீனங்களேயும் மூடி மறைத்துப் படத்துக்கு ஓர் ஓட்டம் தருகிறது. அவனுக்குத் துணையாக நடிக்கும் சிறுவன் ரிப்பினும் ஈடு கொடுத்து நடித்து இரண்டாவதாக நிற்கிருன். சிறுவர்களுடைய நடிப்புக்கு 'அண்ணி'யாக வரும் நூதனின் நடிப்பு நல்ல மெருகு கூட்டுகிறது. கருத்துச் செறிந்த ஒருசில பாடல்கள் கதைக்கு உயிரூட்டுகின்றன.

இவ்வளவு இருந்தும் நம்ப முடியாத சில பகுதிகள் குறுக்கிட்டுக் கதையின் விறுவிறுப்பைக் குலேக்கின்றன. கதைக்காக வேண்டிச் சின்னஞ் சிறு பாலகனுக்குப் பாகப் பிரிவினே செய்து வைப்பதும், அதற்குப் பின்னர் கதையை நடத்திச் செல்லும் முறையும் கருத்துக்கும் கற்பனேக்கும் இசைவு தருவதாக அமையவில்லே. முடியும் கட்டத்தில் உள்ள பின் பகுதி படு 'போர்.'

ஆயினும் சிறுவர்களின் சிறப்பான நடிப்புக்காகப் பார்க்க வேண்டிய படம்தான்.



கல்லுக்குள் ஈரம்

வெள்ளி விழா இரண்டாவது பரிசு நாவல்

ர. சு. நல்லபெருமாள்

அத்தியாயம் 34

எரிமலை குமுறியது!

டில்லிக்குச் செல்லும்போது ரங்கமணியை வழியனுப்ப இயலாமற் போனதற்கெல்லாம் சேர்த்து இப்போது திரிவேணி அவனை ரயில்வே ஸ்டேஷன்வரை கூட வந்து வழியனுப்பி வைத்தாள்.

''ஐயா நிருபரே! இந்த முறையாவது உங்கள் பிடிவாதத்தை விட்டு மகாத்மாவைப் பேட்டி காணுங்கள். நிருபர் என்றால் எல்லாரையும்தான் பேட்டி காண வேண்டும்'' என்றாள் திரிவேணி.

ரங்கமணி சிரித்துக் கொண்டே பதில் ஒன்றும் சொல்லாமல் ரயில் வண்டிக்குள் ஏறினான்.

''சுயேச்சைப் பத்திரிகை நிருபருக்குத் தனிச் சலுகை உண்டு. அதன்படி காந்தியைச் சந்திக்காமலும் வரலாம்'' என்றார் பக்கத்தில் நின்ற சர்தார்.

''இது சுயேச்சைப் பத்திரிகையின் தனிப்பட்ட குதர்க்கமான தர்மம் போலிருக்கிறது'' என்றாள் திரிவேணி. சர்தார் சிரித்துக் கொண்டே தலையை அசைத்தார்.

வண்டி புறப்பட்டு நகர்ந்த சமயம், ''அத்தையிடம் சீக்கிரம் வந்துவிடுவேன் என்று சொல்லு'' என்று திரிவேணியிடம் சொன்னான் ரங்கமணி. வண்டி கண்ணுக்கு மறையும்வரை பிளாட்பாரத்திலேயே நின்று திரிவேணி பார்த்துக் கொண்டிருந்தாள். வண்டியுடன் அவனுடைய இதயமும் சுழன்று ஓடுவதாகப் பிரமை தட்டியது. நினைவை ரயில் வண்டியைத் தொடரும்படி விட்டு விட்டு, வீடு நோக்கி நடந்தாள்.

* * *

பம்பாயில் விக்டோரியா டெர்மினஸ் ரயில்வே ஸ்டேஷனில் ரங்கமணி இறங்கியதும் சுற்று முற்றும் பார்த்தான். அவனுடைய பார்வை சற்றுத் தூரத்தில் நின்ற பெண்மீது விழுந்ததும் வியப்பினால் சிலையாக நின்று விட்டான். கண்களைக் கசக்கிக் கொண்டு நன்றாக உற்றுப் பார்த்தான். சந்தேகமே இல்லை. தேவிகாதான்! குஜராத்திப் பெண்ணைப்போல் உடை அணிந்திருந்தாள். ரங்கமணியிடம் சிரித்துக் கொண்டே வந்தாள்.

''உங்களை நான் எதிர்பார்க்கவே இல்லை'' என்றான் ரங்கமணி ஆச்சரியத்துடன்.

''தாஜ்மஹால் ஹோட்டலில் உங்களுக்கு ரிசர்வ் செய்யப்பட்டிருக்கிறது. வாருங்கள் உங்களை அங்கு விட்டு விட்டுப் போகிறேன்'' என்று கூறி வாசலை நோக்கி நடந்தாள் தேவிகா. அவளைத் தொடர்ந்து சென்றான் ரங்கமணி. ஒரு வாடகைக் காரில் ஏறி அமர்ந்தார்கள். கார், தாஜ்மஹால் ஹோட்டலை நோக்கி விரைந்தது.

''பாக்கியுள்ள கருவிகளை உங்களிடம் ஒப்படைக்கும் பொறுப்பைக் குப்தா எனக்குக் கொடுத்திருக்கிறார். நீங்கள் வந்த காரியம் இந்த முறை வெற்றிதான். கருவிகளை நாளை நானே இரவு உங்களிடம் கொண்டு வந்து சேர்க்கிறேன். அதுவரையில் இங்கும் நிருபராகவே சுற்றிக் கொண்டிருங்கள்'' என்றாள் தேவிகா.

இந்தியா கேட்டைக் கார் நெருங்கிக் கொண்டிருந்தது. அப்போது தேவிகா சொன்னாள்: ''நாளை இரவு ஒன்பது மணிக்கு இந்த கேட்டுப் பக்கம் வாருங்கள். நான் அதை உங்களிடம் தருகிறேன்.''

''அப்படியானால் நான் நாளை மறுநாள் ஊருக்குப் புறப்பட்டு விடலாம் அல்லவா?''

''ஓ....புறப்பட்டு விடலாம்.''

''உங்களை எப்போது மீண்டும் நான் சந்திக்க வேண்டும்?''

''நீங்கள் சந்திக்க வேண்டாம். நானே வருகிறேன். இன்று இரவு ஏழு மணிக்கு உங்களுடைய அறைக்கே வருகிறேன்'' என்றாள் தேவிகா.

ரங்கமணியை ஹோட்டலில் இறக்கிவிட்டுத் தேவிகா சென்றுவிட்டாள். அரை மணி நேரத்துக்குப் பிறகு ரங்கமணி ஹோட்டலின் மாடி வராந்தா வழியாக வந்து கொண்டிருந்த போது, ''ஹலோ மிஸ்டர் ரங்கமணி...'' என்று யாரோ உற்சாகத்துடன் கூப்பிட்டது கேட்கவே, வியப்புடன் திரும்பினான். அவனை நோக்கி மில்லர் விரைவாக வந்துகொண்டிருந்தார். ரங்கமணியின் கையை உற்சாகத்துடன் பற்றிக் குலுக்கினார்.

"எனக்குத் தெரியும், நீங்கள் கட்டாயம் வருவீர்கள் என்று. ஆனால் கொஞ்சம் பிந்தி விட்டீர்கள். நாளை காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் முடிகிறது. பரவாயில்லை. கூட்டம் முடியு முன்பாவது வந்து சேர்ந்தீர்களே, நானும் இங்குதான் தங்கியிருக்கிறேன்" என்றார் மில்லர்.

அவரைக் கண்டதில் ரங்கமணிக்கும் சந்தோஷம்தான். பேச்சுத் துணைக்கும் பொழுது போக்குக்கும் அவர் நல்ல நண்பர்தான்.

"நான் வந்து ஒரு வாரமாயிற்று. நீங்கள் இல்லையே என்று குறைப்பட்டுக் கொண்டிருந்தேன். நல்ல சமயத்தில் வந்து சேர்ந்து விட்டீர்கள். உங்களுக்கு முக்கியமான வேலை இருக்கிறது. செய்யத் தயாரா?" என்று கேட்டார் மில்லர்.

"என்ன வேலை?"

"ஜவாஹர்லாலைப் பேட்டி காண வேண்டும்."

"ஏன் உங்களால் முடியவில்லையா?"

"அவர் தங்கியிருக்கும் பங்களாவுக்குள் நுழைய இரண்டு முறை முயன்று பார்த்தேன். முடியவில்லை. காவற்காரன் உள்ளே விடவே மறுத்துவிட்டான். நிருபர்கள் யாரையும் உள்ளே விடக்கூடாது என்று கண்டிப்பான உத்தரவாம்."

"அப்படியானால் நான் மட்டும் எப்படி நுழைய முடியும்?" ரங்கமணி மலைத்தான்.

"உங்களால் முடியலாம். முயன்றுதான் பாருங்களேன். நான் அயல் தேசத்தவனானதால் என்னைக் கண்டதுமே வெளிநாட்டு நிருபராகத்தான் இருக்கும் என்று காவல்காரன் யூகித்து விடுகிறான்."

"எப்போது போக வேண்டும்?"

"நாளைக் காலையில் போகலாம். காலையில்தான் நேருவைத் தனிமையில் சாவதானமாகச் சந்திக்கலாம். முயன்று பார்ப்போம். அவ்வளவுதானே? இதில் என்ன நஷ்டம்?" என்றார் மில்லர். அவருடைய யோசனையை ஏற்றுக் கொண்டான் ரங்கமணி.

அவனுக்கு நிருபர் தொழிலில் முன்பே ரசனை ஏற்பட்டு விட்டது. தந்திரமாகத் தலைவர்களைப் பேட்டி காணுவதும், அவர்களுடைய அபிப்பிராயங்களைத் துருவித்துருவிக் கேட்டுத் தெரிந்து கொள்ளுவதும் அவனுக்கு மிகுந்த உற்சாகத்தைக் கொடுத்தன. நிருபர் தொழிலில் நிறைந்திருந்த சாகஸம் அவனுக்குப் பிடித்திருந்தது.

அன்று முழுவதும் மில்லருடன் பம்பாய் நகரைச் சுற்றிப் பார்த்தான். மாலையில் மலபார் ஹில்லில் இருவரும் நடந்து சென்று கொண்டிருந்த போது, சற்றுத் தூரத்திலிருந்த ஒரு பங்களாவைச் சுட்டிக்காட்டி, "அதுதான் ஜின்னாவின் பங்களா" என்றார் மில்லர்.

"அவர் இப்போது இருப்பாரா?" என்று ஆவலோடு கேட்டான் ரங்கமணி.

"நேற்று வரை அவரைக் காண முடியவில்லை" என்றார் மில்லர்.

இருவரும் அந்தப் பங்களாவுக்குப் பக்கத்தில் நடந்து சென்றபோது, மாடி வராந்தாவில் ஓர் ஒல்லியான உருவம், ஐரோப்பிய பாணியில் உடையணிந்து தோன்றியது.

"மிஸ்டர் ரங்கமணி, நமக்கு யோகந்தான்! ஜின்னா இருக்கிறார். வாருங்கள், அவரைச் சந்தித்துவிடலாம்" என்று பரபரப்புடன் கூறிக் கொண்டு அந்தப் பங்களாவின் வாசலை நோக்கி விரைந்தார்.

இவர்களைக் கண்ட ஜின்னா மாடியில் நின்றவாறே வரவேற்றார். "மாடிக்கு வாருங்கள்" என்று அழைத்தார். இருவரும் மாடிக்குச் சென்று தங்களை அறிமுகம் செய்து கொண்டார்கள்.

"நான் இருக்கிறேன் என்று எப்படித் தெரிந்தது? இன்றுதான் வந்தேன். நிருபர்களிடமிருந்து தப்புவது கடினந்தான்" என்று கூறிச் சிரித்தார் ஜின்னா. நிருபர்கள் இருவரும் அடக்கமாகச் சிரித்துக்கொண்டார்கள்.

"நல்ல வேளை! இப்போது வந்தீர்கள். இன்னும் அரைமணி கழித்திருந்தால் என்னைப்



பார்த்திருக்க முடியாது'' என்றார் ஜின்னா.

''வெள்ளையர்களை வெளியேற்றும் தீர்மானம் பற்றிக் காங்கிரஸ் ஆலோசிக்கிறதே'' என்றார் மில்லர்.

''வெறும் தீர்மானந்தானே!'' என்றார் ஜின்னா அலட்சியமாக.

''இதுவே புரட்சியைத் தூண்டலாம் அல்லவா?'' என்று கேட்டார் மில்லர்.

''இந்தச் சமயத்தில் எந்தவிதமான புரட்சியையும் பிரிட்டிஷ் அரசாங்கம் சகியாது. இந்தத் தீர்மானமே வீண்தான். காலத்துக்கேற்ற செய்கை அல்ல இது. இதில் வெற்றி நிச்சயம் கிடைக்காது'' என்றார் ஜின்னா சற்றுக் கடுமையுடன்.

''ஒரு வேளை புரட்சி தோன்றுமானால், முஸ்லிம் லீகும் பங்கு கொள்ளுமா?'' என்று கேட்டான் ரங்கமணி.

''பங்கு கொண்டால், பாகிஸ்தான் பிரிவினைக்கு உதவி செய்யுமா, காங்கிரஸ் கட்சி?''

''முதலில் பொதுப்படையான எதிரியை இந்த மண்ணிலிருந்து விரட்டக் காங்கிரஸுடன் முஸ்லிம் லீக் ஒத்துழைக்குமா?''

''அப்படி ஒத்துழைத்து விட்டுப் பிறகு புகழையெல்லாம் காங்கிரஸ் சுருட்டிக் கொள்ளவா? பிரிட்டிஷ் ஆட்சியை நீக்கிய பிறகு பாகிஸ்தானுக்காகக் காங்கிரஸ்காரர்களின் தயவை எதிர்நோக்கி நிற்க நான் தயாரில்லை. பிரிட்டிஷ் ஆட்சி நீங்கும்போது இங்கு பாகிஸ்தான் உதயமாகியிருக்க வேண்டும். எங்கள் பிரச்னையைத் தீர்க்காத எந்தச் செயலுக்கும் நான் ஆதரவு காட்டத் தயாரில்லை'' என்று அழுத்தமாகச் சொன்னார் ஜின்னா.





''பாகிஸ்தானை ஒப்புக் கொண்டு உங்கள் உதவியைக் காங்கிரஸ் நாடினால்....?'' என்று மில்லர் குறுக்கிட்டுக் கேட்டார்.

''பாகிஸ்தானை இந்தக் காங்கிரஸ் ஒப்புக் கொண்டு ஆக வேண்டியதில்லை. அது ஒப்புக் கொண்டாலும், கொள்ளாவிட்டாலும் பாகிஸ்தான் இல்லாமல் இந்திய சுதந்திரம் இல்லை'' என்றார் ஜின்னா சற்றுக் கோபத்துடன். பிறகு, ''எனக்கு நேரமாகிவிட்டது. இன்னொரு நாள் சந்திக்கலாம்'' என்று கூறிக் கொண்டு எழுந்தார்.

ஜின்னாவுடன் பேட்டியை முடித்துக் கொண்டு இருவரும் வெளியே வந்தபோது மாலை ஆறு மணியாகி விட்டது.

''இந்தப் பேட்டியைப் பற்றிய செய்தியை உடனே அமெரிக்காவுக்குத் தந்தியில் அனுப்ப வேண்டும்'' என்று கூறிய மில்லர், அந்தப் பக்கமாக வந்த ஒரு வாடகைக் காரை நிறுத்தினார். அதில் இருவரும் தந்தி நிலையத்துக்கு விரைந்தார்கள். அமெரிக்காவுக்குத் தந்தியைக் கொடுத்துவிட்டு ஹோட்டலுக்குப் புறப்பட்டார்கள்.

''ஜின்னாவின் பிடிவாதம் தளரவில்லையே?'' என்றான் ரங்கமணி.

''ஏன் தளரப்போகிறது? இவரைத் துருப்புச்சீட்டாக வைத்துக்கொண்டுதானே, பிரிட்டிஷ்காரர்கள் இந்திய அரசியலில் சூதாடிக் கொண்டிருக்கிறார்கள் மிஸ்டர் ரங்கமணி! தலைவிதி என்பது இதுதான்.''

இருவரும் ஹோட்டலை அடைந்தபோது ஏழு மணியாகி விட்டது. தேவிகாவுக்காக வெகு நேரம் காத்திருந்தான் ரங்கமணி. அவள் வரவே யில்லை. எட்டு மணிக்கு அறைக் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டுப் பரபரப்புடன் எழுந்து கதவைத் திறந்தான். வாசலில் முன்பின் தெரியாத ஓர் இளைஞன் நின்று கொண்டிருந்தான். அவன் கையில் இரண்டு பெரிய புத்தகங்கள் இருந்தன.

''என்ன வேண்டும்?'' என்று ஆங்கிலத்தில் கேட்டான் ரங்கமணி.

''உங்கள் பெயர் என்ன?'' என்று அந்த இளைஞன் கேட்டான்.

''ரங்கமணி. உங்களுக்கு என்னவேண்டும்?''

''தேவிகா அனுப்பினாள்!'' என்றான் இளைஞன். உடனே அவனை அறைக்குள் அழைத்து வாசற்கதவைத் தாளிட்டான் ரங்கமணி. கையிலிருந்த புத்தகங்களை மேஜையின் மீது வைத்துவிட்டு நாற்காலியில் அமர்ந்தான் இளைஞன்.

''உங்கள் பெயர்?'' என்று ரங்கமணி கேட்டான்.

''சங்கர்தேவ். இன்று தேவிகாவினால் வர முடியவில்லை. நாளை இரவு இதே நேரத்துக்கு உங்களிடம் ஒரு பெட்டியை இங்கேயே கொண்டு வந்து தருகிறேன்'' என்றான் சங்கர்தேவ்.

''நீங்கள் யார்? என்ன செய்கிறீர்கள்?'' ரங்கமணி சந்தேகத்துடன் கேட்டான்.

''ரவீந்திரசென் குப்தாவைச் சேர்ந்த ஆள்தான். இங்கே ரயில்வே போலீஸாக இருக்கிறேன். விக்டோரியா டெர்மினஸில் எனக்கு வேலை.''

''தேவிகா வேறு என்ன சொல்லி அனுப்பினாள்....?''

''உங்களை நாளை மறுநாள் ரயில் வண்டியில் ஏற்றிவிடும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்திருக்கிறாள்.''

''ஏன், நான் போய்க் கொள்ள மாட்டேனா?''

''நாளை மறுநாள் பம்பாயில் கலவரம் ஏற்படலாம். நாளை இரவு காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் முடிந்தபிறகு, விடிவதற்குள் தலைவர்கள் அனைவரையும் கைது செய்யப் போகிறார்கள்'' என்றான் சங்கர்தேவ் இரகசியமாக.

''ஆ.... அப்படியா?''

''ஆமாம். அதனால் இங்கு குழப்பம் ஏற்படலாம். அதனால்தான் உங்களைப் பத்திரமாக ரயில் வண்டியில் ஏற்றிவிட வேண்டியிருக்கிறது.''

''நாளைக் காலையிலேயே பெட்டியைக் கொடுங்களேன். நாளையே ஊருக்குப் போய் விடுகிறேன்.''

''அது பம்பாய்க்கே நாளை மாலை ஆறு மணிக்கு மேல்தான் வந்து சேருகிறது'' என்று கூறிவிட்டு எழுந்து மேஜையின் மீதிருந்த புத்தகங்களை எடுத்து ரங்கமணியிடம் நீட்டினான் சங்கர்தேவ்.

''இந்தப் புத்தகங்களை உங்களிடம் கொடுக்கும்படி தேவிகா சொன்னாள்'' என்றான்.

புத்தகங்களை வாங்கிப் பிரித்தான், ரங்கமணி. அப்படியே அதிர்ச்சி அடைந்து விட்டான். புத்தகத்துக்குள் ஒரு கைத் துப்பாக்கி இருந்தது.

வெளியே பார்ப்பதற்குப் பைண்டு செய்த பெரிய கனத்த புத்தகமாகத்தான் இருந்தது. ஆனால் உள்ளே கைத்துப்பாக்கி அளவுக்குத் தாளை வெட்டிவிட்டு இடையில் துப்பாக்கி வைக்கப்பட்டிருந்தது. ரங்கமணி பரபரப்புடன் மற்றொரு புத்தகத்தையும் திறந்தான். அதற்குள்ளும் ஒரு துப்பாக்கி இருந்தது.

''இவைகளைச் சர்தார் சொக்கலிங்கம் பிள்ளையிடம் சேர்ப்பிக்க வேண்டுமாம்!'' என்றான் சங்கர்தேவ். புத்தகங்கள் இரண்டையும் பத்திரமாகத் தன்னுடைய தோல்பெட்டிக்குள் வைத்துப் பூட்டினான் ரங்கமணி.


''தற்போது இரண்டு துப்பாக்கிகள்தான். இதே மாதிரி புத்தகங்களைப் பார்சலில் சுயேச்சைப் பத்திரிகை விலாசத்துக்கு அடிக்கடி அனுப்பி வைப்போம்'' என்றான் சங்கர்தேவ்.

இதைக் கேட்டு ரங்கமணி பிரமிப்படைந்தான். அடேயப்பா, விடுதலை இயக்க வீரர்கள் எவ்வளவு கட்டுக்கோப்புடன் இரகசியமாகச் செயலாற்றுகிறார்கள்! இதை உணர்ந்த போது ரங்கமணியின் உடல் சிலிர்த்தது. வியப்புடன் சங்கர்தேவையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான். சிறிது நேரத்தில் சங்கர்தேவ் விடை பெற்றுக் கொண்டு போய் விட்டான்.

மறுநாள் காலையில் ஏழு மணிக்கெல்லாம் ரங்கமணியை எழுப்பி விட்டார் மில்லர். எட்டு மணிக்குள் இருவரும் ஒரு வாடகைக் காரில் ஜவாஹர்லால் தங்கியிருந்த பங்களா

விவேகத்துடன் சரியான கலரை






தேர்ந்தெடுங்கள்!



ஷாலிமார்

ஆர்டிஸ்ட் கலர்கள் மூலம் உங்களுடைய திறமைக்கு முழு வாய்ப்பு அளியுங்கள்

தொழில் முறையாயினும் சரி, பொழுதுபோக்குஆயினும் சரி, மிக உன்னதமான வர்ணங்களே உங்களுக்கு திருப்தி அளிக்க முடியும். அந்த உன்னதமான வர்ணங்கள் இறக்குமதி செய்யப்பட்ட மேலான மூலப் பொருள்களைக்கொண்டு உஷ்ணப் பிரதேசத்திற்கேற்ற வகையில் தயார் செய்யப்பட்டுள்ளன. நிலைத்து நிற்கக் கூடியவை. உயிரோட்டம் உள்ளவை. மற்றக் கலவைகளில் வேகமாக சேரக் கூடியவை. சுருங்கக்கூறின், அவை ஷாலிமார் ஆர்டிஸ்ட் கலர்களே. எந்தக் கலரை தேர்ந்தெடுத்தாலும் நீங்கள் ஒரு போதும் தவறு செய்யமாட்டீர்கள்.



ஷாலிமார் ஆர்டிஸ்ட் கலர்களின் வகைகள்

ஆயில் கலர்கள்: 8CC டியூப் 21 வர்ணங்கள்; 40CC டியூப் 21 வர்ணங்கள்; 65CC டியூப். ப்ளேக், ஸிங்க், டிடானியம் ஒயிட்.

வாட்டர் கலர்கள்: 8CC டியூப் 18 வர்ணங்கள்.

போஸ்டர் கலர்கள்: 42 CC பாட்டில் 18 வர்ணங்கள்.

வாட்டர் புருப் டிராயிங் இங்க் — கருப்பு: 14CC பாட்டில்.

SP 3897

ஷாலிமார் ஆர்டிஸ்ட் சாதனங்கள்

ஷாலிமார் ஆர்டிஸ்ட் கலர்கள் கீழ்க்கண்ட இடங்களிலுள்ள ஷாலிமார் பெயிண்ட்காரியாலயங்களிலும்- கல்கத்தா, நியூ டெல்லி, பம்பாய், மதராஸ், கான்பூர், கௌஹாத்தி—மற்றும் முதன்மையான ஆர்டிஸ்ட் சாதனங்கள் விற்பனை செய்யும் எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

வுக்கு விரைந்தார்கள். வழியில் ஒரு பூக்கடையில் காரை நிறுத்திக் கொஞ்சம் ரோஜாப் பூக்களை வாங்கினார் மில்லர்.

''எதற்கு?'' - ரங்கமணி கேட்டான்.

''நேருவுக்கு ரோஜாப் பூ என்றால் பிடிக்கும். இதை வைத்துக் கொண்டு நீங்கள் பங்களாவுக்குள் எப்படியும் நுழைந்துவிட வேண்டும்'' என்றார் மில்லர்.

நேரு தங்கியிருந்த பங்களாவுக்குச் சற்றுத் தள்ளிக் காரை நிறுத்தி ரங்கமணியை ரோஜாப்பூவுடன் அனுப்பிவைத்தார் மில்லர்.

ரோஜாப் பூவை ஒரு வர்ணத் தாளில் சுற்றி எடுத்துக் கொண்டு பங்களா வாசலை நெருங்கினான் ரங்கமணி. வாசலில் நின்ற காவற்காரன் மறித்தான்.

''நேருஜிக்கு ரோஜாப்பூ கொடுத்தனுப்பினார்கள்'' என்றான் ரங்கமணி ஹிந்தியில்.

''யார் ?'' என்று அதட்டிக் கேட்டான் காவற்காரன்.

''காங்கிரஸ் அக்கிராசனர். இதை அவரிடம் நேரில் கொடுத்துத் தகவல் கேட்க வேண்டும்'' என்றான் ரங்கமணி.

''இப்படிக் கொடு, நான் கொண்டு போய்க் கொடுக்கிறேன் '' என்றான் காவற்காரன்.

''அது முடியாது. ரோஜாப்பூவை அவரிடம் நேரில் கொடுக்கும்படி தான் எனக்கு உத்தரவு'' என்றான் ரங்கமணி.

'' அது எப்படியோ உள்ளே போகக் கூடாது'' என்றான் காவற்காரன்.

ரங்கமணி செய்வதறியாது திகைத்தான். இந்தச் சமயத்தில் ஜவாஹர்லால் நேரு, குளித்துவிட்டுப் புத்துடை தரித்துக் கொண்டு மலர்ந்த முகத்துடன் வராந்தாவுக்கு வந்தார். வாசலில் ரங்கமணி முரண்டு செய்வதைப் பார்த்து விட்டு, ''என்ன அது?'' என்று கேட்டார்.

''ரோஜா!'' என்று கூறிக்கொண்டே ரங்கமணி தாளில் சுற்றியிருந்த ஒற்றை ரோஜாப் பூவை எடுத்துக் காட்டினான்.

''கொண்டு வா....கொண்டு வா'' என்று உற்சாகத்துடன் கூறினார் நேரு. ரங்கமணி உள்ளே நுழைந்து விட்டான். காவற்காரன் அசடு வழிய நின்றான்.

ரங்கமணி வராந்தாவுக்குச் சென்று நேருவை நெருங்கி ரோஜாப்பூவை அவரிடம் நீட்டினான். நேரு அதை வாங்கித் தம்முடைய கோட்டில் செருகிக் கொண்டார். அந்த மலரைப் போலவே அவருடைய முகமும் மலர்ந்திருந்தது.

''ஏது இந்தப் பூ?'' — நேரு கேட்டார்.

''நான்தான் கொண்டு வந்தேன்.''

''நீ.... நீ.... யார் ?''

''எனக்குத் தமிழ் நாடு....''

''ஓ.... உன்னை இதற்கு முன்பு எங்கோ பார்த்திருக்கிறேனே.....'' என்று கூறிவிட்டு நேரு தம் நெற்றியைத் தடவி விட்டுக் கொண்டார்.

''தில்லியில் கிரிப்ஸ் வந்த போது உங்களைச் சந்தித்திருக்கிறேன்.''

''ஓ.... நிருபர் அல்லவா நீ.....! இதென்ன நான் எதிர்பாராத சமயத்தில் இப்படிப் பேட்டிக்கு வந்து விட்டாயே. சாமர்த்தியமாகத் தான் வந்திருக்கிறாய்!'' என்றார் நேரு. ரங்கமணி சிரித்துக் கொண்டான்.



''ஏன் உங்க வீட்டுக்காரர் இரண்டு மூன்று வாரமா உப்புச் சப்பில்லாமல் கதை எழுதுகிறார்?''

''ஆமாண்டியம்மா... உடம்பு சரியில்லாமல் பத்தியமா டாக்டர், அவரை இருக்கச் சொல்லியிருக்கிறார். எதிலேயும் உப்பு சேர்க்க வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்!''

''இன்னும் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டமே முடியவில்லையே. அதற்குள் என்னிடமிருந்து நீ என்ன தெரிந்து கொள்ள முடியும் ?'' என்று கேட்டார் நேரு.

''எந்தவிதமான நடவடிக்கை எடுப்பதாகத் திட்டம்?'' என்று கேட்டான் ரங்கமணி.

''இப்போதைக்கு இந்தியாவை விட்டு பிரிட்டிஷார் வெளியேறிவிட வேண்டும் என்று தான் தீர்மானம். அவர்களை வெளியேற்றக் கிளர்ச்சி நடத்த வேண்டும்.''

''எந்த விதமாக?''

''அது பற்றி இன்னும் திட்டம் உருவாகவில்லை. பகிரங்கப் புரட்சி நடத்த வேண்டும் என்பதுதான் இப்போதையத் தீர்மானம். அதை எப்படி நடத்த வேண்டும் என்பதைப் பற்றிப் பின்னால்தான் திட்டம் வகுக்க வேண்டும்.''

''மகாத்மா ஏற்கனவே அதற்கும் திட்டம் வகுத்து விட்டாரா ? அந்தத் திட்டம் அஹிம்சையின் அடிப்படையில்தானே இருக்கும்?''

''ஆமாம், ஆமாம். எந்தவிதப் புரட்சியாயிருந்தாலும் அஹிம்சை முறையில்தான் நடைபெற வேண்டும். ஆனால் காந்திஜி இது பற்றி இன்னும் திட்டம் தயாரிக்கவில்லை.''

''இந்தத் தீர்மானத்தையே பிரிட்டிஷ் அரசாங்கம் சகிக்காவிட்டால்?'' என்று ரங்கமணி கேட்டான்.

''சகிக்கா விட்டால் என்ன? பிரிட்டிஷார் சகிக்க வேண்டும் என்றும் நாம் எதிர்பார்க்கவில்லையே ! தீர்மானம் முடிந்த பிறகு புரட்சியை எப்படி நடத்துவது என்பதை ஆராய வேண்டியதுதான்'' என்றார் நேரு உணர்ச்சியுடன்.

''ஒருவேளை, நாளையே தலைவர்கள் அனைவரையும் கைது செய்து விட்டார்கள் என்றால்....?''

''ஓ.... அப்படியும் நடக்கும் என்கிறாயா?'' நேரு வியப்புடன் கேட்டார்.

''நடக்கும் என்று சொல்ல வில்லை. ஒரு வேளை நடந்தால்....?''

"நடந்தால், மற்றப் பொறுப்புக்களை மக்களே ஏற்றுக் கொள்ளுகிறார்கள்....." என்றார் நேரு ஆவேசத்துடன்.

"அப்படியானாலும் புரட்சி பலாத்காரப் பாதையில் சென்று விடுமே?"

"அதற்கு என்ன செய்ய முடியும்? அதனுடைய பலாபலன்களை பிரிட்டிஷ் ஆட்சி ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான். காந்திஜியும் மற்றவர்களும் வெளியிலிருந்தால் கிளர்ச்சிக்கு அவர்கள் பொறுப்பேற்க முடியும். அவர்களைச் சிறைக்குள் தள்ளிய பிறகு நடக்கும் விஷயங்களுக்கு அரசாங்கந்தான் பொறுப்பு ஏற்க வேண்டும்" என்றார் நேரு சற்றுக் கடுமையுடன்.

நேருவுடன் பேசி முடித்துவிட்டு வெளியே வந்த போது ரங்கமணிக்கு உற்சாகம் தாங்கவில்லை. பங்களாவை விட்டுத் தள்ளி நின்ற காரை நோக்கி ஓடினான். மில்லர் பரபரப்புடன் எதிரே ஓடி வந்தார். உற்சாக மிகுதியால் ரங்கமணியின் கைகளைப் பற்றி அழுத்தினார். அவனையும் அழைத்துக் கொண்டு தந்தி நிலயத்தை நோக்கி விரைந்தார்.

"மிஸ்டர் ரங்கமணி! வேறு எந்த நிருபரும் சாதிக்க முடியாததைச் சாதித்துவிட்டீர்கள். உங்கள் திறமைக்கு நான் தலை வணங்குகிறேன்" என்றார் மில்லர்.

"உங்களுடைய அநுபவத்துக்குமுன் நான் எம்மாத்திரம்?"

"இருந்தாலும் ஆரம்பத்திலேயே இவ்வளவு சாமர்த்தியம் உங்களுக்கு அமைந்தது அதிர்ஷ்டந்தான்" என்றார் மில்லர்.

அன்று பகல் முழுவதும் தூங்கியே பொழுதைக் கழித்தான் ரங்கமணி. இரவு எட்டு மணிக்குச் சங்கர்தேவ் வந்தான்.

"இன்னும் சாமான் வந்து சேரவில்லை. நடு ஜாமத்துக்குள் வந்துவிடும். உங்களிடம் காலையில் ஏழு மணிக்கெல்லாம் கொண்டு வந்து ஒப்படைக்கிறேன்."

"தேவிகாவைத் திரும்பப் பார்க்கவே முடியவில்லையே."

"முக்கியமான வேலையில் ஈடுபட்டிருக்கிறாள். முடிந்தால் நாளை உங்களை ஊருக்கு அனுப்பி வைக்க வருவாள்."

"காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் இன்று முடிந்திருக்கும், இல்லையா?"

"நாளைக் காலைக்குள் அனைவரையும் கைது செய்து வேறு இடத்துக்குக் கொண்டு போகப் போகிறார்கள். அதிகாலையில் விக்டோரியா டெர்மினஸில் எனக்கு டியூட்டி போட்டிருக்கிறார்கள். அவர்களை ஏற்றிக் கொண்டு விடுவதற்குள் ரயில் புறப்பட்டு விடும்" என்று இரகசியமாகச் சொன்னான் சங்கர்தேவ்.

"நான் காலையில் விக்டோரியா டெர்மினஸ் ரயில்வே ஸ்டேஷனுக்கு வரலாமா?"

"யாரையும் அநுமதிக்க மாட்டார்கள். மேலும் இது பரம இரகசியம். விடிந்த பிறகுதான் கைது செய்த செய்தியே உலகத்துக்குத் தெரியும். அதற்குள் ரயில் வண்டி நூறு மைல் போய் விட்டிருக்கும்" என்றான் சங்கர்தேவ்.

"எனக்கு ஓர் உதவி செய்ய முடியுமா?"

"என்ன?"

"தலைவர்கள் போவதை நான் பார்க்க எப்படியாவது ஏற்பாடு செய்ய வேண்டுமே!" என்றான் ரங்கமணி மிகுந்த ஆவலுடன்.

சங்கர்தேவ் சிறிது நேரம் யோசித்தான். வழி ஒன்றும் தோன்றவில்லை.

"நான் வழி சொல்லட்டுமா? "உங்களுடைய போலீஸ் உடையை எனக்குக் கொடுங்கள். உங்களுடைய ஸ்தானத்தில் நான் ஸ்டேஷனுக்குள் நுழைந்துவிடுகிறேன்" என்றான் ரங்கமணி.

"நல்ல யோசனைதான்! நாளை அதிகாலையில் எனக்கும் இன்னும் இரண்டு பேருக்கும் மட்டுந்தான் ஸ்டேஷனில் டியூட்டி போட்டிருக்கிறார்கள். ஸ்டேஷனில் வேறு ரயில்வே போலீஸின் கூட்டம் இருக்காது. இது பரம ரகசியமாக நடப்பதால் போலீஸ்காரர்களின் எண்ணிக்கையைக் கூடக் குறைத்துவிட்டார்கள். கைதிகளைப் போலீஸ் கமிஷனர் பொறுப்பில்தான் ஸ்டேஷனுக்குக் கொண்டு வருகிறார்கள். ஒருசில ராணுவ அதிகாரிகளும் வருவார்கள். என் போலீஸ் உடையை நீங்கள் அணிந்து கொண்டு செல்லுங்கள். காலையில் மூன்று மணிக்கே விக்டோரியா டெர்மினஸுக்குச் சென்றுவிட வேண்டும். உங்களைப் பற்றிச் சந்தேகம் கொள்வதென்றால் அது ரயில்வே போலீஸாகத்தான் இருக்கும். அப்போது ஸ்டேஷனில் உங்களைச் சேர்த்து ரயில்வே போலீஸ்காரர்கள்தான் இருப்பார்கள். அதில் ஒருவன் நம்முடைய ஆள்தான். அவனிடம் சொல்லி வைத்துவிடுகிறேன். ரயில் வண்டி சென்றதும் நீங்கள் தாமதியாமல் ஸ்டேஷனை விட்டு வெளியேறி விட வேண்டும்" என்றான் சங்கர்தேவ். ரங்கமணி கவனமாகக் கேட்டுக் கொண்டான்.

அதிகாலையில் இரண்டு மணிக்கு வந்து ரங்கமணியை அழைத்துப் போவதாகச் சொல்லிவிட்டுச் சங்கர்தேவ் சென்றுவிட்டான். ரங்கமணிக்கு உற்சாகம் தாங்கவில்லை. மில்லரின் அறைக்கு ஓடினான். "காலையில் தலைவர்கள் அனைவரையும் கைது செய்யப் போகிறார்கள்" என்றான் இரகசியமாக.

"ஆ..... அப்படியா....? உங்களுக்கு எப்படித் தெரிந்தது?"

"எப்படியோ தெரிந்தது..... தலைவர்கள் கைதாகிச் செல்லும் போது முதலில் நமக்கு மட்டும் பேட்டி கிடைத்தால் எப்படி?"

"ஆ..... அற்புதமான 'ஸ்கூப்' ஆயிற்றே. அந்த அதிர்ஷ்டம் நமக்கு எங்கே கிடைக்கப் போகிறது? அதற்குத் தலைவிதி நன்றாக அமைய வேண்டும் சார்!" என்றார் மில்லர்.

"தலைவிதி அமைந்திருக்கிறது. காலைவரை பொறுங்கள். நான் பேட்டியை முடித்து விட்டு வந்து செய்தியை உங்களிடம் சமர்ப்பிக்கிறேன். போதுமா?"

"எப்படி மிஸ்டர், எப்படி?" — பரபரப்புடன் கேட்டார் மில்லர்.

"அதை யெல்லாம் நீங்கள் கேட்கக்கூடாது. பரம இரகசியம். உங்களுக்குக் காலையில் ஆறு மணிக்குச் செய்தி தந்துவிடுகிறேன்."

"பிரமாதம் மிஸ்டர் ரங்கமணி. நீங்கள் அமெரிக்க நிருபர்களையே தோல்வியடையச் செய்துவிடுவீர்கள் போல் இருக்கிறதே!" என்று வியப்புடன் கூறினார் மில்லர்.

ரங்கமணி அதிகாலையில் எழுந்திருக்க வேண்டியிருந்ததால் சீக்கிரமே படுக்கச் சென்று விட்டான். (தொடரும்)


களவோ?
அல்லவே அல்ல!
அவளைப் போலவே அதே அளவுக்கு
அவனுக்கும் சொந்தம் லக்மே டால்கம்
இதயம் கவர்ந்த டால்கம். அவளைப்போலவே அவனுக்கும். கொள்ளைகொண்ட நறுமணம். அவளைப் போலவே அவனுக்கும். பகிர்ந்து பகிர்ந்து இன்புறும் ஈருடல் உரிமை. நீராடிய மேனிமீது தாராளமாகப் பொழியும் பயன், நீடித்து நிலவும் புத்துணர்ச்சி. 'லக்மேகரமான' புதுமலர்ச்சிக்கு வரவுகூறி வாழ்விப்பது லக்மே டால்கம்.
லக்மே
டால்கம்
Lakmé
நான்கு வகை நறுமணங்களில் உங்களை அடைகிறது: லேவெண்டர், வெட்டிவேர், சந்தனம், நிர்வாண்
ASP/LT-ID/67 TAM

"உஷ்!"

சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டே வந்தவர், சட்டென்று நிறுத்தி விட்டார்.

காரணம், 'உஷ்' என்னும் ஒலியே அவருக்கு 'அலர்ஜி'.

ஏன், தெரியுமா? விஞ்ஞானத்தைச் சிறப்பாகப் பயின்றபின், அவர் மேல் நாடு சென்றிருந்தாராம். அங்கே பல படங்களைப் பார்த்து மகிழ்ந்த அவருக்கு, 'படம் எடுத்தால் இப்படியல்லவா எடுக்க வேண்டும்?' என்று தோன்றியிருக்கிறது. மேல் நாட்டிலிருந்து திரும்பியதும் திரும்பாததுமாக 'அங்குஷ்' என்று ஒரு படம் எடுத்தாராம். முழுக்க முழுக்க மேல் நாட்டு வாடை வீசிய அந்தப் படம் தமக்குப் பெரும் புகழும் தேடித் தரப் போகிறது என்று மனத்துள் மகிழ்ந்த அவரை அங்குசமாகத் தாக்கியது அந்தப் படம். ஆம், பெட்டியைச் சரணடைந்து தூங்கியது. அதன் தாக்கத்திலே அவர் விழித்துக் கொண்டார்.

'அங்குஷ்' படத்தில் சூடு கண்ட பின், ரசிகர்களின் உள்ளத்தைப் புரிந்து கொண்டு பல படங்களை எடுத்தார். அங்குசம் பாய்ச்சி அவரது சிந்தனையைத் திசை திருப்பிவிட்ட ரசிக மக்கள்

அங்குசம் தாக்கிய டைரக்டர்!

ஆதரவு நல்கியதன் பயனாகப் பெரும்பான்மையான அவரது படங்கள் வெற்றி வாகை சூடிக்கொண்டன.

காரணம், அவர் ரசிகர்களின் மனமறிந்து, மண்ணின் பண்பு கெடாது, படம் எடுக்கத் தொடங்கியதேயாகும். அவருக்குப் புகழ் சேர்த்துத் தங்களுக்கும் பெருமை தேடிக் கொண்ட படங்களில் சில சமீபத்தில் சென்னை 'புளூ டைமண்ட்' தியேட்டரில் திரையிடப்பட்டன.

வங்கத்திலே புகழ் பெற்ற டைரக்டர்களில் ஒருவரான ஸ்ரீ தபன் சின்ஹாவின் வாரத்தைச் சென்னையிலே கொண்டாட வைத்த பெருமை டைரக்டர் ஸ்ரீ கிருஷ்ணசாமியைச் சாரும்.

அடக்கமே உருவான ஸ்ரீ சின்ஹா தமது புகழுக்குப் புகழ் சேர்க்கும் படங்களைப் பற்றிக் கூறுகிறார்: "எனது கலை வளர்ச்சிக்குக் காரணம் நான் அல்ல; ரசிகப் பெருமக்கள் தரும் ஆதரவுதான். அவர்களுடைய ரசனை வளர வளர என் கலையார்வமும் வளருகிறது. அதுவே படத் துறையில் புதுமையைக் கையாளத் தூண்டுகிறது. இங்கு காட்டப் படவிருக்கும் படங்கள் நான் எடுத்த பழைய படங்கள். நாளுக்கு நாள் மாறும் ரசனையிலே இவை எத்தனை தூரம் தலை தாக்கி நிற்கும் என்று கூற முடியாது. இருந்தாலும் என் கலை வளர்ச்சிக்கு இவை ஓர் உதவுகோலாக இருந்திருக்கின்றன."

உண்மையிலேயே ஸ்ரீ சின்ஹா காவிய நயமும் கலை உணர்வும் படைத்த சிறந்த எழுத்தாளர்; பண்பில் தோய்ந்த டைரக்டர். அவருக்கு வாய்த்திருக்கும் மனைவியும் கல்வி கேள்விகளில் சிறந்தவர். சிறந்த நடிகை. உயர்ந்த டைரக்டர். அருந்ததி என்னும் பெயர் பூண்ட இவரது ஒத்துழைப்பும் ஸ்ரீ சின்ஹாவின் கலைத் திறனுக்கு மெருகூட்டுகிறது.


சென்னையில் திரையிடப்பட்ட படங்களில் இவரது 'நிர்ஜன சைகதே' அகில உலகத் திரைப்பட விழாவில் 'வெள்ளி மயிலை'ப் பரிசாகப் பெற்றது. வெற்று மணலிலே மூன்று கதாபாத்திரங்களை நடக்க விட்டு, கதையின் முடிவைச் சூசகமாகக் கோடி காட்டியிருப்பது இவரது சிறந்த டைரக்ஷனுக்கு ஓர் அத்தாட்சி.

'க்ஷுதித பாஷாண்' இசையைக் கையாளும் முறைக்கு ஓர் எடுத்துக்காட்டு. 'க்ஷணிகேர் அதிதி' இவர் கையாளும் உத்திகளுக்கு ஓர் எழிற்கூட்டு.

இப்படியாகச் சிறப்புகளைக் கூறிக்கொண்டே போனாலும், வங்க மொழிப் படங்களில் ஒரு பெருங் குறையைக் காணவே செய்கிறோம். எந்தக் காட்சியையும் சவுக்க காலத்தில் நிதானமாகக் காட்டிப் பார்ப்போரைப் 'போர்' உறச் செய்து விடுகிறார்கள்.

இந்தக் 'குறை நிறை'யைத் தபன் சின்ஹா விடத்திலும் காண்கிறோம். தமது புதிய படங்களில் ஒருவேளை இக் குறைகளைக் களைந்திருப்பாரோ, என்னவோ?

என்னதான் சொன்னாலும் வங்கத் திரையுலகத்திலிருந்து இந்தியத் திரையுலகம், குறிப்பாகத் தமிழ்த் திரையுலகம் கற்றுத் தேற எத்தனையோ விஷய நுணுக்கங்கள் இருக்கின்றன, 'ஆமை வேக'த்தைத் தவிர. -ரா. வீ.





இப்பொழுது எரிபொருள் செலவு எத்தனை குறைந்துள்ளது? லீக்கோவுக்கு நன்றி!

'லீக்கோ'-சிறந்த, சிக்கனமான, புகையற்ற எரிபொருள். எந்தவித கரி அடுப்பினிலும் உபயோகப்படுத்தவல்லது.

லீக்கோ


நேரத்தையும் செலவையும் மிச்சப்படுத்துகிறது.



சிறிய 'லீக்கோ' துண்டுகளை எடுத்துக் கொள்ளவும்



பிறகு மெல்லிய அடுக்காக அடுப்பினில் பரப்பி வைக்கவும்



வழக்கமான முறையில் எரிய வைக்கவும்



சில நிமிடங்கள் கழித்து நன்றாக சுடர் விட்டவுடன் மேலும் வேண்டிய அளவு 'லீக்கோ' சேர்த்துக் கொள்ளவும்

LECO

நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் லிமிடெட், நெய்வேலி-1.



மூன்றாவது பரிசு நாவல்

மணக்கோலம்

பி.வி.ஆர்

அத்தியாயம் 22

ஒரு மகத்தான சதியிலிருந்து தப்பி விட்ட சீதாவும், அந்தச் சதி ஆரம்பத்திலிருந்து வெற்றி பெறுவதற்குத் தன்னை அறியாமலேயே காரணமாக இருந்து, கடைசியில் அது தகர்ந்தபோது தன்னைத் தானே நொந்து கொண்ட பாகீரதி அம்மாளும் தங்களுடைய இயந்திர வாழ்க்கையைத் தொடங்க ஆரம்பித்து விட்டார்கள். பெண்ணின் கலியாணத்தைப் பற்றியே நினைக்கவும் தாயின் நெஞ்சம் நடுங்கியது. முதல் கலியாணத்துக்கு அஸ்திவாரம் போட்டு, கணவனிடம் பிடிவாதம் பிடித்துத் தேதியை நிச்சயம் பண்ணினவள் பாகீரதிதான். அவளேதான் இந்த அலமேலு அம்மாளின் பேச்சைக் கேட்டு, தன் பெண்ணுக்கு அந்தச் சம்பந்தத்தில் பூரண விருப்பம் இல்லை என்று தெரிந்தும் மேலே தன் இச்சைக்குத் தொடர்ந்து காரியங்களை முடித்துப் பெண்களுக்கெல்லாம் மணமாகி அவர்கள் கணவர்களுடைய நிழலை நாடிச் சென்றுவிட வேண்டும் என்ற ஒரே லட்சியத்தை நோக்கி அசுரகதியில் ஓடி ஒரு நாளை நிச்சயம் செய்தாள். இரண்டு தடவைகளிலும் கலியாணம் நின்று போயிற்று. என்னதான் இரண்டாவது ஏமாற்றம் எல்லோருக்கும், பெரிய கண்டம் ஒன்றிலிருந்து சீதா தப்பினாள் என்ற எண்ணத்தை ஏற்படுத்தினாலும், பாகீரதி தன் கைராசியை நினைத்து மனம் புண்ணானாள். இனி அவள் எப்படிச் சீதா கலியாணத்தைப் பற்றித் திட்டம் போடுவாள்? ஒன்று சீதா விவாகம் இல்லாமலேயே காலத்தை ஓட்டுவாள்; அல்லது பாகீரதி கண் மூடின பிறகுதான் கலியாணமே நடக்கும்; இப்படி ஓடியது அவளுடைய சிந்தனை.

ஆனால் சீதா இன்னும் ஒரு படி மேலே போனாள். இந்த ஜன்மத்தில் அவளுக்கு மண வாழ்க்கை கிடையாது என்ற உறுதி ஏற்பட்டு விட்டது மனத்தில். இருபத்தேழு வயதில் எத்தனையோ ஆயிரக்கணக்கான பெண்கள் சமூகக் கோளாறினால் கன்னிகளாகத் திரிகின்றனர். ஏன் முப்பது வயதிலும் எத்தனை பேர் உடல் வாடி, வதங்கிச் சோகை பிடித்து, பிறந்த பெண் பிறப்பின் பயனை அடைய முடியாமல் தவித்து, மானத்தை உயிராக வைத்துக் கொண்டு வாழ்ந்தாக வேண்டிய வாழ்க்கையை நிர்ப்பந்தத்தின் பேரில் வாழ்கிறார்கள்? சீதா அவர்களுடைய கோஷ்டியில்தான் இனி இருக்கப் போகிறாள். ஒரு பெண் ஆவலும் ஆர்வமும் உடலெல்லாம் வீச, எதிர்காலத்தில் கிடைக்கவிருக்கும் குடும்ப வாழ்க்கை என்ற மாபெரும் செல்வத்தை நினைத்து நினைத்து, தினம் தினம் கனவுகள் காணுகிறாள்; கோட்டைகள் கட்டுகிறாள். அப்போது அவளுடைய பெண்மை தனது ஏழைமையை நினைத்துக்கூடப் பார்ப்பதில்லை. ஏழைக் குடும்பங்களில் பெண்ணின் கலியாணம் நினைத்த மாத்திரத்தில் நடக்கக் கூடியதல்ல என்ற எண்ணமே அவளுடைய ஆர்வத்தின் துடிப்பில் உண்டாவதில்லை! பதினாறு பதினேழு வயதில் ஆரம்பமாகும் இந்தச் சிறைக் காட்சிகள் நாளுக்கு நாள் அதிகமாகி, அதிகமாகி, அப்புறம் வயது ஏற ஏற நம்பிக்கை தளர்ந்து போக ஆரம்பிக்கிறது! வரதட்சிணையும் சீரும் வரிசையும் குறுக்குச் சுவர் எழுப்பிக் கனவு மண்டலத்தையே நிர்மூலமாக்குகிறது. இவற்றையும் மீறிக் கலியாணம் நடக்கும் போது, பெண்ணின் இருபத்தைந்து வயதுக்கும் பிள்ளையின் முப்பத்தைந்து வயதுக்கும் என்னதான் ஒரு வயதுப் பொருத்தம் இருந்தாலும் மண வாழ்க்கையில் ருசி ஏற்படாமல் போய் விடுகிறது! இதற்குத் தானே அவள் கனவு மயக்கத்தில் நினைத்துக் கொண்டிருந்தாள் என்ற வெறுப்பே மேலோங்கி நிற்கிறது. இளமையின் அந்தி நேரத்தில் இளமையின் யௌவனமே ஒரு நினைவாகப் போகும் தறுவாயில் கல்யாணம் உலக நியதிக்குக் கட்டுப்பட்டு நடத்தும் ஒரு சடங்காக மாறி விடுகிறது, பெண்ணின் உள்ளத்தில்! சீதாவுக்கு இனி எதற்கு இந்தச் சடங்கு?


சீதா இளமையை இன்னும் ஓரிரு ஆண்டுகளில் முழுதும் இழந்து விடுவாள்! இனி அவளுக்குக் கல்யாணம்


நடந்தாலும் அதில் ஒரு பிடிப்போ, விருப்பமோ இருக்கப் போவதில்லை. இத்தனை நாட்களாக, இளமை இருக்கிறதோ, இல்லையோ! வாழ வேண்டும் என்ற துடிப்பு மறையாமல் இருந்துதான் வந்தது. ஆனால் ரகுபதியைப் பார்த்த பிறகு அவளுக்குக் கலியாணமே ஒருவித வெறுப்பைக்கூட அளித்தது. என்றென்றும் தனிக்கட்டையாகவே இருந்துவிட, அவள் இனி தன் மனத்தைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றுகூட அவள் நினைத்தாள்.

அதே சமயத்தில் அவள் மனக்கண் முன் இருபத்துமூன்று வயது நிரம்பியிருக்கும் ஜானுவும் இருபது வயதான கமலாவும் நின்றார்கள்! காலாகாலத்தில் இப்போதே அவர்களுடைய விஷயத்தில் முனையா விட்டால், அவர்களும் நாளடைவில் சீதா மாதிரி ஆகிவிடுவார்கள். சீதாவாவது விதியின் அடியில் உண்டான வலியை அநுபவிக்கப் பழகியிருக்கிறாள். என்ன கஷ்டங்களோ, துக்கங்களோ ஏற்பட்டாலும் சமாளிக்க மனத் திராணி உள்ளவள். வெளியே என்னதான் அலங்கரித்துக் கொண்டும், எல்லாம் தெரிந்தவனைப் போல் ஜானு இருந்தாலும் அவனுக்கு உலகம் தெரியாது. குடும்பத்தின் பொறுப்பைச் சமாளிக்கத்தான் அவள் வேலையில் இருக்கிறாள் என்ற எண்ணம்கூட ஜானுவுக்குக் கிடையாது. அவன் வாழ்க்கை எனும் கனியை ருசித்து ருசித்துச் சாப்பிடப் பிறந்தவன்! அவனுக்கு அந்த வாழ்க்கையைச் சீதா தான் தேடிக் கொடுக்க வேண்டும். கமலாவைப் பற்றி அவளுக்குக் கவலையில்லை. ஒரு நாள் இல்லாவிட்டால், 'அம்மா! எனக்குக் கலியாணம் பண்ணி வை!' என்று அவளே சொல்லிவிடுவாள். அப்படிப்பட்டவள் அவள்.

ஒரு நாள் தன் சிந்தனைக்குத் தன்னையே பலியாக்கிக் கொண்டு சீதா தவிக்கையில், அம்மா கூடத்துக்கு வந்து சேர்ந்தாள்.

அன்று சர்க்கார் விடுமுறை நாளானதால் எல்லாரும் வீட்டில் இருந்தார்கள். ஜானு ரேடியோ கேட்டுக் கொண்டிருந்தான். மூன்றும் தடவையாக, பி. ஏ. பரீட்சையை எழுதி முடித்துவிட்ட கமலா, நிம்மதியாக ஒரு நாவலில் மூழ்கியிருந்தாள். மூன்று சகோதரிகளும் தாயாரும் 'டைபாய்டு' ஜுரத்துக்குப் பிறகும் அளவுக்கு மீறி வற்புறுத்தவே, அறையை மாற்ற வேண்டும் என்ற எண்ணத்தைத் தாற்காலிகமாக ஒத்திப் போட்டிருந்த சந்தானம் தனது அறையில் ஏதோ படித்துக் கொண்டிருந்தான்.





அப்போது மணி பன்னிரண்டு இருக்கும்.

''சீதா !''

''என்ன அம்மா.....!''

''இன்னிக்கு லீவுதானே? இன்னிக்கே நீயும் நானுமா கடைக்குப் போய் அதையெல்லாம் கொடுத்துவிடலாமா?''

''எதை அம்மா ?'' என்றாள் சீதா அசிரத்தையுடன்.

''வீட்டிலே எதுக்கடி வெள்ளிப் பாத்திரம் இப்போ?''

''ஓ, அதைச் சொல்கிறாயா? அதை விற்பானேன்? ஜானு கலியாணத்துக்குப் பண்ணினதாக இருக்கட்டும். அந்த மாங்கல்யத்தை மட்டும் விற்று விடுவோம். ஏன்னு கேட்டால், எனக்குன்னு பண்ணினது. வேறு யாருக்கும் வேண்டாம்.....''

ஜானு ரேடியோ ஒலியைக் குறைத்து விட்டு, அவர்கள் அருகே வந்தாள்.

''என்னைக் கேட்டால், எல்லா நகைகளையும் பாத்திரங்களையும் கிடைச்ச விலைக்குக் கொடுத்துவிட்டு, பணத்தை அது எவ்வளவு இருக்கோ, அவ்வளவையும் சந்தானம்கிட்டே திருப்பித் தரணும்னு சொல்லுவேன்.....''

''உன்னைத்தான் கேட்கவில்லையே, ஜானு !'' என்றாள் கமலா.

சீதா, ''சந்தானத்துக்கு நான் பதில் சொல்லிக் கொள்கிறேன். அம்மா, இதெல்லாம் இப்படியே இருக்கட்டும்.



உங்களுக்கே... பருவ மங்கையின் பைந்தளிர் மேனியெழில்.



இளமை கொஞ்சிப் புதுமெருகு மிளிரும் எழிலுக்கே... ஜேய் அழகு சோப்! சரும நெகிழ்ச்சிக்கான எண்ணெய்கள் கொழித்திட, ஆழ ஊடுருவிச் சுத்தமிடும் அதன் மென்மை நுரை உங்கள் சருமத்திற்கு நேயமானது. விலை உள்ளளவும் எல்லை மீறிய செழிப்புடன் கமழும் அதன் மல்லிகை மணம் உங்களைக் கொள்ளைகொள்ளும். மறவாதீர்கள், நவீனமான உலோக ஜிகினாத் தாளுறை தரித்தது ஜேய் ஒன்றுதான்.

ஜேய்–நீங்கள் நினைப்பதை விடக் குறைவான விலை உள்ள அதி விசேஷ அழகுசாதன சோப்!

உங்கள் எழில் பெருக

ஜேய்

அழகு சோப்

உங்கள் மணங்கவர் மணங்கமழ்வது.



டாடா
தயாரிப்பு

235A TM.

யார் கண்டார்கள், ஜானுவுக்கு, நாளைக்கே ஒரு வரன் கிடைச்சு நிச்சயமானால் மறுபடியும் புதுசா வாங்க நிக்கணும்....'' என்றாள்.

''ஜானு! நீ அலமேலு மாமி மாதிரி யாரையாவது ஒருத்தியைக் காக்காய் பிடியேன். ரெடிமேட் வரன் நிறைய இருக்கும்!'' என்றாள் கமலா.

''கமலா, வாயை மூடு!'' என்று கத்தினாள் பாகீரதி. ''சந்தானத்துக்கிட்டே இப்போ கொடுக்க முடிஞ்சதைக் கொடுத்துடலாம்னு எனக்குத் தோணறது. நாம கலியாணத்துக்குன்னு வாங்கினோம். அது நடக்கல்லே. திருப்பிக் கொடுத்துடறதுதான் சிலாக்கியம். அவனும் தப்பாக நினைக்கப்படாது, பார்.....'' என்றாள்.

''அவர் தப்பாக நினைக்கிறவராக இருந்தால், நீ மூஞ்சியைத் தூக்கினதற்கே காலி பண்ணியிருப்பார்....'' என்றாள் ஜானு.

ஜானுவின் குத்தலான பேச்சு காதில் விழாதது போல், பாகீரதி அம்மாள், ''அது. இதுன்னு வாங்கினதிலே இருநூற்றைம்பது ரூபாய் கடன் ஏறியிருக்கு... பட்சணம் பண்ணறதுக்கு வாங்கின நெய்க்கும் மற்றச் சில்லறைச் சாமான்களுக்குமே செட்டியாருக்கு நூத்து அறுபது ரூபாய் கொடுக்கணும்'' என்றாள். பிறகு, ''ஏண்டி, ஜானு, உன்கிட்டே பணம் இருக்காடி?'' என்று கேட்டாள்.

''ஊஹூம்!'' என்று உதட்டைப் பிதுக்கினாள் ஜானு.

''கடிகாரம் வாங்கறதுக்கு மட்டும் பணம் இருந்ததாக்கும்!'' — கமலா.

''இருந்தால் தாயேன் ஜானு! இரண்டு மாசத்திலே நான் எப்படியாவது திருப்பித் தரேன்'' என்றாள் சீதா.

''என்கிட்டே இருந்தால்தானே தர முடியறதுக்கு? மாசா மாசம் செலவுக்குத் தந்தால் அப்புறம் என்கிட்டே என்ன இருக்கும் ?''

''ஏன் அக்கா, அவகிட்டே கெஞ்சறே? கல்லிலே நார் உரிக்கலாம். அவகிட்டேயிருந்து ஒரு பைசாகூடப் பெயராது !''

''செட்டியார்கிட்டே நான் சொல்லிக்கிறேன், அம்மா! அந்த மாங்கல்யத்தை விற்றுக் கிடைக்கிற பணத்திலே ஏதாவது இப்போ கொடுப்போம்....''

''அதிலே என்னமா கிடைக்கும் ? முக்கால் பவுன்....!''

''எழுபதோ எழுபத்தஞ்சோ கிடைக்குமே ? அதைச் சத்தியா இப்போ கொடுக்கலாம்.... ஜானுதான் இல்லேன்னு கையை விரிக்கிறாளே !''

''ஆனால், அக்கா நீ இந்தப் பாத்திரமெல்லாம் அவள் கலியாணத்துக்கு இருக்கட்டும்னு சொல்றே. நன்றி என்கிறது அவள் பக்கத்திலேகூடப் போகலே....'' — கமலா.

''அதுக்கென்ன? நீ அதன் சொருபம்தானே! வீட்டிலே மூணு வேளை தின்னுண்டு, தூணிலே முதுகைத் தேச்சு, தூணையே நகர்த்திண்டு இருக்கியே.... போய் ஏதாவது ஒரு வேலையில் சேர்ந்து, இரண்டு மூணு மாசத்திலே இந்தக் கடனையெல்லாம் அடை!'' என்றாள் ஜானு.

''உனக்குத் தியாக உணர்ச்சியே கிடையாதம்மா !'' என்றாள் கமலா பதிலுக்கு.

''தியாகம்னு விசை என்ன விலைன்னு கேட்கிறவள் மற்றவர்களைச் சொல்லாம இருக்கத் தெரியணும். இதோ பார், கமலா..... நான் உன் வழிக்கு வரல்லே.... நீ இனிமேல் என் வழிக்கு வந்தே... உம்.... அப்புறம் தெரியும்!''

''என்னமா, கத்தறே ? கத்தினால் ஜெயிச்சவளாய் விடுவியோ....பாவம், யாருமே கேட்காத அக்கா வாய் விட்டு உன்கிட்டே கேட்கிறா....நாளுக்கு நாலு வேளை கண்ணுக்கு மையும், மூஞ்சிக்கு ஸ்நோவும் பவுடருமாய் 'மேக்அப்' பண்ணிண்டு, நைலானும், டெரிலக்ஸுமா மின்னறியே! போதாததற்கு ஒரு கடிகாரம் வேறே.... இதுக்கெல்லாம் எங்கேடி உனக்குப் பணம் இருந்தது? இப்போ இல்லே என்கிறதுக்கு!'' கமலாவின் குரல் கூடத்தையே பிளந்தது.

''நீங்கள் இப்படியே மாத்தி மாத்திக் கத்திண்டேயிருந்தீர்கள்னா நான் இறங்கிப் போய் விடுவேன்!'' என்று பாகீரதி அம்மாள் அலுத்துக் கொண்டாள்.

ஆனால் அதற்கு முன்னேயே சீதா வாசல் பக்கம் சென்று விட்டாள். அவளுக்கு எல்லாமே வெறுத்தது.

அரை மணி நேரத்துக்குப் பிறகு, இந்தக் கூடத்தில்தானா வாத எதிர்வாதங்கள் உச்சஸ்தாயியில் நடைபெற்றன என்று கேட்கும் அளவுக்கு நிம்மதி நிலவியது. கொல்லைத் தாழ்வாரத்தில் பாகீரதி காலை நீட்டிப் படுத்துக் கொண்டாள். சீதா படுக்கையறையில் படுக்கச் சென்றாள். இடையிலே தடைப்பட்டுப் போன படிப்பைத் தொடர்ந்தாள் கமலா. ஜானு நல்ல சினிமா சங்கீதத்தை ஒவ்வொரு ஸ்டேஷனாகத் திருப்பித் தேடிக் கொண்டிருந்தாள்.

சந்தானம் அவ்வளவு பேச்சையும் கேட்டுக் கொண்டிருந்தவன் தன்னுள்



"வர, வர, நீங்க என்ன சதா பஞ்சப்பாட்டே பாடிண்டிருக்கேள்!"

"வேறு எந்தப் பாட்டும் தான் நான் பாடினா உனக்குப் பிடிக்கல்லே! பஞ்சப் பாட்டையானும் பாடலாம்னு தான்."

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

அந்தக் குடும்பத்தை எண்ணி ரசித்துக் கொண்டிருந்தான். சந்தோஷத்திலும் சேர்ந்து கொள்ளுகிறார்கள்; சச்சரவிலும் ஒருவருக்கொருவர் சளைப்பதில்லை. குடும்பம் என்றால் இதுதான் அழகு போலிருக்கிறது! சகோதர சகோதரிகளிடையே நடக்கும் சண்டைகளிலும் பூசல்களிலும் வைராக்கியம் இருக்காது. அடிப்படையான ரத்தபந்தத்திலேயே உண்டாகியிருக்கும் பாசம், கடைசியில் எல்லாரையும் கயிற்றால் பிணைப்பது போலச் சேர்த்து விடுகிறது. இன்று கமலாவும் ஜானுவும் கத்தினது அசாதாரண விஷயமல்ல. ஆனால் இருவருமே, அன்று சீதாவின் கல்யாணத்துக்கு முன்னால் தங்களுடைய மன ஒற்றுமையையும் காட்டினார்கள். எந்த அக்காவிடம் வாயாரத் தன்னிடம் பணம் ஏதுமே இல்லை என்று சொன்னானோ, அதே அக்காவுக்காக ஜானு அன்று துடியாய்த் துடித்தான். தன் தமக்கைக்கு வரவிருக்கும் புருஷன் நல்லவன்தானா என்றெல்லாம் அறிய அதீதமான ஆவலும், அப்படியில்லாமற் போனால், நிச்சயித்திருக்கும் வரனை ஒரேயடியாய் ஒதுக்கிவிட வேண்டும் என்ற வெறியும் ஜானுவிடம் தோன்றியிருந்தன. யாரையும் அவனுடைய தினசரி வாழ்க்கையைக் கண்டு, அந்த வாழ்க்கையில் மட்டுமே பிரதிபலிக்கக்கூடிய குண விசேஷங்களிலிருந்து எடை போடக் கூடாது. ஒவ்வொருவருடைய மனத்திலும் தினம் தினம் எத்தனையோ ஆயிரக்கணக்கான எண்ணங்கள். நிலைமைக்கு ஏற்றவாறு எழுகின்றன; மறைகின்றன. இந்த எண்ணங்கள் தூண்டிவிடும் நடத்தையால் மட்டும் அவனுடைய குணம் தெரிவதில்லை. உண்மையான பாசத்தின் லட்சணமும், சிநேகிதத்தின் தர்மமும் ஒரு நெருக்கடியில், ஏன், ஓர் இக்கட்டான நிலைமையில்தான் வெளிவருகின்றன.

சீதா தன் பாசத்தையும் குடும்பத்துக்குச் செய்ய வேண்டிய கடமையையும் அன்று, பத்து ஆண்டுகளுக்கு முன்னால் காட்டினான். சமீபத்தில் தன் சகோதரி வாழ்க்கையில் குளிர்ச்சியான நிழலில் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று ஜானு துடித்தான். அவனுடைய துடிப்பு எதைப் பிரதிபலித்தது? அவனுக்குள்ள உண்மையான பாசத்தையல்லவா?

சந்தானம் தான் படித்துக் கொண்டிருந்த ஆங்கில நவீனம் ஒன்றை மூடி வைத்துவிட்டு எழுந்தான். ஆங்கில நாவல் படிக்கும் வழக்கமே ரவி ஏற்படுத்தி வைத்ததுதான். 'இதைப் படி', 'அதைப் படி' என்று தூண்டித் தூண்டி அந்தக் காலத்தில் ரவி புத்தகங்களைச் சந்தானத்திடம் திணித்தபோதெல்லாம் வேண்டா வெறுப்புடன்தான் அவனும் படித்தான். ஆனால் நாள் செல்லச் செல்ல, உண்மையான இலக்கியத்தில் மனம் லயிக்கலாயிற்று. புத்தகங்களிலேயே அக்கறையில்லாதவன், ஒழிந்த நேரங்களில் இலக்கியங்களைத் தவிர வேறு எதிலும் பொழுதைப் போக்காதவனாக மாறினான்.

எழுந்த சந்தானம் ரேழிப் பக்கம் தலையை நீட்டவும், ஜானு வாசலை நோக்கி வந்து கொண்டிருக்கவும் சரியாக இருந்தது.

''ஜானு வெளியே போறியா?'' என்று கேட்டான்.

''இல்லையே?''

அவன் தன் நாற்காலியில் உட்கார, ஜானு ஒரு முக்காலியில் அமர்ந்தான்.

''என்ன வேணும்?''

''இன்னிக்கு நீங்க பேசிண்டிருந்ததெல்லாம் காதிலே விழுந்தது!''

''இது என்ன புதிசா? கூடத்திலே ரகசியம் பேசினாக்கூடத்தான் இங்கே கேட்கும். நன்னா அநுபவிச்சுக் கேட்டீர்களோ, இல்லையோ?''

''உம், கேட்டேன். ஏன் சீதா கேட்ட போது பணம் இல்லை என்றாய். எனக்குத் தெரியும் உன்கிட்டே பணம் இருக்குன்னு....''

''நான் கொடுக்காவிட்டாலும் செட்டியார் கடனை எப்படியாவது அக்கா தீர்த்து விடுவாள். என் பணம் வேறு ஏதாவது நெருக்கடியின் போது உபயோகப்படும்....''

''அப்போ இது நெருக்கடியில்லையா?''

''ஊஹூம்.... செட்டியார் வக்கீல் நோட்டீஸா அனுப்பியிருக்கிறான் ?''

''ஓகோ! உன் அகராதியில் நெருக்கடிக்கு என்ன அர்த்தம்னு இப்பத் தான் தெரிகிறது....''

''தெரிஞ்சுதோ இல்லியோ இப்ப வாவது. ரொம்ப சந்தோஷம்! நான் வரட்டுமா?''

''இரு....!'' என்று எழுந்த சந்தானம் 'ஷெல்பி'லிருந்து ஒரு புத்தகத்தை எடுத்து, ''இதைப் படிச்சிருக்காயா?'' என்று அவளிடம் நீட்டினான்.

அதை வாங்கிப் பார்த்த ஜானு, ''ஓ எஸ்! 'டேல் ஆஃப் டு ஸிட்டீஸ்' டிக்கன்ஸ் நாவல். பிரமாதமான கதையாச்சே. சினிமாக்கூடப் பார்த்திருக்கிறேன். ரொனால்டு கோல்மன் ஸிட்னி கார்ட்டனா வர்றான்'' என்றாள்.

''இந்த ஸிட்னி கார்ட்டன் கற்பனைக்கு எட்டாத சித்திரம் இல்லே?'' என்று கேட்டான் சந்தானம்.

''எனக்கு அப்படிப்படவில்லை....''

''அவன் செய்தது மகத்தானதொரு தியாகம்னு நான் சொன்னால் உன்னாலே மறுக்க முடியாது.....''

''அதுக்கும் மேலே.... அவன் செய்தது தெய்விகத் தியாகம். ஏன் தெய்வத்தாலேகூட இப்படி ஒரு தியாகம் செய்திருக்க முடியுமான்னு தோணும்.''

''சதாசர்வ காலமும் மதுவிலேயே மூழ்கி, உலகத்திலே எதிலும் ஒட்டிக் கொள்ளாதவனைப் போல, தன் ஆடை அலங்காரத்திலும் கவனம் செலுத்தாத வக்கீல் ஸிட்னி கார்ட்டனுடைய மனம், கடைசியில் இப்படி ஒரு தியாகத்துக்கு எப்படித் தயாராக இருந்தது? இதுதான் எனக்கு விளங்கமாட்டேன் என்கிறது. யாருக்காக அந்தத் தியாகத்தைச் செய்தானோ, அவள் மீது அவனுக்கு உள்ளூறக் காதல் இருந்தது. ஆனால் அதுமட்டும் அவன் செய்த காரியத்துக்குப் போதுமா?''

''தியாகம் என்கிறது என்ன, முன்னாடியே திட்டம் போட்டு எழுதி வைச்சுண்டு செய்கிற காரியமா? அது மின்னல் மாதிரி வருகிற ஓர் எண்ணப் பொறி. அது முளைத்ததுமே பிரம்மாண்டமாக மனத்துள் வளர்ந்து விடுகிறது. தியாகம் செய்கிறவன் தான் செய்வது தியாகம்தானே என்று நினைக்கிறதில்லை. கார்ட்டன் தான் செய்யப் போகிறது தியாகம்னு எண்ணவேயில்லே....'' — ஜானு நிறுத்தி நிதானமாகப் பேசினாள்.



நிருபர்: உங்க வயது?

அவள்: இருபத்தைந்து!

நிருபர்: உங்கள் தங்கை தன் வயது இருபத்தாறு என்று சொன்னாங்களே!

அவள்: சுத்தப் பொய்! அவள் நிஜ வயது முப்பது.

''நீ என்ன வேணுமானாலும் சொல்லு. கதையின் முடிவு நம்ப முடியாத ஒரு முடிவு... அதுவும் கார்ட்டன் வாழ்ந்த வாழ்க்கையைப் பார்க்கிற போது....''

''வாழ்கிற வாழ்க்கையின் விதத்துக்கும் அதன் முடிவுக்கும், அதாவது தியாகம் செய்து உண்டாகிற முடிவுக்கும் ஒரு சம்பந்தமும் இல்லே. தியாக உணர்ச்சி சாதாரண மனித குணத்துக்கெல்லாம் அப்பாற்பட்டது.....''

திடீரென்று சந்தானம், ''ஒரு விதத்திலே சீதாவும் தியாகி என்று சொல்லலாம், இல்லையா?'' என்றான்.

''சீதாவா? தியாகியா?'' ஜானு சிரித்தாள். பிறகு, ''அக்கா என்ன தியாகம் செய்து விட்டாள்?'' என்று கேட்டாள்.

சந்தானம், ''கண் முன்னாலே அவள் இருக்கிறதினாலே உங்களுக்கெல்லாம் அவள் இந்தக் குடும்பத்துக்குச் செய்தது தியாகமாகத் தெரிகிறதில்லே. ஒரு நிமிஷம், அவளைத் தனியா நிறுத்தி வைச்சுப்பாரு, ஜானு !'' என்றான்.

''அக்கா எங்களுக்குச் செய்தது கடமை, சந்தானம் கடமை....அதுக்குத் தியாகம்னு பேர் கொடுக்காதீர்கள் !''

''பதினேழு வயசிலே மாலையும் கழுத்துமா நிற்க இருந்தவள் எப்படித் தன்னை மாற்றிக் கொண்டாள்?''

''சூழ்நிலையின் நிறத்துக்குத் தகுந்தபடி மாறுகிறவன்தானே மனிதன்? சுற்றுப்புறத்தின் நிறத்துக்குப் பச்சோந்தி தன் நிறத்தை மாற்றிக் கொள்ளுகிறதில்லையா? அங்கே உடம்பின் நிறம் மாறுகிறது..... இங்கே மனிதனுடைய

மனசின் நிறம் மாறுகிறது. மனசின் போக்கை அக்கா மாற்றிக் கொண்டாள். அதற்குச் சந்தர்ப்பமும், நிர்ப்பந்தமும் அவளை வேறு வழிக்குத் திருப்ப முடியாமல் போனதே காரணம்.

''அவன் தியாகியாவது எப்போது தெரியுமா? பதினேழு வயசிலே நிச்சயம் பண்ணி நின்னு போச்சே, அது நிக்காம அந்தப் பிள்ளையாண்டானும் பணத்தையும் சீரையும் பாராமல் தாலியைக் கட்டுகிறேன்னு வந்திருந்து அப்போ இவன், எங்களுக்காகவும், அம்மாவுக்காகவும் தனக்குக் கல்யாணம் முக்கியமில்லை என்று புறக்கணித்திருந்தால் தியாகி ஆகியிருப்பான்....''

''ரகுபதி அயோக்கியன் என்று தெரிந்தபின்னும், அவனைக் கல்யாணம் செய்து கொண்டால் தன் தங்கைகளின் எதிர்காலம் சுபிட்சமாக இருக்கும் என்ற ஒரு காரணத்துக்காக இசைந்தாளே, அதுகூடத் தியாக உணர்ச்சியில் பிறந்ததுதானே....!''

''ஊஹூம். அதையும் நான் தியாகம்னுட்டு ஒப்புக் கொள்ள மாட்டேன். ரகுபதியின் முதல் மனைவி உயிரோடு இருக்கிறாள் என்று தெரியாமல் அவள் கல்யாணம் செய்து கொண்டிருந்தால், அதற்கு அவனைத் திருத்திவிடத் தன்னால் இயலும் என்ற நம்பிக்கையும் ஒரு காரணமாக இருந்திருக்கும். ஏன், இப்போதாவது கல்யாணம் ஆகிறதே என்ற ஆசைகூடத் தோன்றியிருக்கலாம். எங்களை மனசில் வைத்துக் கொண்டு அம்மா ரகுபதியை நிச்சயம் பண்ணினாள். ஆனால் அதற்காக மட்டும்தான் அக்கா ஒப்புக்கொண்டாள் என்று சொல்ல மாட்டேன்...!''

''அப்போ நீ என்னதான் சொல்லுறாய் ?''

''ஸிட்னி கார்ட்டனையும் சீதாவையும் ஒப்பிடுவது மகா பேத்தல்!''

''நான் ஒப்பிடவில்லை!''

''இரண்டு பேரைப் பற்றி ஒரே சமயத்தில் நினைக்கிறதும் பொருத்தமில்லை..... சீதா செய்தது கடமை. ஐக்கியமாக இருக்கும் குடும்பத்தில், முன்னால் பிறந்தவர் பின்னால் பிறந்தவர்களுக்குச் செய்ய வேண்டிய ஒரு கடன்..... அதை அவள் ஒழுங்காகச் செய்தாள்.... அவ்வளவுதான்!''

''அப்போ, நீ எதைத் தியாகம்னு சொல்லுவே? யாரைத் தியாகின்னு ஒப்புக் கொள்ளுவே ?''

''இதுக்குச் சுலபமா பதில் சொல்லி விடலாம். தன்னைப் பற்றி முன்னும் பின்னும் நினைத்துக் கொள்ளாமல், தான் ஒரு காரியம் செய்தால் தனக்கு அபாயமும் விபரீதமும் உண்டாகும் என்ற சிந்தனையே இல்லாமல், அந்தக் காரியத்தில் இன்னொருவரோ அல்லது ஒரு குடும்பமோ அல்லது ஒரு சமூகமோ கடைத்தேறுவார்கள், உயிர் வாழ்வார்கள் என்ற ஒரே நோக்கத்தால் அந்தக் காரியத்தைச் செய்கிறவன்தான் தியாகி.... அவன் தியாகம் செய்கிறான் என்று பிறர்தான் சொல்லுகிறார்களே ஒழிய, அவனைப் பொறுத்த மட்டில் அவன் செய்தது ஒரு செயல். ஒரு காரியம். அவ்வளவுதான்... செயலாற்றியபின் அதைப் பற்றி நினைக்கவேமாட்டான். அவன்தான் தியாகி.''

''தியாகம் செய்ய வேண்டியதற்குத் தைரியமும் மனத் திடமும் வேண்டும்.''

''தேவையேயில்லை.... அடிப்படையாக இருப்பது ஒன்றுதான்.... அது தான் அன்பு. இந்த அன்பு பாசமாகவோ, சிநேகமாகவோ, பக்தியாகவோ இருக்கலாம். அன்பு இல்லாத இடத்தில் தியாக உணர்ச்சியே உதிக்க முடியாது....அக்காவுக்கு எங்கள் பேரில் அன்பு இருக்கோ, இல்லையோ, கடமை காரணமாகத் தங்கைகளைப் படிக்கவைத்து ஆளாக்கிவிட வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது.''

''ஜானு! வாழ்க்கையில் ஏதாவது ஒரு சந்தர்ப்ப நெருக்கடியிலோ அல்லது கஷ்டத்தின் உச்சியிலோ, நீ ஒரு மகத்தான தியாகத்தைச் செய்யும்படியாக இருந்தால், சந்தோஷமாக அதைச் செய்வாயா ?''

''அந்த நெருக்கடி, யாரைப் பாதிக்கிறது என்பதைப் பொறுத்திருக்கிறது. யாருக்காக நான் தியாகம் செய்ய வேண்டி வருகிறதோ, அவர் அல்லது அவள் எனக்கு உயிரானவராக இருக்க வேண்டும். பரஸ்பர அன்பில் நாங்கள் இரண்டு பேரும் கட்டுப்பட்டிருக்க வேண்டும். அப்படி இருந்தால், அவரோ அல்லது அவளோ என்னுடைய ஒரு தியாகத்தால் அடைய முடியாத பதவியையோ அல்லது அந்தஸ்தையோ அடைவார்கள் என்றால் நான் கண்டிப்பாக உயிர்த் தியாகம் கூடச் செய்வேன்.....''

சந்தானம் கலகலவென்று சிரித்தான்.

''ஏன் சிரிக்கிறீர்கள்?''

''சீதாவுக்குத் தியாகம்னு என்னன்னு தெரியாது என்று சொன்னேயில்லியா.... இப்போதுதான் எனக்கே அது என்னங்கிறது தெரியறது. நாளுக்கு ஒரு புடவையும், பொழுதுக்கு ஒரு பேஷனுமா இருக்கிற நீ தியாகத்தைப் பத்திப் பேசி, அது செய்யவும் செய்வேன் என்று மார் தட்டுகிறாயே. அதை நெனைச்சா சிரிப்புத் தான் வர்றது.....!''

(தொடரும்)



அகில உலகப் பிரயாண ஆண்டிலே ஏர் இந்தியா ஸ்தாபனம் புதிதாக மூன்று இடங்களுக்குத் தன் சேவையை விஸ்தரித்திருக்கிறது. பம்பாயிலிருந்து மரீஷியஸுக்கும் பிரஸ்ஸெல்ஸுக்கும் குவாலாலம்பூருக்கும் போயிங் விமானங்கள் செல்லவிருக்கின்றன.

வரலக்ஷ்மி பூஜை தினத்தன்று (ஆகஸ்டு 18ந் தேதி) முதல் தடவையாகப் போயிங் விமானம் பம்பாயிலிருந்து விசேஷ அழைப்பினர்களுடன் குவாலாலம்பூருக்குப் பறந்து சென்றது. இந்த விசேஷத் தொடக்கப் பிரயாணத்தில் இந்திய சர்க்கார் பிரயாண துணை மந்திரி ஜெயபால்சிங், மலேஷியப் போக்குவரத்து மந்திரி டான்ஸ்ரீ சர்டன் ஜின்ராஜிபின்பிர முதலியோரும் பத்திரிகைப் பிரதிநிதிகளும் சென்றார்கள்.


மேற்படி விமானம் உலகத்திலேயே நவீன விமான நிலையங்களில் ஒன்றான குவாலாலம்பூர் சுபங் விமானநிலையத்தில் இறங்கியதும், விசேஷ விருந்தினர்களை வரவேற்கப் பல பிரமுகர்கள் வந்திருந்தனர். மலேஷியப் போக்குவரத்து மந்திரி, "இந்தப் புதிய விமான இணைப்பு இருநாட்டு நல்லுறவை வளர்ப்பதோடு, நீண்ட காலம் நெருங்கித் தொடர்பு கொண்டிருக்க உறுதுணையாயிருக்கும்" என்றார்.



மலேஷியாவில் இந்திய விமானம்

மலேஷியாவின் வளத்தையும், அரசியல் அமைப்பையும் கண்டு களிக்கும் வாய்ப்பு ஏர் இந்தியாவின் விசேஷ விருந்தினர்களுக்குக் கிடைத்தது. நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களைச் செவ்வனே இயக்கி வருகிறார் மலேஷிய உதவிப் பிரதம மந்திரி. பத்திரிகைப் பிரதிநிதிகளுக்கும் பிரதம மந்திரி காரியாலயத்தின் பொருளாதார இலாகாவைச் சேர்ந்த திரு இராம ஐயர் மலேஷியாவின் பலவிதமான முன்னேற்றத் திட்டங்களை விளக்கிச் சொன்னார்.

ஆகஸ்டு 31ந் தேதி மலேஷியாவின் பத்தாவது சுதந்திர தினமாதலால் அதையொட்டி நகரெங்கும் திருவிழாக் கோலம் பூண்டு, அது கண்ணுக்கினிய காட்சியாகத் திகழ்ந்தது. பலதரப்பட்ட மதத்தினர் மலேஷியாவில் ஒன்றுபட்டு ஒரு சமூகமாக இயங்குவது பத்திரிகைப் பிரதிநிதிகளுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. இந்தப் புதிய விமான இணைப்பு இங்குள்ள தென்னிந்தியர்களுக்குத் தங்கள் தாய்நாட்டோடு உறவுகொள்ள வரப்பிரசாதமாகத் திகழும். மலேஷியாவில் மலாய் மொழியே ஆட்சி மொழியானாலும் நீதி மன்றங்களிலும், தொழில் நுணுக்கக் கல்வியிலும், பார்லிமென்டிலும் உலக மொழியான ஆங்கிலமே நீடித்து வருவதையும் பத்திரிகைப் பிரதிநிதிகள் தெரிந்து கொண்டனர்.



— கண்ணன், பம்பாய்



சிறையிலே பூத்த மலர்


'சிறைச்சாலை என்ன செய்யும்?'

திருச்சி மத்திய சிறைச்சாலைக்கு இந்தக் கேள்வியை அனுப்பினால் 'சிறையில் பூக்கும் மல'ரை அனுப்பி வைக்கும்.

சிறையில் பூக்கும் மலரா?

ஆம், நறுமணம் கமழும் நல்ல இலக்கிய மலர்.

சிறை வாழ்க்கையை — எந்தக் காரணத்தைக் கொண்டு சிறை சென்றவர்களாயிருந்தாலும், — தமக்குக் கிடைக்கும் ஓர் அரிய வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு, சிறந்த இலக்கியங்களைச் சிருஷ்டித்து அழியாப் புகழ் பெற்றவர்கள் பலர் உண்டு. 'சிறையில் தவம்' இருந்து படைத்த அவர்களு



டாகூர் கொடாத சான்றிதழ்

கவிஞர் ரவீந்திரநாத் டாகூர் எந்தப் பொருளுக்கும் நற்சாட்சிப் பத்திரம் வழங்கிவிடுவார்.

"இந்த ரீதியில் போனால் உலகத்தில் தயாராகும் எல்லாப் பொருள்களும் உங்களுடைய நற்சான்றுகளைப் பெற்று விடும்" என்று ஒரு தடவை கவிஞரின் காரியதரிசி கூறினார்.

"அது ஒருபோதும் நடக்காது. ஒரு பொருளுக்கு நான் கொடுக்கவே மாட்டேன்" என்று வாதாடினார் டாகூர்.

"அது என்ன?" என்று வியந்து கேட்டார் காரியதரிசி.

"ரேஸர் பிளேடு (க்ஷவர பிளேட்)" என்று சொல்லிச் சிரித்தார் கவிஞர்.

ஆதாரம்: 'டாகூர் லோர்'

— 'கோடை'



"இரயில் நிலையம் ஒன்று விற்பனைக்குத் தயார்" என்ற விளம்பரம் வெளி வந்தால், ஆச்சரியமாகத்தான் இருக்கும். ஆனால் அது உண்மைதான். ஜெர்மன் பத்திரிகைகளில் இவ்விதம் விளம்பரம் சமீபத்தில் வெளிவந்தது.

ஜெர்மனியில் கோலோன் நகருக்கு அருகே ரோபேர்க் என்னுமிடத்தில் இச்சிறு ரயில்வே ஸ்டேஷன் அமைந்திருக்கிறது. கெய்சர் வில்ஹெல்ம் ஆட்சியில் இருந்த போது, கோலோன் பகுதியில் வேட்டையாடுவதற்காக, ரயிலில் வந்து சேருவார். அதற்காகக் கோட்டையையும், இரயில் நிலையம் ஒன்றையும் கட்டினார். இந்தக் கோட்டை இன்றும் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் இரயில் நிலையம் உபயோகமில்லாமல் இருப்பதால், விற்பனை செய்யப்படுகிறது. (யூ. பி. எஸ்.)

டைய இலக்கியங்கள், சிறையிலிருந்து வெளி வந்த பின்னர்தான் பலருக்கு அறிமுகமாகியுள்ளன.

சிறை கண்காணிப்பாளர் திரு ஆ. ப. வாசுதேவன் அவர்களது நல் முயற்சியினாலும், சிறைப்பட்டோரின் கற்பனைப் புட்கள் சிறைப்படாமல் சிறகடித்துக் கொண்டு பறந்ததனாலும், திருச்சி மத்தியச் சிறையே ஒரு பூங்காவாகி நறுமணம் கமழும் நல்ல மலர்களை நல்கியிருக்கிறது! சிறையிலே நிறைவைக் காணும் இம் முயற்சி இதுபோல் இன்னும் பல இலக்கிய மணம் கமழும் நல் மலர்களை அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

லண்டனிலிருந்து வெளிவரும் ஒரு தினசரியில் 'ஆசிரியருக்குக் கடிதங்கள்' பகுதியில் பின்வருமாறு ஒரு கடிதம் வெளியாயிற்று: "நேற்று என் காரை யாரோ திருடிவிட்டார்கள். திருடியவருக்கு என்னுடைய ஆழ்ந்த அனுதாபங்கள்."

தகவல்: கே. ராமசந்திரன்

வாசற்கதவைத் திறந்து விட்டு, சுவரோர மாக ஒண்டிக் கொண்டு நின்ற சாந்தாவை ஏற இறங்கப் பார்த்தாள் பார்வதி. சாந்தா வின் பின்னால் நின்றிருந்த அவள் தாய் அம்மாளும் மகளைத் தோளுடன் அணைத்த படியே பார்வதியை ஒரு முறை நிமிர்ந்து பார்த்துவிட்டுத் தலை குனிந்து கொண் டாள். அவள் விழிகளில் நீர் கோத்து நின்றது. கைவிரல்களைப் பின்னுவதும் விடுவதுமாக வெடவெடத்து நின்று கொண்டிருந்த சாந்தா கவிழ்ந்த முகத்தை நிமிர்த்தவேயில்லை.

ஒருமுறை பின்னால் திரும்பிப் பார்த்து விட்டு, அவர்களை உள்ளே வரும்படியாக ஜாடை காட்டினாள் பார்வதி. கதவை

“இந்தப் பெண்ணுக்கு இவ்வளவு கொள்ளை யழகை ஈசுவரன் ஏன்தான் கொடுத்தானோ?” என்று எண்ணிக் கொண் டாள். அவள் விழிகளில் ஈரம் கசிந்தது.

“அம்மா! அது.... அது.... குழந்தை.... எங்கே?” என்று கேட்டாள். அதைக் கேட்டு முடிப்பதற்குள் அவள் நெஞ்சுக்குள் ஏதோ அடைத்து வருவது போல் இருந்தது. 'குழந்தை' என்ற வார்த்தை காதில் விழுந்த தும் அது வரையில் தரையையே நோக்கிக் கொண்டிருந்த சாந்தா வெடுக்கென்று தலை நிமிர்ந்தாள். அவள் கண்களின் பார்வை தன் தாயையும் எதிரே அமர்ந்திருந்த பார்வதி யையும் மாறி மாறி நோக்கின. அவ்விழி



ஓசைப்படாமல் தாளிட்டு விட்டு அவர்களைத் தொடர்ந்து தானும் உள்ளே போனாள். சமையலறை சாப்பாட்டுக்கூடம் இவற்றை யெல்லாம் தாண்டிப் பங்களாவின் பின் புறத்துத் தாழ்வாரத்தை யடைந்து அங்கே யிருந்த ஒரு பெஞ்சின் மீது உட்கார்ந்து கொண்டாள்.

அவளுடைய விழிகள் தாயையும் மகளை யும் மாறி மாறி நோக்கின. அடித்து நிறுத்திய அழகுச் சிலையாய், வழிய வழியக் கூந்த லுடன் பொய்கையில் பூத்து நிற்கும் பொன்னிறத் தாமரையாய் ஒடிய ஒடிய நிற்கும் சாந்தாவை எப்பொழுதும் போல் அடங்காத வியப்புடன் நோக்கினாள்.

களில் எதையோ பறி கொடுத்துவிட்டு எங்கும் வேதனையின் தேக்கம் மறைந்து நின்றது.

பார்வதி தன் நெஞ்சை அழுத்திப் பிடித் துக் கொண்டாள்.

“ஐயோ, சுகுமாரா! நான் செய்யப் போவது பாவமானாலும் என்னை மன்னித்து விடு” என்று மனத்துக்குள்ளாகவே வேண்டிக் கொண்டாள். வேதனை மண்டிக் குமுறிய தன் இருதயத்தைப் பாறையாக மாற்றிக் கொள்ள முயன்றவளாய், “அம்மா! குழந்தையைக் கொண்டு வரவில்லையா?” என்று மெல்லிய குரலில் கேட்டாள்.


கொதிக்கும் உலையாய்ப் பொருமிய கண் ணீரை முன்றானையால் துடைத்துக் கொண்

டாள் அம்பாபாயி. மெல்ல வந்தது பதில். "வண்டியிலேயே இருக்கிறதம்மா, சுதாகரைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு வந்தேன். நான் போய் எடுத்து வருகிறேன்."

சடக்கென்று குறுக்கிட்டாள் சாந்தா.

"வேண்டாம் ஆயி! நான் போய் எடுத்து வருகிறேன்" என்று கூறிவிட்டுப் படிகளில் இறங்கிச் செடிகளிடையே மறைந்தாள்.

அவள் போன திக்கையே நோக்கியவண்ணம் அசைவற்று உட்கார்ந்திருந்தாள் பார்வதி. தூணோடு சாய்ந்து நின்ற அம்பாபாயி, சிறு துளிகளாய்க் கன்னங்களில் உருண்டு வந்த கண்ணீரைத் துடைக்க மறந்தவளாய்க் குமுறி வரும் அழுகையை அடக்க முயன்றாள். சில நிமிஷங்களில் திரும்பி வந்தாள் சாந்தா. அவளுடைய ஏந்திய இரு கரங்களி



லும் ஒரு பூத் துணிப் பந்து. அதற்குள்ளிருந்து இதழ் விரிக்கும் ரோஜா மலராய்க் குவளை மலர் விழிகளை மலர்த்திக் குமிழ்மணி வாயைத் திறந்து சிரித்தது பூங்குழந்தை யொன்று. குழந்தையை மார்போடு அணைத்தபடி விரைவாய் நடந்து வந்த சாந்தா தன் தாயருகில் வந்ததும் சட்டென்று நின்றாள்.

அவள் தன் தாயைப் பார்த்த பார்வை, "அப்புறம் என்ன?" என்று கேட்பதுபோல் இருந்தது. மௌனமாய்த் திரும்பிப் பார்வதியைச் சுட்டிக்காட்டினாள் அம்பாபாயி.

தன் கையில் இருந்த பூந்துகில் பொட்டணத்தைப் பார்வதியின் மடியில் மெத்தென்று வைத்துவிட்டு, அவள் எதிரே ஒரு விநாடி அசையாமல் நின்றாள் சாந்தா.

அடுத்த கணம் 'சட்'டென்று அவள் காலைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டு எழுந்தாள். பிரளயமாய்ப் பெருகியது அவள் கண்ணீர். "பாய்ஜி ! நீங்கள் தெய்வம் ! என்னை மன்னித்து விடுங்கள். உங்களுக்கு மிகப் பெரிய துரோகத்தைச் செய்துவிட்டேன்!" பொங்கி வெடித்த குமுறல்கள் அவள் நெஞ்சிலிருந்து விம்மி வழிந்தன. அவள் உடல் முழுதும் குலுங்கியது.

தன் மடியிலிருந்த குழந்தையை ஒரு கையால் அணைத்தபடியே மெதுவாக எழுந்தாள் பார்வதி.

"உஸ், சாந்தா ! சமையற்காரர் காதில் விழப் போகிறது. குற்றம் உன்னுடையதல்லவென்பது எனக்குத் தெரியும். அதில் பாதிக்கு மேல் என்னுடைய குற்றமாகும். பஞ்சுப் பொதியை நெருப்புக்குப் பக்கத்தில் வைத்து விட்டேன்! அது பற்றிக் கொள்ளாமல் என்ன செய்யும்? ஆனால் அணைந்து விட்ட நெருப்பு என்று நான் கருதியது அடியிலேயே கனன்று கொண்டிருந்த அக்கினியாய்ப் பற்றிவிட்டது. போகட்டும். அந்தமட்டும் உன்னுடைய வாழ்க்கையைப் பாழாக்கிக் கருகிப் போக விடாமல், என்னால் இந்த உதவியாவது செய்ய முடிந்ததே என்று திருப்திப்பட்டுக் கொள்கிறேன்." — அவள் குரல் மெத்தென்று இறங்கியது. சாந்தா தன் விழிகளைத் துடைத்துக் கொண்டாள்.

"ஆயி! வா போகலாம், ரயிலுக்கு நேரமாகி விட்டது !" — அம்பாபாயி பார்வதியை நோக்கி, "பாய்ஜி, நாங்கள் போய் வரு

சிறப்புச் சிறுகதை

கிளேனும். அப்புறமாக, சாந்தா எல்லாம் எழுதுவான்'' என்று கைகூப்பினான்.

குழந்தையை மார்போடு அணைத்தபடியே எழுந்தாள் பார்வதி. இடுப்பிலிருந்து ஒரு கற்றை நோட்டுக்களை உருவி எடுத்துத் தன் எதிரே நின்ற அந்தத் தாயிடம் நீட்டினாள். அம்பாபாயி அதைக் கைநீட்டி வாங்கவில்லை.

''வேண்டாம், தாயே! முன்பே நீங்கள் கொடுத்த பணம் பாதிக்குமேல் அப்படியே இருக்கிறது. வேண்டுமானால் அப்பொழுது வாங்கிக் கொள்ளுகிறேன்'' என்றாள் அவள்.

''இதோ பார், அம்பா! நீயும் சாந்தாவும் போகும் இடம் முற்றிலும் புதிது. உனக்கு அங்கே என்ன செலவுகள் காத்திருக்கின்றனவோ! வேண்டாமென்று சொல்லாதே. இந்த வீட்டிலிருந்து என் தப்பிதம் காரணமாக உனக்கு, உன் குடும்பத்துக்கு மிகப் பெரிய தீமை நேர்ந்திருக்கிறது. அதற்குப் பரிகாரம் ஒரு சிறிதளவாவது செய்வதற்கு எனக்குச் சந்தர்ப்பம் கொடு'' எனத் தழுதழுத்து, இறங்கிப் போன குரலில் கூறியபடியே அந்த நோட்டுக்களை வலுக் கட்டாயமாக அம்பாபாயியின் கைகளில் திணித்தாள் பார்வதி.

மகளைத் திரும்பி நோக்கினாள் அம்பா. சாந்தாவின் கண்கள் பார்வதி ஏந்தியிருந்த குழந்தையின் மீது நிலைத்திருந்தன. அவள் எதையுமே காதில் போட்டுக் கொண்டதாகத் தெரியவில்லை. சற்றைக்கெல்லாம் தாயையும் மகளையும் தாங்கிய டாக்ஸி தோட்டத்துக்கு வெளியே போவதை நோக்கியபடியே தன் கரங்களிலேயே உறங்கிவிட்ட குழந்தையை இறுக அணைத்துக் கொண்டாள் பார்வதி. வண்டி கண்ணுக்கு மறைந்து போய் விட்டது.

மாடியிலிருந்த தன் அறைக்குள் நுழைந்து, குழந்தையைக் கட்டிலின் மீது படுக்க வைத்து விட்டுப் போர்த்தினாள். மின்சார விசிறியைச் சுழலவிட்டுச் சன்னல்களின் திரைகளை இறக்கினாள். பிறகு கதவைச் சத்தம் செய்யாமல் சாத்திக் கொண்டு கீழே வந்தாள்.

சமையல்காரக் கிழவர், டிரைவர் ஸேவியரிடம் பேசிக் கொண்டிருந்தார். ''நம் வீட்டுக்குப் புதிதாகத் தொட்டில் வந்திருக்கிறதே! சுமித்ரா வருவதாகக் கடிதம் வந்திருக்கிறதா? அம்மா எதுவுமே சொல்லவில்லையே!''

''எனக்கும் தெரியாதுங்க; நேத்து மத்தியானம் தானுது கடைக்குப் போய்ப் பார்த்து வாங்கிக் கையோடு காரிலேயே கொண்டு வந்திட்டாங்க; யாருக்காக வாங்கினுங்க என்பதே எனக்கு விளங்கலீங்க; கேட்கலாமான்னுகூடப் பார்த்தேன். அப்புறம் ஏதாவது நினைச்சிக்கப் போறாங்களேன்னுதான் கம்மாயிருந்திட்டேன்!''

''என்னமோ எனக்கும் ஒன்றும் புரியவில்லை'' என்று இழுத்தபடியே தம் கைவேலையைத் தொடர்ந்தார் சமையற்காரர்.

இந்தச் சம்பாஷணை காதில் விழுந்ததாகவே காட்டிக் கொள்ளாமல் படிகளில் இறங்கி ஹாலுக்குள் நுழைந்தாள் பார்வதி.

புகைத்துக் கொண்டிருந்த சிகரெட்டைச் சட்டென்று காலடியில் போட்டுத் தேய்த்து விட்டு, மரியாதையாய் ஒதுங்கி நின்றான் ஸேவியர்.

''விமான நிலையத்துக்குப் போகவில்லையா? இல்லாவிட்டால் விமானம் பத்தரை மணிக்கு வந்து விடுமே!'' என்று கூறி அவனை நோக்கினாள் பார்வதி.

''இல்லீங்க; இன்னிக்கு விமானம் பத்தரை மணிக்குத்தான் அங்கிருந்து கிளம்புதாம். போன் பண்ணிக் கேட்டுட்டேன். இங்கே பன்னிரண்டு மணிக்கு முன்னாலும் வராது. இன்னும் ஒன்றரை மணிக்கு மேல் விமான நிலையத்துக்குப் போனாலும் போதும்.''

''அப்படியா?'' என்று கேட்டுவிட்டு ஏதோ யோசித்தபடியே அந்த ஹாலின் ஒரு மூலையில் போடப்பட்டிருந்த புதிய தொட்டிலருகே போய் நின்றாள் பார்வதி.

அழகான கருங்காலி மரத்தினலான அந்தச் சிறு தொட்டில் அவளது மனத்தில் எத்தனையோ வருடங்களுக்கு முன்னே புதைந்து மறைந்து போயிருந்த நினைவுகளைத் தட்டியெழுப்பியது.

குழந்தை சுமித்ராவுக்கு அப்பொழுது மூன்றே மாதம் இருக்கும். பம்பாய் நகரில் மாதுங்காவில் ஒரு பெரிய கட்டடத்தில், ஒரு சிறிய படுக்கையறையும், அடுக்களையும் கொண்ட போர்ஷனில், தன் கணவனுடன் குடித்தனம் செய்ய வந்தாள் பார்வதி.

கணவன் தன்னை அன்புடன் வரவேற்று ஆவலுடன் குழந்தையைக் கையில் வாங்கிக் கொண்ட பொழுது இந்த உலகத்தில் தனக்கு நிகர் யாருமே இல்லை என்ற பெருமிதம் அவளுடைய உள்ளத்தில் தலையெடுத்தது.

தினமும் ஓர் இடமாக, அவளுக்கு பம்பாயைச் சுற்றிக் காண்பித்தான் பாஸ்கரன். சௌபாத்திக் கடற்கரையும், மலபார் ஹில் கட்டடங்களும், தொங்கும் தோட்டமும், அளப்பரிய விற்பனைப் பொருள்கள் நிரப்பப் பட்டிருந்த பெரும் கடைகளும் பார்வதிக்குப் பெரும் அதிசயமா யிருந்தன.

அன்று அரை நிலா. அகன்ற சாலையின் இருபுறமும் பளிச்சிட்ட குழல் விளக்குகளின் வெளிச்சத்தில், அழகு கொழிக்கும் சித்திரப் பொம்மையாய்த் தன்னுடன் வந்து கொண்டிருந்த தன் அழகு மனைவியைப் பார்த்துப் பெருமிதமடைந்தான் பாஸ்கரன்.

''பார்வதி!'' — அவன் குரல் குழைந்தது.

''ஏன்? என்ன?'' — அதிசயத்துடன் அவனை நோக்கினாள்.

''பார்வதி! இப்பொழுது நீ பம்பாய் வந்து ஆறுமாசம் ஆகிவிட்டதில்லையா? இது வரையிலும் நீ ஒரு தடவையாவது உனக்காக என்னிடம் எதுவுமே கேட்டதில்லையே!''

''எனக்கு வேண்டியதெல்லாம் இருக்கும் போது வேறு எதை உங்களிடம் கேட்பது?''

கேசம் உதிருகிறதே என்ற கவலையா?



இன்றே ஸில்விக்ரின் உபயோகிக்கத் தொடங்கி உங்கள் கேசத்திற்குப் புத்துயிர் அளியுங்கள்

இந்த அபாயக் குறிகளை அசட்டை செய்யாதீர்கள்.

கேச உதிர்வு. உச்சந்தலையிலே தினவு. கார்போல் வரண்ட உரோமம். உங்கள் கேசத்திற்கு உகந்த ஊட்டமில்லை என்பதற்கான அறிகுறிகள் இவை. ஊட்டமின்மைதான் இளமையிலேயே வழுக்கை விழக் காரணமாகிறது. அந்த ஊட்டமின்மைக்கு உரிய நிவாரணம் ஸில்விக்ரின்—கேசத்திற்குரிய இயற்கையான போஷாக்கு.


ஸில்விக்ரின் எப்படி வேலை செய்கிறது.

18 அமினோ-அமிலங்களை உங்கள் கேசத்திற்கு உணவாக அளிக்கிறது இயற்கை. இந்த அமினோ—அமிலங்கள் எல்லாமே அடர்வாக ஒன்று சேர்ந்த வடிவில் கிடைக்கச் செய்வது ஸில்விக்ரின் ஒன்றே. அது வேகமுடன் மயிர்க்கால்களை ஊடுருவி, ஊட்டமளித்து உரமேற்றி, பாங்கான கேச வளர்ச்சியை ஊக்குவிக்கும்.

உபயோக விதிமுறைகள்:

உங்கள் உச்சந்தலைமீது அன்றாடம் இரு நிமிட நேரம் ப்யூர் ஸில்விக்ரின் தேய்த்திடுங்கள். கேச நிலை அபிவிருத்தி அடையும் வரை உபயோகியுங்கள் ப்யூர் ஸில்விக்ரின். கேச நலம் மீண்டு விட்டதென்றால் அதன் பின் கேச நலனைக் காத்துக் கொள்ளத் துணை புரிவது ஸில்விக்ரின் ஹேர் டிரஸ்ஸிங்-ப்யூர் ஸில்விக்ரின் அடங்கிய, எண்ணெய் அடிப்படை கொண்ட லோஷன்.

ஆல் அபௌட் ஹேர் (All About Hair) என்ற புத்தகத்தின் இலவசப் பிரதியைப் பெற, எழுதுங்கள்: டிபார்ட்மெண்ட் K-1, தபால் பெட்டி 727, பம்பாய்-1



ஸில்விக்ரின் தயாரிப்புகள்—ஆடவர், பெண்டிர் யாவரும் உபயோகிக்கத் தக்கவை.

ஸில்விக்ரின்

கேசத்திற்குரிய இயற்கையான போஷாக்கு.


LPE-Aiyars S. 1 TAM

இதழ்கள் மலரச் சிரித்தாள் பார்வதி.

கண்களில் ஆர்வம் மின்ன அவளை நோக்கிய பாஸ்கரின் முகத்தில் வாட்டம் உண்டாயிற்று.

"பார்வதி! உன்னைச் சொல்லு: நீ விரும்பிக் கேட்பதை என்னால் வாங்கித் தர முடியாதென்று எண்ணுகிறாயல்லவா?" கலகலவென்று சிரித்த பார்வதி அது நெடுஞ்சாலை என்பது ஞாபகம் வந்ததும் சட்டென்று சிரிப்பை அடக்கிக் கொண்டாள்.

"அப்படியானால் நான் ஒன்று கேட்கிறேன். வாங்கிக் கொடுங்கள். அதோ பார்த்தீர்களா? அந்த மரக்கடை வாசலில் வைத்திருக்கிறதே. அந்த மாதிரி ஒரு தொட்டில் ஸ்டாண்டுடன்கூட நம் சுமித்ராவுக்காக வேண்டும். இரவு வேளைகளில் அவளைத் தரையில் விடப் பயமாயிருக்கு: பூச்சி பொட்டுகள் வந்து விடுமோவென்று. அதற்காகத்தான்."



"அப்பா, ஒரு தடவைகூட என்னை இவன் காரை ஓட்ட விடமாட்டேன் என்கிறான்."

"அதுக்கு நான் என்னடா பண்ணணுங்கிறாய்?"

"அதைச் சர்க்கார் உடைமையாக்கி விடேன்."

இதைச் சொல்லி விட்டுத் தான் ஏதாவது தப்பாகக் கேட்டு விட்டோமோ என்ற கவலையுடன் பாஸ்கரனுடைய முகத்தை நோக்கினாள். அவளுக்கு நன்றாகத் தெரியும், பாஸ்கரனுடைய தற்போதைய பொருளாதார நிலைமையில், அந்த மாதிரி ஒரு தொட்டில் வாங்குவது இயலாத காரியம் என்று. ஆயினும் அவள் கைக்கிய பொழுது சட்டென்று கேட்டு விட்டாள். ஒரு விநாடி மௌனம் சாதித்தான் அவள் கணவன்.

"பாரு! இன்னும் இரண்டு மாசத்தில் போனஸ் வரும். வந்தவுடன் கட்டாயமாய் இதே போல் குழந்தைக்கு ஒரு தொட்டில் வாங்கி விடுவோம்."

பார்வதியின் முகம் மலர்ந்தது, மகிழ்ச்சியுடன் நடந்தாள்.

அவ்வருஷத்திய போனஸ் வருமுன்பே பாஸ்கரனுக்கு யோகம் அடிக்கத்தது. கம்பெனியின் சார்பில் பயிற்சிக்காக மேல் நாடுகளுக்குப் போனான். ஆறு மாசத்தில் திரும்பினான். மேலும் மேலும் பதவியும் வருமானமும் உயர்ந்தன. மாதுங்காவிலிருந்து மலபார் ஹில்லில் பெரிய பங்களாவுக்கே வந்து விட்டான். கம்பெனியின் டைரக்டர் ஆனான். சுமித்ராவுக்கப்புறம் இரண்டு ஆண் குழந்தைகள். வருடங்கள் ஓடிவிட்டன. தொட்டிலைப் பற்றிய ஞாபகமே போய் விட்டது. கார், பங்களா, வேலைக்காரர்கள், மாலையிலும் இரவிலும் விருந்துகள், பெரும் புள்ளிகளின் சிநேகம். இப்படியாக எல்லாமே உயர்ந்து விட்டன. பார்வதி மட்டும் பழைய பார்வதியாகவே, மடிசார்ப் புடவையும், வைரத்தோடு மூக்குத்தியுமாகத் துளியும் மாறாமல் தளதளவென்று இருந்தாள். சுமித்ரா பி. ஏ. படித்தாள். நல்ல வரனாகப் பார்த்துக் கல்யாணமும் நடந்தது. இது பார்வதியின் நிர்ப்பந்தம். பாஸ்கரனுக்கு சுமித்ரா தன் தாயைப் போலல்லாமல் நவநாகரிகமாக இருக்க வேண்டும் என்று ஆவல். ஏனோ சுமித்ராவுக்கும் அது விஷயத்தில் தந்தையின் போக்குகள் பிடிக்கவில்லை. தாயைப்போலவே அழகும் அடக்கமுமாய் இருந்தாள். திருமணமாகி இரண்டு வருஷங்களுக்கெல்லாம் சொர்ண விக்கிரகம் போன்ற ஆண் குழந்தையையும் பெற்று விட்டாள்.

நல்ல செல்வாக்குள்ள கணவனுடன் டில்லியில் குடும்பம் நடத்திக் கொண்டிருந்தாள்.

சுமித்ராவுக்கப்புறம் பிறந்த அவளுடைய தம்பிகள் இருவரும் அமெரிக்காவில் மேல் படிப்புக்காகப் போய் விட்டார்கள். ஒரு வருஷமாக அப்பெரிய பங்களாவில் பார்வதியும் பாஸ்கரனும் மட்டுமே இருந்தார்கள்.

மணி இரண்டு அடித்துவிட்டது. தொட்டிலில் சிணுங்கிய குழந்தையை எடுத்துப் பால் கரைத்துப் புகட்டினாள் பார்வதி. பாலைக் குடித்து விட்டுத் தன் குவளைக் கண்களை அகல மலர்த்தித் தன்னைப் பார்த்துச் சிரித்த அப் பூங்குழந்தையைக் கண்டு அவளுடைய தாய் உள்ளம் கனிந்து கசிந்தது. குழந்தையை வாரி அணைத்து உடம்பைத் துடைத்து

விட்டு வேறு சட்டை போட்டாள். பிறகு அதைத் தொட்டிலில் கிடத்தி விட்டுப் பக்கத்திலேயே உட்கார்ந்து கொண்டாள். அப்பிறகு, தன்னுடைய கொழுகொழுப்பான கைகால்களை உதைத்துக் கொண்டும், கட்டை விரலை வாயிலிட்டுச் சுவைத்துக் கொண்டும் விளையாடுவதைப் பார்த்தபடியே நேரம் போனது தெரியாமல் அப்படியே யோசனைகளில் ஆழ்ந்து விட்டாள்.

சமையற்காரக் கிழவருக்கு இன்று எல்லாமே அதிசயமா யிருந்தது. பன்னிரண்டு மணிக்குள்ளாகப் பூஜையை முடித்து உணவு அருந்தி விடுவது பார்வதியின் வழக்கம். பாஸ்கரன் ஊரில் இல்லாத நாட்களில் இன்னும்கூட சீக்கிரமாகவே எல்லாம் முடிந்து, சமையற்காரக் கிழவர் மத்தியான உறக்கத்துக்குப் போய் விடுவார். இன்று மணி ஒன்றரையாகியும் கிணற்றில் கல் போட்டது போல் இருந்தது. வீட்டில் புதிதாக வந்த தொட்டில், அதில் விளையாடும் குழந்தை எல்லாம் கிழவருக்கு அதிசயமா யிருந்தன. பேசாமல் இன்னொரு தம்ளர் காப்பியைக் கலந்து குடித்து விட்டுச் சமையலறைத் தாழ்வாரத்தில் துண்டை விரித்துப் படுத்துத் தூங்கிப் போனார்.

வாசலில் வந்து நின்ற காரிலிருந்து பாஸ்கரன் இறங்கினார். சேவியர் அதிலிருந்து தோல் பெட்டியை எடுத்து வந்து ஹாலில் வைத்துவிட்டு எஜமானின் உத்தரவை எதிர்பார்த்துக் கொண்டு சற்று நின்றான்.

"நான் இன்று ஆபீஸ் போகவில்லை. வண்டியைக் காரேஜில் விட்டு விட்டு நீ வீட்டுக்குப் போ. நாளைக் காலை பத்து மணிக்கு வந்தால் போதும்" என்றார் பாஸ்கரன்.

ஒரு நிமிஷம் தயங்கினான் சேவியர்.

"மாலையிலே அம்மாவுக்கு வண்டி வேண்டியிருக்குமோ என்னவோ?"

"பரவாயில்லை. அப்படி வேண்டுமானால் ஐந்து மணிக்கு ஜோஸப் டியூட்டிக்கு வருவான். அவனை எடுக்கச் சொல்கிறேன். நீ வீட்டுக்குப் போ" என்று கூறிவிட்டு மாடிப் படிகளில் ஏறினார் பாஸ்கரன். சேவியர் போய் விட்டான்.

"பார்வதி !" என்று அழைத்தபடியே படிகளில் ஏறி மாடி ஹாலை அடைந்த பாஸ்கரன் சுற்றுமுற்றும் பார்த்தார். எங்கும் சத்தமேயில்லை. 'தூங்குகிறாளா என்ன? இவ்வேளையில் தூங்க மாட்டாளே !' என்று எண்ணிக் கொண்டபடியே வெறுமையாகச் சாத்தி வைக்கப்பட்டிருந்த கதவை மெல்லத் திறந்தார்.

கதவு திறக்கும் சத்தம் கேட்டுச் சட்டென்று திரும்பினாள் பார்வதி. வந்தது யார் என்று தெரிந்ததும் வேகமாய்க் குனிந்து, தொட்டிலில் கிடந்த குழந்தையை வாரி எடுத்துத் தன் மார்போடு அணைத்துக் கொண்டாள்.

அப்படியே அவரை நோக்கியபடி அசையாமல் நின்றாள். அவள் விழிகள் பளபளவென மின்னின. அவ்விழிகளில் தேங்கிநின்ற குற்றச்சாட்டையும் வேதனையின் சாயலையும் நேருக்கு நேர் சந்திக்க இயலாமல் அதிர்ந்து போய் ஓரடி பின்வாங்கி நின்ற தன் கணவனின் முகத்தில் பதித்த பார்வையை அருவருப்புடன் சட்டென்று தரையின்மீது திருப்பினாள்.

"பார்வதி ! இது என்ன? யார் குழந்தை இது? இந்தத் தொட்டில் இங்கு எதற்கு?"

பார்வதியின் நெஞ்சம் வெறுப்பினால் காந்தது. 'ஆகா! என்ன வேஷம்? பேரன் பேத்திகள் பிறந்த பிறகுகூட இந்த லீலை யெல்லாம் வேண்டுமோ? கள்ளனுருவியே !' என்று எண்ணிக் கொண்டாள்.

"பார்வதி !" என்ற தயக்கமும் கலக்கமுமாய்க் குரல் இறங்கியது. "இதெல்லாம் என்ன? இந்தக் குழந்தை யாருடையது?"

சட்டென்று இரண்டடி முன்னுக்கு வந்தாள் பார்வதி. அவள் அணைப்பிலிருந்த குழந்தை இலேசாகச் சிணுங்கியது. குழந்தையின் முதுகை வருடியபடியே பேசினாள். வார்த்தைகள் ஒவ்வொன்றும் கண்டாமணி நாதமாய் வெளிவந்தது.

"இந்தக் குழந்தை யாருடையது என்று கேட்டீர்கள்? இது சுமித்ராவின் தங்கை—உங்களுடைய குழந்தை. இந்தத் தொட்டில் இவளுக்காகத்தான் வாங்கினேன்! சுமித்ராவுக்கே வாங்க முடியவில்லை. இதுவும் அவள் தங்கைதானே. இவளுக்காகவாவது இருக்கட்டும் என்று!"

பாஸ்கரனின் பொட்டில் அறைந்தாற்போல் ஒவ்வொரு வார்த்தையும் கவண் கல்லாய்த் தெறித்து வந்தன. கைகால்கள் தொய்யச் சுவரைப் பிடித்துக் கொண்டு சாய்ந்து நின்றவண்ணமே அவளைப் பார்க்க முடியாமல் தலை குனிந்து கொண்டார்.

மீண்டும் பேசினாள் பார்வதி. ஆனால் அவள் குரலிலிருந்த வெம்மை குறைந்து விட்டது.


"நீங்கள் எதற்குத் தலை குனியனும்? உங்களைச் சாந்தாவின் தந்தையாக மதித்து ஒன்றுமறியாத அச்சிறு பெண்ணை இரண்டு நாட்கள் உங்களுக்குச் சமைத்துப் போட விட்டு விட்டு, நான் வெளியூர் போனேன் இல்லையா? அதற்காக நான் தலை குனியனும். இவ்வளவு வருஷங்கள் பழகியும் உங்களை உண்மையாகத் தெரிந்து கொள்ளாமலிருந்தேனே, அதற்கு நான் தலை குனியனும் ! ஏனென்றால், நீங்கள் ஆண் பிள்ளை. எந்தக் கேவலமான காரியம் செய்தாலும் தலை குனிய வேண்டாம்! நான் பெண்ணல்லவா ? உங்களுக்காக, அந்தப் பெண் சாந்தாவுக்கு நீங்கள் இழைத்த அநீதிக்காக, உங்கள் மனைவி என்ற ஹோதாவில் நான் தலை குனியனும்!"

மளமளவென்று பெருகிய கண்ணீரைச் சேலைத் தலைப்பினால் துடைத்துக் கொண்டு, 'வீல் வீல்' என்று கத்தும் குழந்தையை இறுக அணைத்தபடியே வேகமாய் அறையிலிருந்து வெளியே போய் விட்டாள் பார்வதி.

பார்வதியின் முகம் பளிரென்று துடைத்து விட்டாற்போல் நிச்சலனமா யிருந்தது.

சற்றைக்கெல்லாம் மெல்லத் தள்ளாடியபடியே அங்கிருந்த சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார். பாஸ்கரனின் கண்களுக்கு எதிரே கிடந்த தொட்டில் தன்னைப் பார்த்துச் சிரிப்பது போல் இருந்தது.

மன்னிப்பு?



"இன்றைக்குச் சாயந்திரம் மீட்டிங் எத்தனை மணிக்கு?" என்றார் கந்தசாமி தம் காரியதரிசி மோகனைப் பார்த்து.

"ஆறு மணிக்கு சார். பிறகு எட்டு மணிக்கு மூன் லைட் ஹோட்டலிலே விருந்து இருக்கிறது" என்றான் மோகன்.

"சரி, ஐந்து ஐம்பதுக்கு வண்டியை எடுக்கச் சொல்லுங்கள்" என்று கூறிய கந்தசாமி தம் வேலைகளில் ஈடுபட்டார்.

மோகன் அவர் அறையிலிருந்து வெளி வரும் சமயம் பார்த்துக் கனத்த அட்டை போட்ட புஸ்தகம் ஒன்று பறந்து வந்து அவன் முகத்தைத் தாக்கியது.

மோகன் முகத்திலேயே மிக அழகானது அவன் மூக்கு. யாரையும் கவரும் சக்தி தன் மூக்குக்கு உண்டு என்று பெருமைப்படுபவன் மோகன். எதையும் கவரும் சக்தி தன் மூக்குக்கு உண்டு என்பதை அப்போதுதான் உணர்ந்தான். ஏனென்றால் பறந்து வந்த புத்தகத்தை வேறெந்த பாகத்துக்கும் அனுப்பாமல் பலமாகத் தன்னிடம் இழுத்துக் கொண்டது அந்த மூக்கு.

"அப்பா!" என்று வலி தாங்காமல் வீறிட்டான் மோகன்.

இவன் போட்ட சத்தத்தைக் கேட்ட கந்தசாமி வெளியே ஓடி வந்தார். கைக் குட்டையால் மோகன் தன் மூக்கை அழுத்திப் பிடித்துக் கொண்டு நிற்பதையும், அவனுக்குச் சற்றுத் தூரத்தில் தனது அண்ணன் மகன் மணியினுடைய சித்திரப் புஸ்தகம் அலங்கோலமாக விழுந்து கிடப்பதையும் பார்த்தார் அவர்.

"மோகன்! என்ன ஆச்சு?" என்றார் கவலையோடு.

"ஒன்றுமில்லை, சார்! ஒரு புஸ்தகம் ரொம்பக் கோபமாக என் மூக்கின் மேல் பாய்ந்தது....." என்றான் மோகன்.

"மணியின் வேலையாகத்தான் இருக்க வேண்டும்" என்றார் கீழே விழுந்து கிடந்த புஸ்தகத்தை நோக்கியபடியே.

"மணியின் வேலையேதான். சந்தேகமே வேண்டாம். அர்ஜுனன் வைத்த குறி தப்பினாலும் தப்பியிருக்கும், மணி வைத்த குறி இது வரையில் தப்பியது கிடையாது" என்றான் மோகன் பூர்வ அநுபவங்களால்.

"டாக்டரை வரவழைக்கட்டுமா?" என்றார் கந்தசாமி மிகவும் கவலை காட்டியபடியே.

"மணி செய்யும் விஷமங்களுக்காக டாக்டரை வரவழைப்பதென்றால் நிரந்தரமாக வீட்டிலே ஒரு டாக்டரை வைக்க வேண்டும், சார்! முதல் ஒன்றிரண்டு தரம் கஷ்டமாக இருந்தது. இப்போது இதெல்லாம் சகஜமாகி விட்டது. கவலைப்படாதீர்கள்" என்று சொன்னான் மோகன் அவரைத் தேற்றிய படியே.

"மணியைக் கண்டித்தாக வேண்டும். இப்படியே விட்டுவிடக் கூடாது" என்று கூறினார் கந்தசாமி.

"உண்மைதான், சார். கண்டிக்க வேண்டியதுதான். ஆனால் அவனுக்கு என் மேல் என் கோபம் என்றுதான் புரியவில்லை. அவனுக்குக் கோபம் வரும்படியாக நான் ஒன்றும் செய்ததாக எனக்கு நினைவும் இல்லை" என்றான் மோகன்.

"கோபம் வராவிட்டால் இப்படி நடந்து கொள்ள மாட்டானே" என்றார் கந்தசாமி.

"மணி எப்போதும் பொய் சொல்வது கிடையாது சார். விசாரித்தால் உண்மையைச் சொல்லி விடுவான்" என்றான் மோகன்.

"அதுவும் வாஸ்தவம். இப்போதே விசாரிக்கிறேன்" என்று வீட்டுக்குள் சென்று மணியை அழைத்து வரும்படி வேலையாளை அனுப்பினார்.

கந்தசாமி ஹாலில் உட்கார்ந்து கொண்டு செய்தித் தாளைப் படித்துக் கொண்டிருந்த போது மணி அங்கு அழைத்து வரப்பட்டான்.

மணிக்குச் சுமார் ஆறு வயதிருக்கும். நல்ல போஷாக்குக் காரணமாகக் கொழு கொழுவென்றிருந்தான். குறு குறு வென்

நிறுத்த அவன் பார்வை எதை எடுத்து உடைக்கலாம், என்ன விஷமம் செய்யலாம் என்று தேடியபடியே இருந்தன.

''மாசிலாமணி! உட்கார்!'' என்றார் கந்தசாமி, குரலில் கடுமையை வரவழைத்துக் கொண்டு.


''முடியாது!'' என்று அவர் எதிரில் நின்ற படியே பதில் சொன்னான் மணி.

''மாசிலாமணி! உனக்குத்தான் சொல்வது. உட்கார்!'' என்று அதட்டினார் கந்தசாமி.

''இத்தனை நாட்கள் 'மணி மணி' என்று கூப்பிட்டு விட்டு இன்னிக்கு மாசிலாமணி ஆயிட்டேனா? உட்காரமாட்டேன். மணின்னு கூப்பிடுங்க உட்காருகிறேன்'' என்றான்.

''மாசிலாமணி!''

''மணி! மணி! மணி! மணின்னு கூப்பிடாட்டி நான் அழுவேன்'' என்றான் மணி கண்ணீரை வரவழைக்கச் சித்தமாய்.



தோட்டக்கார விசுவநாதன்

''மணி, மோகன் மீது ஏன் புத்தகத்தை எறிந்தாய்?''

''கோள் மூட்டி னாராக்கும்?''

''கேட்டதற்குப் பதில் வேண்டும். ஏன் எறிந்தாய், சொல்!'' என்றார் கடுமையாக.

''அவர் உங்களை ரொம்பச் சாதுன்னு டீச்சர்கிட்டே சொல்லிக் கிட்டிருந்தாரே.... நான் கேட்டேனே'' என்றான் மாசிலாமணி.

''சாது என்றால் என்ன தப்பு?'' என்று கேட்டார் கந்தசாமி ஆச்சரியமடைந்து.

''நேத்து நீங்கதானே பேப்பரிலே படிச்சிட்டிருந்தீங்க, ஒரு சாது கோயில்லே இருக்கிற நகையெல்லாம் திருடிட்டுப் போயிட்டான்னு. உங்களை ரொம்பச் சாதுன்னு சொன்னால் நீங்க ரொம்பத் திருடன்னுதானே அர்த்தம்?'' என்றான் மணி.

''சாது போல் வேஷம் போட்ட திருடன் கோயில் நகைகளைத் திருடினான் என்று படித்தேன். சாது என்றால் திருடன் என்று அர்த்தம் இல்லை. ரொம்ப நல்லவர்; கெடுதலே செய்யாதவர்னு அர்த்தம்'' என்று விளக்கினார் கந்தசாமி.

''நிஜமாகவா?'' என்று வியப்பாகக் கேட்டான் மணி.

''சந்தேகமே வேண்டாம். நீ மோகன் மீது கோபம் கொண்டது தவறுதானே?''

''தவறுதான், சித்தப்பா!''

''அதனால் நீ மோகனிடம் போய் உடனே மன்னிப்புக் கேட்டாக வேண்டும்!''

''சரி, சித்தப்பா!''

''என்னதான் கோபம் வந்தாலும் புஸ்தகத்தை விட்டெறியலாமா?''

''கிரிக்கெட் பந்தை எடுத்து வர்றதுக்குள்ளே மோகன் போயிடுவார்னு புஸ்தகத்தை எறிந்தேன், சித்தப்பா!''

''ரொம்ப நன்றாக இருக்கிறது. இனிமேல் எதையும் எறியக் கூடாது தெரியுமா? போய் மன்னிப்புக் கேள். அதோ தோட்டத்தில் புஸ்தகம் படித்துக் கொண்டிருக்கிறார் மோகன்'' என்று அவன் தோட்டத்தில் உட்கார்ந்திருப்பதை ஜன்னல் வழியாகக் காட்டினார்.

மணி வந்ததையும் கவனிக்காமல், சுவாரசியமாகப் புஸ்தகம் படித்துக் கொண்டிருந்தான் மோகன்.

''கோள் மூட்டி, மோகன்!'' என்று அவன் காதண்டை சென்று உரக்கக் கத்தினான் மணி.

''அடே! காதே செவிடாகி விடும்போல் இப்படிக் கத்தினானே கத்துவது?'' என்று தன் காதில் விரலை விட்டுத் துரிதமாகப் பலமுறை ஆட்ட ஆரம்பித்தான் மோகன், காதில் இட்ட ஊளையின் அதிர்ச்சியைச் சமாளிப்பதற்காக.

''உன் மேல் புஸ்தகத்தை எறிந்ததற்கு மன்னித்து விடு கோள் மூட்டி!'' என்று சொல்லிக் கொண்டே அவன் தலை மயிரைத்

தன் இரு கைகளாலும் பிடித்துப் பல முறை உலுக்க ஆரம்பித்தான் மணி.

''மணி! ஏய் மணி...!'' என்றபடி வீறிட்டான் மோகன். வலி தாங்க முடியாமல் தன் தலை மயிரை மணியின் குரங்குப் பிடியினின்றும் தப்ப வைக்கத் தன்னால் இயன்றவரை முயற்சி செய்து பார்த்தான் மோகன்.

''என்னை மன்னித்தேன் என்று சொல். கோள்மூட்டி'' என்று இன்னும் வேகமாக உலுக்கினான் மணி.

''மன்னித்தேனடா. மனமார மன்னித்தேன். தயவுசெய்து தலை மயிரை விட்டுவிடு'' என்று மன்றாடினான் மோகன்.

''இனி கோள்மூட்ட மாட்டாயே? மாட்டாயே?'' என்றான் மணி, உலுக்கும் வேகத்தை அதிகரித்தபடியே.

தன் பலத்தை யெல்லாம் உபயோகித்து மணியைத் தூரத் தள்ளினான் மோகன். மோகன் தலைமயிரில் ஒரு பிடியைப் பிய்த்துக் கொண்டு அவனை விட்டுப் பிரிந்தான் மணி.

மோகன் போட்ட கூக்குரலைக் கேட்டு, மணிக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க நியமிக்கப்பட்டிருந்த கோமளா விரைந்து தோட்டத்துக்கு வந்தாள். அவள் வருவதற்கும் மோகனால் தள்ளப்பட்ட மணி கீழே 'தடார்' என்று விழுவதற்கும் சரியாய் இருந்தது.

''என்ன மிஸ்டர் மோகன்! குழந்தையை இப்படித்தானா தள்ளுவது?'' என்று மோகனைக் கடிந்தபடி கீழே விழுந்த மணியை எடுத்து அவன் உடையைச் சரி செய்யலானாள் கோமளம்.

''இது மிகவும் நன்றாக இருக்கிறதே. இந்த அருமைக் குழந்தை என்னை என்ன செய்ததென்று முதலில் கேள், கோமளா'' என்றான் மோகன், சிரழிந்த தனது தலையைத் தடவிக் கொடுத்தபடி.

''குழந்தை உங்களை என்ன செய்துவிட முடியும் ?''

''என் தலை மயிரை வேரோடு பிடுங்கி எடுத்து விட்டான். இதோ, பார். இனி வாழ்க்கை முழுதும் என் தலை சொட்டை தான் '' என்று தன் தலையில் பாதிக்கப்பட்ட பாகத்தைக் காட்டினான் மோகன்.

''மணி என்ன இது?'' என்றாள் கோமளா.

''மோகனிடம் மன்னிப்புக் கேட்டேன் '' என்றான் மணி.

''மன்னிப்பா ?'' என்றாள் கோமளா ஒன்றும் புரியாதவளாக.

''ஆமாம், டீச்சர்! நேத்து மோகன் உங்ககிட்டே சித்தப்பாவை ரொம்பச் சாதுன்னு சொல்லலே? சாதுன்னா திருடன்னு நினைச்சுக்கிட்டு, புஸ்தகத்தை இவர் மேலே வீசி எறிஞ்சேன். சாதுன்னா திருடன் இல்லேன்னும் ரொம்ப நல்லவன்னும் சித்தப்பா அப்புறம்தான் அர்த்தம் சொன்னார். அதனாலே மோகன்கிட்டே மன்னிப்புக் கேட்டேன்'' என்று தன் செய்கைக்குக் காரணம் காட்டி விளக்கினான்.

''மன்னிப்புக் கேட்கிறதற்கு என் தலை மயிரைப் பிய்த்துச் சித்திரவதை செய்வானேன் ?'' என்றான் மோகன்.

''உங்க மேலே புஸ்தகத்தை எறிஞ்சது தப்பில்லையா? அதனாலே மன்னிப்புக் கேட்டேன். ஆனால் நான்தான் உங்க மேலே புஸ்தகத்தை எறிஞ்சேன்னு சித்தப்பாகிட்டே கோள் மூட்டினீங்க இல்லையா? அதற்காகத் தலைமயிரைப் பிடித்தாட்டினேன்!''

இவர்கள் சம்பாஷணை வளராமல் வேலைக்காரன் வந்து மணியைக் கந்தசாமி அழைத்து வரச் சொன்னதாகக் கூறினான்.

கந்தசாமி முன் நிறுத்தப்பட்டான் மணி. ''மணி! தோட்டத்தில் என்ன ரகளை?'' என்று கேட்டார்.

''ரகளை ஒன்றுமில்லையே?'' என்றான் மணி.

''மோகன் ஏன் கூச்சல் போட்டார்?''

''வலி தாங்காமல் கத்தினார்?''

''நான் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டுதான் இருந்தேன். உன்னை மன்னிப்புக் கேட்கச் சொல்லித்தானே அனுப்பினேன்? பின்னே ஏன் மோகன் தலை மயிரைப் பிடித்து ஆட்டினாய் ?'' என்றார் கடுமையாக.

''நான் மன்னிப்புக் கேட்டேன் சித்தப்பா. என்னை மன்னித்ததாக மோகன் சொல்லும் வரை நான் விடவே இல்லையே?''

''பின்னே, ஏன் மோகன் கூக்குரலிட்டான்?''

''மயிரைப் பிடித்துப் பலமாக இழுத்தால் வலிக்காதா?''

''ஏன்டா, அப்படிச் செய்தாய் என்றால்?'' என்றார் கந்தசாமி மிகவும் கோபமாக.

''நான்தான் புஸ்தகத்தை அவர் மேல் எறிந்தேன் என்று உங்களிடம் மோகன் கோள் மூட்டினாரே. கோள்மூட்டியைச் சும்மா விடலாமா?'' என்று நீதி பேசினான் மணி.

''அவன் என்னிடம் கோள் மூட்டினான் என்று உனக்கு யார் சொன்னது?''

''பின்னே நான் புஸ்தகத்தை எறிந்த விஷயம் உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''வலி தாங்காமல் மோகன் அலறியபோது நான் வந்து பார்த்தேன். உன் புஸ்தகம் அவனருகில் இருந்ததால் நீதான் இப்படிச் செய்திருக்க வேண்டும் என்று நானே யூகித்தறிந்து கொண்டேன்'' என்று விளக்கம் கூறினார் கந்தசாமி.

''அப்படியென்றால் மோகன் கோள் மூட்டவில்லையா ?''

''நிச்சயமாக இல்லை.''

''என்னை மன்னித்துவிடுங்கள், சித்தப்பா!'' என்றான் மணி தீனமாக.

''என்னிடம் மன்னிப்புக் கேட்டு என்ன புண்ணியம்? மோகனிடம் மன்னிப்புக் கேள். மன்னிப்புக் கேட்கிறேன் என்று மறுபடியும் ஏதாவது செய்து வைக்காதே !''

''இனி மேல் இப்படி யெல்லாம் செய்ய மாட்டேன், சித்தப்பா !'' என்றபடி புறப்பட்டான் மணி.

மணி மோகனைத் தேடித் தோட்டத்துக்கு வரும் போது கோமளா மோகன் தலையில் கசிந்த ரத்தத்தைத் தன் கைக்குட்டையால் துடைத்தபடி இருந்தாள்.

''மோகன்! நீங்கள் கோள்மூட்டிவிடவில்லையாம். உங்கள் மயிரைப் பிடித்திழுத்ததற்கு மன்னித்து விடுங்கள்'' என்றான் மணி தீனமாக.

''ஐயையோ! மறுபடியும் மன்னிப்பா?'' என்று அலறியடித்துக் கொண்டு ஓரே ஓட்டமாக ஓடினான் மோகன்!


திண்மையே உருவான ஆண்மை. தன்மை வாய்ந்த உண்மையான கேம்ப்ரிக். ஸ்வேத் புஷ்ப். ஜிப்பாக்களுக்கும் களையான சட்டைகளுக்கும் ஏற்றது. 271. வெண்மை நிறம். அழகிய, கண்கவர் ஆடைகளுக்கு பின்லே.
பின்லே

● அந்த இரண்டு பேர்களும் உயிர்த் தோழர்கள். இணைபிரியாதவர்கள். தங்கள் வாழ்வு வளம்பெறப் பிரிந்தார்கள். இருபது வருஷங்களுக்குப் பிறகு சந்தித்துக் கொள்ளுவதாக. சந்தித்துக் கொண்ட பிறகோ.....?



லட்சியங்கள்

இந்தக் கதையில் வரும் பாத்திரங்கள் இரண்டே இரண்டு பேர்தான். ஒருவர் பெயர் வைத்தியநாதன்; மற்றொருவர் சுப்பிரமணியன். பெயரைப் பார்த்தால் இவர்கள் இந்தக் காலத்துப் பத்திரிகைகளில் வரும் கதாபாத்திரத் தகுதி படைத்தவர்கள் இல்லைதான். என்ன செய்வது? இரண்டுபேரும் நாற்பது வயதைக் கடந்து விட்டவர்கள். அவர்கள் பிறந்த அந்த நாட்களிலும், ஊர்களிலும், ரவியும் ரமேஷும் தெரியாத பெயர்கள்.

வைத்தா, முனிசிபல் அலுவலகத்தில் குமாஸ்தாவாக இருந்த ஒருவருடைய மூத்த மனைவியின் பிள்ளை. சின்னஞ்சிறு வயசில் தாயன்பையும், பராமரிப்பையும் இழந்து, ஏமாற்றமும், வெறுப்பும் சூழ்ந்த வாழ்க்கையில் பழகியவன்.


வைத்தாவுடன் ஆரம்பப் பள்ளியிலிருந்தே ஒன்றாகப் படித்தவன் கப்புணி. கப்புணியும் கிட்டத்தட்ட வைத்தாவின் நிலையுடையவன் தான். அவனுக்கு அப்பா இல்லை. நான்கு வயது மூத்தவனான அண்ணன் ஒருவன்தான். அம்மா எங்கோ சமையல் வேலை செய்து எப்படியோ தன் வயிற்றுப்பாட்டையும் பார்த்துக் கொண்டு பிள்ளைகளையும் பார்த்துக் கொண்டாள். அடுப்பு நெருப்புடன் பழகிப் பழகி, அம்மாவின் குணமும் நெருப்பாகவே ஆகிவிட்டது. அவள் வீட்டில் இருக்கும் போது அண்ணன் தம்பி இருவரில் யார் என்ன சின்னத் தப்பு செய்து விட்டாலும் சரிதான், — அல்லது தப்பு செய்து விட்டதாக அம்மா நினைத்தாலும் போதும் — அடுப்பில் இருக்கும் விறகுக் கட்டை முன்பக்கம் எரிந்து கொண்டிருக்க, அடிப்பக்கம் சகோதரர்களின் முதுகைப் பதம் பார்த்துவிடும். பன்னிரண்டு வயதில் அம்மாவின் அடிகளைப் பொறுக்க முடியாத அண்ணன் ஹோட்டலில் சர்வர் வேலை கிடைத்தது என்று போய்விட்டான். தம்பி கப்புணியால் அப்படிப் போக முடியவில்லை. காரணம் பள்ளித் தோழனான வைத்தாதான்.

அன்பு என்ற வார்த்தைக்கு அர்த்தம் தெரியாமலேயே வாழ்ந்துவிட்ட அந்தச் சிறுவர்கள் பள்ளிப் பாடங்களில் கவனம் செலுத்த முடியவில்லை. ''சாப்பிட்டாயா, நேரம் ஆகிவிட்டது. பள்ளிக்குப் போ. படித்தாயா? இன்று என்ன பாடம் நடந்தது?'' என்று கேட்க ஆளில்லாமல் வளர்ந்த அந்தச் சிறுவர்கள் இன்னும் படிப்பில் கடைசியாகவே இருந்தார்கள். ஆனால் இருவரும் ஒரு விஷயத்தில் மிக ஒற்றுமை. ஏழாவதிலிருந்து எட்டாவது வகுப்புக்கு வைத்தாவுக்குப் பாசாகும்; கப்புணிக்கும் பாசாகும். அடுத்த வருஷம் வைத்தாவுக்குப் பெயில் ஆகும். நிச்சயம் கப்புணிக்கும் பெயில் ஆகிவிடும்! ஆரம்பப் பள்ளியிலிருந்து பத்தாவது வரும் வரை அவர்கள் இணை பிரியவே இல்லை.

பத்தாவது வகுப்பில் இருவரும் பெயில். வீட்டுக்குப் போய்ச் செய்தியைச் சொல்ல இருவருக்குமே இஷ்டம் இல்லை. ''படித்தாயா?'' என்று கேட்கத்தான் அவர்கள் வீட்டில் ஆள் இல்லையே தவிர, வருஷ முடிவில் படிப்பின் ரிசல்ட் தெரிந்தவுடன் ''மரியாதை'' செலுத்துவதில் இரண்டு வீடுகளிலும் உள்ளவர்கள் சளைத்தவர்கள் அல்ல. பாசாகாத வருஷங்களில் வீட்டில் வாங்கும் அடிகளை இதற்கு முன் வாங்கிப் பழக்கப்பட்டிருந்தாலும் அந்த வருஷம் இருவருக்குமே அதைப் பொறுத்துக் கொள்ள முடியாது என்று தோன்றியது.

''வாடா, வைத்தா! ஊரை விட்டு ஓடிப் போய்விடலாம். அம்மாவின் முன்னால் இனி போய் நிற்க மாட்டேன்'' என்று தீர்மானமாகச் சொன்னான் கப்புணி.

வைத்தாவுக்கு வீட்டுக்குப் போவதற்கும் விருப்பம் இல்லை; ஓடிப்போவதற்கும் தைரியம் இல்லை.



செத்துப் போனாலும் அண்ணு அருகில் இருக்கிறான், பார்த்துக் கொள்ளுவான்'' என்பான் கப்புணி. ''எனக்கு அந்தக் கவலே யும் இல்லே'' என்பான் வைத்தா.

இரண்டு மூன்று மாதங்கள் இப்படியே போயிற்று. வைத்தா வுக்கும் சுப்புணிக்கும் அலுவ லகத்தில் வேலே உயர்வு, சம்பள உயர்வு என்று நினேப்பதற்கு எந்த விதத்திலும் சந்தர்ப்பமே இல்லே. ஆனால் சாப்பாட்டுச் செலவுடன் மாத்திரம் நிற்க வில்லே, அவர்கள் வாழ்க்கைத் தரம். வெளிவரும் சினிமாக்களே

''என்ன யோசனே செய்யறே? சாப் பாட்டுக்கா கஷ்டம்? என் அண்ணு இல்லே? அவன் என்ன வேலே செய்கிறன்? அந்த வேலே எந்த ஊரிலும் உண்டு. கிளம்பு.... ஊம்...'' என்று அவசரப்படுத்தினன் சுப்புணி. வீட்டை யும் அப்பாவையும் சித்தியையும் நினேத்துப் பார்த்த வைத்தா, மறு பேச்சுப் பேசாமல் சுப்புணியுடன் கிளம்பி விட்டான்.

சென்னேக்கு வந்து சேர்ந்த இருவருக்கும் முதலில் கைகொடுத்தது சுப்புணியின் யோசனேதான். வைத்தாவுக்கு என்னவோ அந்த வேலேயில் அவ்வளவாக மனம் ஈடுபட வில்லே. அவன் அப்பா இரவு பத்து மணிவரை மளிகைக் கடை ஒன்றில் கணக்கு எழுதுவதை அவன் பார்த்ததுண்டு. மேல் வகுப்புக்கு வந்தபிறகு சில சமயம் அப்பாவுக்கு உதவி யாக நாலேந்து பக்கங்களில் இருக்கும் ரொக் கங்களேச் சேர்த்துப் போட்டுப் பழக்கமுண்டு.

சென்னே வாழ்க்கையின் ஆரம்ப நாட்களே ஹோட்டல் சர்வராக ஆரம்பிக்க நேர்ந்தா லும், அவன் மனம் எப்போதும் எங்காவது மளிகைக் கடையில் கணக்கெழுதும் வேலே கிடைத்தாலும் போதும் என்றுதான் அலேந்து கொண்டிருந்தது.

சில நாட்கள் சென்ற பிறகு இருவருக்குமே கம்பெனி ஒன்றில் வேலே கிடைத்து விட்டது. சம்பளம் நாற்பத்தி ஐந்து ரூபாய். ஆம், நாற்பத்தி ஐந்து ரூபாய்தான். அது 1945ம் வருஷம். இரண்டு வேளேச் சாப்பாடு இரு பத்தி ஐந்து ரூபாய்; பத்து ரூபாய் டிபன் செலவு; ஐந்து ரூபாய் அறை வாடகை; மீதி உள்ள பணம் கைச் செலவுக்கு.

வைத்தாவுக்கும் சுப்பிரமணிக்கும் பரம சந்தோஷம். ஊரைப் பற்றி நினேக்க வேண் டிய அவசியமே அவர்களுக்கு இல்லே. ''அம்மா

ஒன்று விடாமல் பார்த்தாக வேண்டிய பைத் தியம் வைத்தாவைப் பிடித்தது. சுப்புணியோ ஒரு கதைப் பைத்தியம். அவனுடைய அந்தச் சம்பளத்திலேயே எப்படியோ தமிழில் வெளி யாகும் அத்தனே பத்திரிகைகளேயும் வாங்கிப் படித்து ரசித்தான் அவன்: இப்படி அவர்கள் ரசனே அதிகமாக ஆக, வரும் சம்பளத்துக்கும் ஆகும் செலவுக்கும் சம்பந்தமே இல்லே என் பது தெரிய வந்தது. நாளாக ஆக, அதே அரிப்பு. என்ன செய்யலாம், என்ன செய்ய லாம் என்பதே சிந்தனே. வைத்தாவுக்கு உள்ளூற ஓர் ஆசை. 'எப்படியாவது கஷ்டப் பட்டு — ஆரம்பத்தில் ஓர் ஐந்நூறு ரூபாய் இருந்தால் போதும். புளியிலிருந்து, பருப்பி லிருந்து, பூண்டு வரை விற்கும் ஒவ்வொரு நாளேயும் பொட்டலத்திலும் லாபம் உண்டு. ஆனால் ஐந்நூறு ரூபாய்க்கு வழி?' சித்தியின் கொடுமைகளாலும், அப்பாவின் அலட்சியத் தாலும் சொந்தமாகச் சிந்திக்கவே பயப் படும்படியாக வளர்ந்த வைத்தா, தன் லட்சி யத்தை — ஐந்நூறு ரூபாய் பெறுமானமுள்ள லட்சியத்தை எப்படி வெளியில் சொல்வான்? சுப்புணியின் லட்சியம் எப்படியாவது அதிக மாகச் சம்பாதிக்க வேண்டும்; அவ்வளவு தான். தன் லட்சியத்தைப் பிறரிடம் சொல் வதற்கும் அவனுக்கு வைத்தாவைப் போல் எந்தவித பயமும் இல்லே. அவன் அம்மா பயப்பட்டாளா என்ன, அவனே அடிப்பதற்கு? யாரைக் கண்டாலும் சுப்புணிக்கு இதே கேள்விதான். ''என்ன சார், நாற்பத்தி ஐந்து ரூபாய் வருகிறது. என்ன பண்ண முடியும் இதில்?'' என்பான்.

ஒரு நாள் சுப்புணியின் லட்சியத்துக்குக் கடற்கரையில் பதில் கிடைத்தது. விலே உயர்ந்த துணியில் பாண்டும் சில்க் சட்டை

யும் அணிந்து எப்படியோ கடற்கரையில் கொஞ்சம் அறிமுகமான அந்தப் புதிய மனிதரிடம் வழக்கத்தைப் போல் ஆரம்பித்தான்: ''என்ன சார், நாற்பத்தி ஐந்து ரூபாய் வருகிறது....'' என்று. அந்த மனிதர் சிரித்தார். ''நானும் உன்னைப் போல் ஒரு காலத்தில் இருந்தவன்தானப்பா. இப்போது ஆயிரம் ரூபாய் வாங்குகிறேன்'' என்று அலட்சியமாகச் சொன்ன அவரைப் பார்த்துக் கண்களை அகல விரித்தான் கப்புணி.

''எப்படி சார்? எப்படி சார்?'' என்று அவன் தவிப்பதைக் கவனித்த அவர் சொன்னார். ''நான் சின்ன வயசில் ரொம்பக் கஷ்டப்பட்டு, கட்டிய வேஷ்டியுடன் பம்பாய்க்குப் போனேன். ஏதோ இப்போது இப்படி இருக்கிறேன்....'' என்றார்.

அன்றிலிருந்து கப்புணி பம்பாய் ஜபம் செய்ய ஆரம்பித்தான். ''பம்பாய்க்குப் போனால், இன்றைக்கு இல்லாவிட்டாலும் நாளாவட்டத்தில் முன்னுக்கு வரலாம். இந்தச் சென்னையில் என்ன செய்ய முடியும்? இன்னும் ஐம்பது வருஷங்கள் இருந்தாலும் இதே நாற்பத்தி ஐந்துதான்'' என்றான்.

வைத்தா என்னவோ அசையவில்லை. ''பம்பாய்க்குப் போனால் என்ன, பரலோகத்துக்குப் போனால் என்ன? நம் விதி என்று ஒன்று இருக்கிறது'' என்றான் அவன்.

''சீ, நிறுத்தடா, சாமியார்! இரண்டு பேரும் பம்பாய் போவோம். ஆமாம் நிச்சயம் போய்த்தான் ஆகணும்'' என்றான் கப்புணி.

''எனக்கு இஷ்டம் இல்லை... என் கையில் ஒரு ஐந்நூறு ரூபாய் மாத்திரம் இருந்தாலும்.... தவ்!...''

''உன் மளிகைக் கடைப் பைத்தியத்தை மூட்டை கட்டி வை. அடுத்த மாதம் பம்பாய்க்குப் போகிறோம். தயாராக இரு. ஆமாம், இப்போதே சொல்லிவிட்டேன்'' என்று முடித்தான் கப்புணி.

''இதுவரை நாம் சேர்ந்து செய்த எந்தக் காரியம் உருப்பட்டது? நான் வரமுடியாது' என்று கெஞ்சினான் வைத்தா.

கப்புணி கோபித்துக்கொள்ளவே வைத்தா சொன்னான். ''அப்படியானால் நான் சொல்கிறேன். இதுவரை நாம் சேர்ந்து செய்த காரியம் எதுவும் உருப்படவில்லை. நாம் இந்த ஊரை விட்டுப் போயும் ஆகணும். சேர்ந்து ஒரே இடத்துக்குப் போக வேண்டாம். நீ பம்பாய்க்குப் போ, நான் கல்கத்தாவுக்குப் போகிறேன்.''

இந்த ஏற்பாடு கப்புணிக்குப் பிடித்தது. ஏற்பாடுகள் ஆரம்பமாயின.

டிசம்பர் முப்பதாம் தேதி. மறுநாள் இரவு ரயிலில் அவர்கள் சென்னையை விட்டுப் புறப்படுவதாக இருந்தார்கள்.

தன் துணிமணிகளை ஒரு பெட்டியில் அடுக்கி வைத்துக் கொண்டிருந்த வைத்தா வழக்கம்போல் குரலில் சோகம் இழையோடக் கேட்டான்.

''உனக்கு எப்படிடா கடிதாசி எழுதுவது? நீதான் எனக்கு எப்படி எழுதுவாய்?'' அவன் மீண்டும் அழுவதைக் காதில் போட்டுக் கொள்ளாமல் பத்திரிகையில் சுவாரசியமாக மூழ்கிய கப்புணி, துள்ளிக் குதித்தான்.

''டேய், நம் பிரச்னைக்கு இந்தக் கதையில் பதில் இருக்குடா. இதோ பார் 'ஓ ஹென்றி' ஆங்கிலத்தில் எழுதியதன் மொழி பெயர்ப்பு. சொல்கிறேன், கேள். இந்த மாதிரிதான் இரண்டு நண்பர்கள் வேறுவேறு இடத்துக்குப் பிரிந்து போகிறார்கள். போகும் போது, இரண்டு பேரும் இருபது வருஷங்கள் கழித்து இதே இடத்தில் சந்திக்க வேண்டும் என்று உறுதி எடுத்துக் கொள்கிறார்கள். கடைசியில் என்ன ஆகிறது தெரியுமா? இருபது வருஷங்கள் கழித்து அதே இடத்தில் சந்திக்கிறார்கள். ஒருவன் குற்றம் செய்துவிட்டு ஓடி வந்திருப்பவன், மற்றொருவன் போலீஸ்காரன்! ஆஹா, என்ன அருமையான கற்பனை!'' என்று அந்த அநுபவத்தில் சில நிமிஷங்கள் திளைத்துப்போன கப்புணி, சிறிது நேரத்துக்குப் பிறகு, ''டேய், வைத்தா! நினைவில் வைத்துக் கொள். நீ கல்கத்தாவுக்குப் போகிறாய். நான் பம்பாய்க்குப் போகிறேன். என்றைக்கு? டிசம்பர் மாதம் முப்பத்தி ஒன்றும் தேதியன்று. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்து ஐந்தாம் வருஷம். சரியாக இருபது வருஷங்கள் கழித்து, ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்தி ஐந்தாவது வருஷம் ஜனவரி மாதம் முதல் தேதி இதே அறைக்கு நான் வருவேன். நீயும் வரவேண்டும். என் கையில் அடித்துச் சத்தியம் செய்து கொடு. விளையாட்டு இல்லை. நமக்குள்ளே இது தெய்வ சாட்சியாகச் செய்துகொண்ட பிரதிக்ஞை, உம்.......!'' என்றான்.

வைத்தா அரைச் சம்மதத்துடன் சத்தியம் செய்து கொடுத்தான்.

பம்பாய் மெயில்தான் முதலில் கிளம்பிற்று. கப்புணியை அதில் ஏற்றி அனுப்பிவிட்டு வைத்தா கல்கத்தா மெயிலுக்கு வந்தான். இடத்தில் அமர்ந்த சற்று நேரத்துக்கெல்லாம் ரயில் கிளம்பிற்று.

கிளம்பிய பிறகும் வைத்தா யோசனை செய்தபடிதான் இருந்தான். 'கல்கத்தாவுக்குப் போய்ச் சேர்ந்துவிடலாம். அங்கே போன பின் கப்புணி சொல்லிக் கொடுத்திருப்பதைப் போல் எந்த ஹோட்டலிலாவது வேலையில் அமர்ந்துவிடலாம். பிறகு... நாம் என்ன வேலை பார்த்து என்ன? சம்பாதித்து இத்தனை வருஷங்களாகக் கனவு கண்டுகொண்டிருந்த 'சொந்தத்தில் ஒரு மளிகைக் கடை' என்பது கனவாகவே போய்விடவேண்டியது தானா? அப்படியேதான் கையில் காசு சேர்ந்தாலும் பாஷை தெரியாத கல்கத்தாவில் போய் மளிகைக் கடை வைக்க முடியுமா? அதற்கு நம் ஊர்தான் லாயக்கு...'

ரயில் தண்டவாளத்தில் ஏற்படுத்திய சப்தம் ''மளிகைக் கடை, மளிகைக் கடை... மளிகைக் கடை...'' என்றே வைத்தாவின் காதில் எதிரொலித்தது.

இரவு முழுவதும் தூங்காமல் தவித்த வைத்தா, காலை வேளையில் மனம் தெளிவாக இருக்கும்போது மறுபடியும் யோசித்தான். முடிவு. அடுத்த ஸ்டேஷனில் யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் கொண்டுபோயிருந்த படுக்கையையும் பெட்டியையும் எடுத்துக் கொண்டு இறங்கியதுதான்.

சென்னைக்கே திரும்பிவிட்ட வைத்தா மீண்டும் பழைய அலுவலகத்திலேயே சேர்ந்து நாற்பத்தி ஐந்து ரூபாய் ஐம்பது ரூபாயாகும் நாளை எதிர்நோக்கி ஆவலுடன் காத்திருக்கலானான்.

பத்து வருஷ முடிவில் வைத்தாவின் கையில் அவன் விரும்பிய கணிசமான தொகை சேர்ந்தது. அதற்குள்ளேயே அவ்வப்போது கணக்கெழுதிக் கணக்கெழுதிக் கடை நடத்துவதற்கு வேண்டிய அநுபவத்தையும் பெற்றுக் கொண்டிருந்தான். பத்தாவது வருஷ ஆரம்பத்தில், அதே ஜனவரி மாதம் முதல் தேதி அடையாற்றில் நாதன் மளிகை ஆரம்பமாகியது.

முதலில் எல்லாம் சரியாகத்தான் நடந்தது. நாளாகஆக, எங்கோ என்னவோ கடிந்தது.

அது வரை அவன் கணக்கெழுதி அநுபவம் திரட்டிக் கொண்டிருந்த இடங்களில் அவன் பார்த்த கடைக்காரப் பையன்கள் மாதிரி இல்லாமல் அவன் வைத்த ஆட்கள் ஏதேதோ செய்ய ஆரம்பித்தார்கள். பத்து மூட்டை என்று பருப்பை வாங்கி அதற்கென்று ஒரு லாபம் வைத்து விற்க ஆரம்பித்தால் எட்டு மூட்டைதான் தேறியது. ஒவ்வொரு சாமானிலும் அப்படியே.

வியாபாரம் ஆயிற்றோ இல்லையோ, விற்பனை வரி, வருமான வரி, தொழில் வரி என்று ஒரே வரி வரியாய்த் தெரிந்தது!

கடைசி கடையாகக் கையில் இருந்த முதலும் போய், கடன் தொகை ஆயிரத்தைத் தாண்டிக் கொண்டிருக்கிறது என்பது தெரிந்த போதுதான், "மளிகைக் கடையில் கணக்கு எழுதுவது வேறு, வியாபாரம் செய்வது என்பது வேறு" என்பது முதலாளி வைத்தியநாதனுக்குத் தெரிய வந்தது.

கடை கை மாறிற்று.

முதலாளி வைத்திய நாதன் பழையபடி வேறு ஏதோ கம்பெனியில் குமாஸ்தா வேலையையும் மாலையும் இரவும் மளிகைக் கடையில் கணக்கு எழுதும் வேலையையும் ஏற்றார். மீண்டும் மளிகைக் கடைக் கணக்கில் விழுந்து எழ வேண்டாம்தான். ஆனால் அந்த இடைவேளையில் வைத்தியநாதனுக்குக் கல்யாணம் என்ற ஒரு புதுப் பந்தம் ஏற்பட்டிருந்தது. அந்தப் பந்தத்திலிருந்து புதுக் கிளை ஒன்றும் புறப்பட்டிருந்தது!

இப்படியாக மீண்டும் ஒரு பத்து வருஷங்கள் ஓடின.

இப்போதும் வைத்தியநாதன், பகல் நேரக் குமாஸ்தா, இரவு நேர மளிகைக் கடைக் கணக்காளிதான். சந்ததிவரிசை இரண்டோடு நின்று விட்டது. ஆயினும் ஆயிரத்தித் தொள்ளாயிரத்து அறுபத்திநாலில் கிடைத்த இருநூற்றி ஐம்பதில், இருபது வருஷங்களுக்கு முன் கிடைத்த வெறும் ஐம்பதில் கண்ட நிம்மதியையும் சுகத்தையும் காண முடியவில்லை. ஆகவே, மளிகைக் கடைக் கணக்கும் அவரை விடவில்லை.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்தி ஐந்தாம் வருஷம் ஜனவரி மாதம், முதல் தேதி! வைத்தியநாதன் அந்த நாளின் முக்கியத்துவத்தை மறக்கவில்லை. ஒரு வேளை வேறு எந்தத் தேதியில் அந்த நிகழ்ச்சியை வைத்துக் கொண்டிருந்தாலும், கல்யாணத் தேதி, முதல் குழந்தை பிறந்த தேதி ஆகியவற்றைப் போல் இதுவும் ஏதோ ஒரு தேதியாக இருந்திருக்கும். ஜனவரி மாதம் முதல் தேதி என்று ஏற்பட்டு விட்டதால் ஒவ்வொரு வருஷமும் அந்தத் தேதியில் வைத்தியநாதனுக்குத் தூக்கம் வராது. 'கப்புணி என்ன ஆனான், பம்பாயில் என்ன செய்து கொண்டிருக்கிறான்' என்று நினைத்து நினைத்துப் படுக்கையில் புரளுவான், அன்றைக்கு மாத்திரம். 'கப்புணி என்னைப் போன்றவன் அல்ல. அவனுக்கு இருந்த தைரியத்துக்கும் தன்னம்பிக்கைக்கும் ஆசைக்கும் நிச்சயம் அவன் ஒரு பெரிய மனிதனாக ஆகியிருப்பான். இந்த மாதிரி மளிகைக் கடைப் பைத்தியம் பிடித்து அலைந்து, கையில் இருந்த காசையும் தொலைத்து விட்டுக் கடனும் பட்டிருக்கமாட்டான். கப்புணி என்னதான் ஆகியிருப்பான்?'

இன்று காலையிலிருந்து வைத்தியநாதனுக்கு ஒருபுறம் கப்புணியைப் பற்றித் தெரிந்து கொள்ள ஆவல்; மறுபுறம் தன்னைப் பற்றிச் சொல்லிக் கொள்ள அவமானம். 'கப்புணி சொன்னபடியே கல்கத்தாவுக்குப் போயிருந்தால் ஒரு வேளை நானும் ஒரு பெரிய மனிதன் ஆகியிருக்கலாம், யாரால் சொல்ல முடியும்?'

எப்படியும் அந்த இடத்துக்கு இன்று போகாமல் இருக்க முடியாது; போக வேண்டியதுதான்.



அந்த ஒருவர் நீங்கள் தான்!

சுவாமி ராமதீர்த்தர் ஒரு முறை அமெரிக்காவுக்குச் சென்றிருந்தார். இவருடன்கூட கப்பல் பிரயாணம் செய்த ஓர் அமெரிக்கர், "ஐயா, தங்கள் மூட்டை முடிச்சுகள் எங்கே?" என்று கேட்டார்.

"இந்த உடம்பைத் தவிர வேறு மூட்டை முடிச்சுகள் கிடையாது" என்றாராம் ராமதீர்த்தர்.

"அப்படியா? அப்போது பணத்தை எங்கே வைத்துக் கொள்வீர்கள்?" என்று கேட்டார் அந்த அமெரிக்கர்.

"பணத்தை வைத்துக் கொள்ளும் பழக்கம் எனக்கு இல்லை."

"பின் எப்படி ஜீவனம் செய்ய முடியும்?"- இது கேள்வி.

"எல்லோரையும் நேசித்து நான் ஜீவனம் செய்கிறேன்." -- பதில்.

"அமெரிக்காவில் உங்களுக்கு நண்பர்கள் யாராவது இருக்கிறார்களா?"

"உண்டு. ஓர் அமெரிக்கரை எனக்குத் தெரியும். அந்த அமெரிக்கர் வேறு யாருமில்லை; தாங்கள் தான்" என்று கூறி, அவர் தோள் மீது அன்புடன் கைவைத்தார் ராமதீர்த்தர்.

அந்த அமெரிக்கரின் நெஞ்சம் பூரித்து விட்டது, சுவாமிகளின் இனிய பாவத்தைக் கண்டு.

- வசந்தரா



பரிசு கிடைத்தது!

சென்ற பாரத-பாகிஸ்தான் போரின் பொழுது, நாட்டுப் பற்றையும் வீரச் செயலையும் காட்டியதற்காகப் பாரத அரசாங்கம் சிலரைக் கௌரவிக்கத் தீர்மானித்தது. பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுக்கு, ராஷ்டிரபதி பவனத்தில் நடைபெறவிருக்கும் விழாவில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு அனுப்பப்பட்டது.

யமுனாநகரைச் சேர்ந்த ரோஷன்லால் என்பவரும் இப்படி அழைக்கப்பட்டவர்களில் ஒருவர். ஆனால் பரிசு பெற வேண்டிய ரோஷன்லால் அவர் அல்ல.

இருந்தாலும் அசோக சக்கரம் பெறும் ஆசையை அவரால் அடக்க முடியவில்லை. எனவே, அவர் ராஷ்டிரபதி பவனத்தோடு தொடர்புகொண்டு, விழாவில் தாம் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகளை உறுதி செய்து கொண்டார். சென்ற ஆண்டு அக்டோபர் முப்பதாந் தேதி ராஷ்டிரபதியிடமிருந்து அசோக சக்கரப் பரிசையும் பெற்று மகிழ்ந்தார்.

சில நாட்களுக்குப்பின் திடீரென்று உண்மையான ரோஷன்லாலுக்கு, அசோக சக்கரம் தமக்குக் கிடைக்க வேண்டும் என்பது நினைவுக்கு வந்தது. ஏனெனில், எதிரிகளின் கண்களில் மண்ணைத் தூவிப் பாரத வீரர்களுக்கு அவர் உணவு கொண்டு கொடுத்த செயலே வீரம் மிகுந்தது. தாம் செய்த பணியை ராஷ்டிரபதிக்கு விவரமாக எழுதித் தமக்கு ஏன் பரிசளிக்கக் கூடாது என்று கேட்டிருந்தார்.

அவர் கடிதத்துக்கு ராஷ்டிரபதி பவனத்திலிருந்து வந்த கடிதம் வருமாறு:

"அடுத்த விழா 1967ஆம் ஆண்டு ஜனவரி 26ந் தேதி குடியரசு தினத்தன்று நடைபெறவிருக்கிறது. அந்த விழாவில் தங்களுக்கும் அசோக சக்கரம் அளிக்கப்படும். யமுனாநகரின் அதிர்ஷ்டத்தை என்னவென்பது! மூன்றுக்கு இரண்டாக அசோகச் சக்கரப் பரிசு பெறுகிறது."

இரவு எட்டு மணி. அன்று மளிகைக் கடைக் கணக்குக்கு மட்டம். வீட்டில் மனைவியிடமும் குழந்தைகளிடமும்கூட எங்கே போகிறோம் என்பதைச் சொல்லிக் கொள்ளக் கூச்சம். ஒருவழியாகக் கிளம்பியாகி விட்டது.

எட்டரை மணிக்கு அந்த வீட்டு வாசலுக்கு வந்தாகி விட்டது. அந்த வீடு இப்போது முன்பு இருந்த மாதிரி இல்லை. அப்போது இருந்தவர்களே அங்கே இல்லை போல் இருந்தது. முன்பு மொட்டைமாடியாக இருந்த அந்த வீடு இப்போது இரண்டு மாடிகளுடன் காட்சியளித்தது. முன்புறம் வீட்டைக் குடைந்து அமைத்திருந்த இடத்தில் பெரிய கார் ஒன்று இருந்தது. வீடு முழுதும் வேலைப்பாடமைந்த ஜன்னல்களும் கண்ணாடிக் கதவுகளும் வர்ண விளக்குகளுமாக ஜகஜ்ஜோதியாக மாறியிருந்தது.

மணி ஒன்பது இருக்கும்.

டாக்ஸி ஒன்று வருகிறது. இங்கேதான் வருகிறது போலிருக்கிறது. ஆம், வீட்டு வாசலில் நின்று விட்டது. டாக்ஸிக்குள் தெரியும் மங்கலான வெளிச்சத்தில் சுப்புணியின் உருவம் மாதிரி தெரிகிறது.

டாக்ஸி நின்றதும் உடனேயே அந்த உருவம் இறங்கவில்லை. கையிலிருந்த பர்ஸை எடுத்துப் பணத்தை டிரைவரிடம் கொடுக்கும் வரை உள்ளேயே உட்கார்ந்திருந்தது அந்த உருவம். டிரைவர் கதவைத் திறந்து விடச் சுப்புணி வெளியில் வந்தார்.

தெரு விளக்கு வெளிச்சமும் அந்த வீட்டின் முகப்பு வெளிச்சமும் சுப்புணியின் முகத்தில் வீச, வைத்தியநாதன் அந்த முகத்தை நன்றாகப் பார்த்தார். பிறகு இரண்டு கைகளையும் நீட்டி, "சுப்புணி...!" என்று அழைத்தார்.

வைத்தியநாதன் நீட்டிய கைகளைச் சுப்பிரமணியம் பிடித்துக் கொண்டார். மீண்டும் இரண்டடிகள் தள்ளி நின்று சுப்பிரமணியனை ஆசை தீரப் பார்த்தார், வைத்தியநாதன்.

மேலே டெரிலின் சட்டை, இடையில் வேஷ்டிதான். ஆனால் விலை உயர்ந்த மில் வேஷ்டி. கையில் கனமான தோல் பை. இடது கையில் கடிகாரம். இழைய இழைய வாரிய — ஒன்றுகூடக் கருமை நிறம் மாறாத — கிராப் மழமழ வென்று க்ஷவரம் செய்து கொண்டிருந்த முகம், அதில் பௌடரைப் போட்டதைப் போன்ற காந்தி!

இருவரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டதில் ஏற்பட்ட முதல் அதிர்ச்சி தணிந்ததும், "போகலாம்...." என்று கடற்கரையை நோக்கி நடந்தார்கள்.

இரவு ஒன்பது மணிக்குக் கடற்கரையில் அவர்களைத் தவிர வேறு யாருமே இல்லை.

சுப்பிரமணியன் கேள்வி மேல் கேள்வியாகக் கேட்க, வைத்தியநாதன் தட்டுத் தடுமாறிப் பதில் சொல்லிக் கொண்டு வந்தார். "என்ன பண்ணுவது? மளிகைக் கடை வைத்தது தப்புத்தான். நான் செய்த பெரிய தப்பு அதுதான். அந்தத் தப்பைச் செய்வதற்காகத்தான் கல்கத்தாவுக்குக்கூடப் போகாமல் பாதி வழியில் திரும்பி வந்தேன். என்ன செய்வது? அவரவர்கள் விதி என்று இருக்கிறது..... ஊம்.... உன்னைப் பற்றிச் சொல்....." என்றார் வைத்தியநாதன்.

"ஒன்றுமே அதிகமாக இல்லை. ரொம்ப சிம்பிள். நேராகப் பம்பாய்க்குப் போனேன். உனக்கு மளிகைக் கடைப் பைத்தியம் பிடித்த மாதிரி எனக்கு ஹோட்டல் பைத்தியம். ஆனால் நான் ஹோட்டல் வைக்க வேண்டும் என்று அலையவில்லை. பம்பாய்க்குப் போனவுடன் காலை ஊன்றிக் கொள்ள அதை ஓர் ஆதாரமாகத்தான் நினைத்தேன். என்ன செய்கிறது? உன் அப்பா மளிகைக் கடையில் கணக்கெழுதினார், உன்னை அந்தப் பைத்தியம் பிடித்துக் கொண்டது. என் அம்மா எனக்கு நினைவு தெரிந்ததிலிருந்து கரண்டியும் கையுமாகத்தான் இருந்தாள். அதனால் அந்த வேலையில் எனக்கு ஓர் அக்கறை. கேள், போனவுடன் எங்கேயோ ஒரு ஹோட்டலில் வேலை கிடைத்தது. அது கிடைத்த வேளை இன்று வரை அது என்னை விடவில்லை....." என்று சொல்லி நிறுத்திவிட்டு மீண்டும், "ஆனால் இப்போ சர்வராக இல்லை. 'மெட்ராஸ் மணீஸ் போர்டிங் அண்ட் லாட்ஜிங்' முதலாளி! நான் நாளைக் காலை எக்ஸ்பிரஸில் திரும்பியாகணும். நேற்றுத்தான் வந்தேன். நாளைக் காலை ரயிலில் ரிசர்வ்கூடப் பண்ணி விட்டேன்" என்று சொல்லிய சுப்பிரமணியன் பர்ஸை எடுத்துத் திறந்து பார்த்து.



ஏகபோக விற்பனை ஏஜெண்டுகள்:
மெஸர்ஸ் அஜித்பாய் ஜயந்திலால் சோமாபாய் படேல் & கோ., 5, கிடங்குத் தெரு, மதராஸ்.

பிறகு அதைத் தோல் பையில் அடக்கம் செய்தார்.

குளிரெடுக்க ஆரம்பித்தது. கடைசிப் பஸ்ஸைப் பிடித்தாக வேண்டிய நிலையில் இருந்தார் வைத்தியநாதன். ஆகவே அவர் தான், ''கிளம்புவோமா?'' என்று சொல்லி எழுந்தார்.

இருவரும் எழுந்தவுடன், ''இது என்னப்பா இது. இத்தனை வருஷங்கள் கழித்து வந்துவிட்டு என் வீட்டில் ஒரு வேளைகூடச் சாப்பிடாமல் கிளம்புகிறாயே!'' என்றார் வைத்தியநாதன்.

''அதுதான் சொன்னேனே. இந்தத் தடவை இப்படி அவசரம். இங்கே வந்த இரண்டு நாட்களாக உன்னை எங்கேயாவது அகஸ்மாத்தாகப் பார்க்கமாட்டோமா என்று இருந்தது. எப்படியோ பார்த்து விட்டேன். அடுத்த மாசம் மனைவி, குழந்தைகளுடன் நிச்சயம் வருவேன். உன் வீட்டில் தான் தங்குவேன். வருவதற்குள் கடிதாக போடுகிறேன்!'' என்று நடந்தார் சுப்பிரமணியன்.

வைத்தியநாதனுக்காகப் பஸ் ஸ்டாண்டில் காத்துக் கொண்டிருந்தபோது அந்த வழியாகப் போன டாக்ஸி ஒன்றை லாகவத்துடன் கையைத் தட்டி அழைத்து அதில் ஏறி உட்கார்ந்தார் சுப்பிரமணியன். வைத்தியநாதன் தம் வாழ்க்கையின் ஏக்கங்களையும் தோல்விகளையும் சேர்த்துத் திரட்டி ஒரு பெருமூச்சாக விட்டபடியே நண்பனை நோக்கிக் கையை ஆட்டி விடையளித்தார்.

மறு நாள்.

முதல் நாள் மாலையில் கடைக்குப் போக முடியாமற் போனதற்காகக் காலைவேளையிலேயே அங்கு போய்க் கணக்குப் புத்தகங்களை வைத்தா எடுத்து வைத்து அவற்றில் ஆழ்ந்து போயிருந்த போது முதலாளி வந்தார். வந்ததும் வராததுமாக அவர் நேரே வைத்தியநாதனுக்கு அருகில் நின்று கொண்டு, ''அந்த ராயவரம் பாக்கி என்ன ஆச்சு?'' என்று விசாரித்தார். ''போன வாரம்கூடப் போய்க் கேட்டேன். இந்த வாரம் தந்துவிடுவதாகச் சொன்னார்'' என்றார் அவர். ''இன்னைக்குச் சாயங்காலம் நீங்க இங்கே வரவேணும். ராயபுரத்துக்குப் போயி, ஆளைப் பிடிச்சு, 'இனிமேல் சால்ஜாப்புச் சொன்னால் நடக்காது. பாக்கிப் பணத்தைக் கொடுத்தால் தான் போவேன்'னு நின்னு வாங்கிட்டு வந்துடுங்க. ஆமாம்....'' என்று கண்டிப்புடன் உறுமிவிட்டுப் போனார் முதலாளி.

மாலையில் அலுவலகம் விட்டதும் நேராக ராயவரத்துக்குப் போய்ப் பழைய பாக்கிப் பரசுராமன் ஹோட்டலை அடைந்தார். இவரைப் பார்த்தவுடன் பரசுராமன் வழக்கம் போல் பெரிதாகக் கும்பிடு போட்டு விட்டுத் தம் தனியறைக்கு அழைத்துக் கொண்டு போய், ''இன்னும் ஒரே வாரம். அடுத்த வாரம் நிச்சயம் தந்து விடுகிறேன். முதலாளியிடம் சொல்லி.....'' என்றார். அவர் சொல்லி முடிக்குமுன், ''இன்றைக்குப் பணத்தை எண்ணிக் கீழே வைக்காத வரை இந்த இடத்தை விட்டு நகரக் கூடாது என்று எங்க முதலாளி சொல்லியிருக்கார்......'' என்று குரலை உயர்த்தினார் வைத்தியநாதன்.



அவர்கள் பேசும் சத்தம் வெளியில் கேட்பதை அறிந்த பரசுராமன் மெதுவாகப் பேசிக் கொண்டே வைத்தியநாதனை ஹோட்டலின் பின் பக்கம் அழைத்துக் கொண்டு போய்த் தம் நிலைமை விவரித்தார். அதற்கு மேலும் அந்த மனிதரை நெருக்கத் தெரியாத வைத்தியநாதன் என்ன செய்வது என்ற தர்மசங்கடமான நிலையில் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டிருந்த போது அவர் பார்வை எதேச்சையாகச் சமையலறையில் விழுந்தது. அங்கே இடுப்பில் அழுக்கு வேஷ்டியும், மேலே வெற்றுடம்புமாக இருந்த ஒருவர் இடுப்பு வேஷ்டி மடிப்பில் இருந்த பொடி மட்டையை எடுத்து உறிஞ்சுவதைப் பார்த்து அசந்து போய் நின்றார். இரண்டடி அருகில் போய்த் தம் காரியத்தில் ஆழ்ந்து போயிருந்த அவரை நன்றாகப் பார்த்துச் சந்தேகம் தீர்ந்ததும் ஆச்சரியத்தில் வாயடைத்து நின்றார். இடுப்புத் துண்டால் மூக்கைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்த சுப்பிரமணியனும், சற்றும் எதிர்பாராதவிதமாக அங்கே வைத்தியநாதனைப் பார்த்ததும் திகைத்துப் போனார். சிறிது நேரம் கழித்துச் சமாளித்தபடியே அவரையும் அழைத்துக் கொண்டு பின்பக்கம் போனார். ''வைத்தா! என்னை நீ இங்கே எதிர்பார்க்கவில்லை, இல்லையா? என்ன செய்வது? யார் யார் எந்தத் தொழிலுக்கு என்று பிறந்திருக்கிறோமோ, அந்தத் தொழிலைச் செய்துதான் ஆகவேண்டும்! நீயாவது உன் ஆசைப்படி கொஞ்ச நாட்கள் கடை வைத்துப் பார்த்துவிட்டாய். நான் அதுவரைகூட வரவில்லை. என்ன செய்வது....? போகட்டும். நான் உன் வீட்டுக்கு வந்து ஒரு வேளைகூடச் சாப்பிடவில்லை என்று நேற்று ராத்திரி குறைப்பட்டுக் கொண்டாயே, நாளைக்கு வரட்டுமா....?'' என்று கேட்ட சுப்பிரமணியத்தை அதிசயத்துடன் பார்த்துக் கொண்டு நின்றார் வைத்தியநாதன்.

வட்ட மேஜை

- நகைச்சுவை விருந்து
- அரசியல் கட்டுரைகள்
- வருங்காலத்துக்கு அநீதி
- நடிப்பின் சிகரம்
- இல்லையென்பான் யாரடா?

■ 'யாரோ இவர் யாரோ?' முதல் அத்தியாயமே மிகச் சிறப்பாக உள்ளது. ''இப்படி ஆரம்பிக்க இது என்ன துப்பறியும் கதையா?'' ''அதுதான் கதாநாயகனின் முகம்'' போன்ற வரிகள் நடிகர் ''சோ'' ஒரு சிறந்த நகைச்சுவை எழுத்தாளர் என்பதை வலியுறுத்துகின்றன.

திருச்சி — 6
3—8—67 சேதுராமன்

■ ஆண்டு மலரில் வெளியாகியிருந்த ''ஆகஸ்டு புரட்சியை''ப் பற்றிய கட்டுரை, புரட்சி பற்றித் தெளிவாக அறிந்திராத என் போன்ற இளைஞர்களுக்கு அதனைப் பற்றி அறிய வாய்ப்பு அளித்தது. கல்கிக்கும், கட்டுரையாசிரியர் அவர்களுக்கும் இளைஞர்கள் சார்பாக எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், அக்கட்டுரையாசிரியரைத் தொடர்ந்து இது போன்ற தேச விடுதலைக் கட்டுரைகள் பலவற்றை எழுதுமாறு வேண்டுகிறேன்.

பெங்களூர்
4—8—67 இரா. முனுசாமி

■ ர. சு. நல்லபெருமாள் அவர்கள் எழுதி வரும் ''கல்லுக்குள் ஈரம்'' என்னும் தொடர்கதை அரசியல் பற்றுக் கொண்ட எனக்குத் தேனாக இருக்கிறது.

''கல்லுக்குள் ஈரம்'' தொடர் கதையில் என்ன இல்லை? எல்லாம் உண்டு. எது எது மனிதனுக்கு அவசியமோ, அதனையெல்லாம் கதையில் உள்ளடக்கியிருக்கிறார் கதாசிரியர்.

கொழும்பு—11
8—8—67 களந்தை மீ. ஷேய்க் முகைதீன்

■ ஜவாஹர்லால் நேரு இந்தி பேசாத ராஜ்யங்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை எப்படியும் நிறைவேற்றுவதில்லை, இந்தியா முழுவதிலும் இந்தி மொழியைக் கட்டாயம் திணிப்பது என்று மத்திய அமைச்சரவை கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறது என்பதற்குச் சமீபத்தில் பெங்களூரில் கல்வித்துறை ராஜ்ய மந்திரி பேராசிரியர் ஷேர்சிங் பேசியதை உதாரணமாகச் சொல்லலாம். அவர் கூறியதாவது: ''ஆங்கில மொழியின் ஆதிக்கத்துக்கு நாம் ஒரு போதும் அடிபணியமாட்டோம். அந்த மொழி பாரத இளைஞர்களின் பேராற்றலையும் உற்சாகத்தையும் உறிஞ்சி விட்டதுடன் தேசியப் பண்பையும் கலாசாரத்தையும் அறவே ஒழித்துவிட்டது. மறுபடியும் இந்திய மக்களின் மனத்தில் அம்மொழி ஆட்சி செலுத்தும்படி விடக்கூடாது. நம்முடைய கலாசாரம் செழிக்க வேண்டுமானால் இந்தி மொழியை நம் தேசிய மொழியாக்கினால்தான் முடியும்.'' இவ்வளவுக்குப் பின்னரும், இந்தி பேசாத ராஜ்யங்களிலுள்ளவர்கள் சும்மா இருப்பார்களேயானால், தங்கள் ராஜ்யங்களின் கோடிக்கணக்கான வருங்காலச் சந்ததிகளை நாட்டின் இரண்டாந்தரப் பிரஜைகளாக ஆக்கிய குற்றத்துக்கு ஆளாவார்கள்.

பெங்களூர்
16—8—67 வி. டி. சீனிவாசன்

■ கல்லூரிகளில் போதனாமொழி பற்றி வாக்கெடுப்புச் செய்தால் நிச்சயம் ஆங்கில மொழியில்தான் போதனை முறை வேண்டுமென்று பல்லாயிரக்கணக்கான மாணவர்களும் விரும்புவர். தமிழ் மொழி தாய் போல்; ஆங்கிலம் மனைவி போல்; ஆங்கிலம் நாம் விரும்பிக் கற்றுக் கொள்ளும் மொழி.

வேலூர் மணிமேகலை
13—8—67 ஆக்ஸிலியம் கல்லூரி

■ நல்லவற்றைக் காண நேரும்போதெல்லாம் நடுநிலையில் நின்று பாராட்டுத் தெரிவிக்கத் தவறாத வெகுசில பத்திரிகைகளுள் கல்கியும் ஒன்று. நடிப்பின் சிகரத்தை பத்மஸ்ரீ கணேசன் 'திருவருட் செல்வர்' படத்தின் மூலம் எட்டியதைப் பாராட்டும் வகையில் சென்ற இதழ்க் கல்கி அட்டையில் அவர் படத்தை வெளியிட்டு, இவ்வுண்மையை மற்றொரு முறை நிலைநாட்டி விட்டீர்.

பாண்டிச்சேரி
18—8—67 ச. சங்கர இராமன்

■ இவ்வாரக் கல்கி இதழில் ''இல்லாதில்லை'' என்று வெளியாகியிருந்த துணுக்கில் கன்யாகுமரி ஜில்லாவில் துறைமுகம் கிடையாது என்றிருந்தது. இது தவறு. இங்கு உள்ள குளச்சல் சிறந்த ஓர் இயற்கைத் துறைமுகம். இரண்டாவது உலக யுத்தத்தின் போது பர்மாவிலிருந்து இந்தியாவுக்கு அரிசி இறக்குமதியாகிக் கொண்டிருந்த வேளையில் பர்மா அரிசியைத் தாங்கித் தினமும் ஏழெட்டு கப்பல்கள் இந்தத் துறைமுகத்துக்கு வந்து செல்லும். இப்பொழுது இத்துறைமுகத்திலிருந்து உலோக மணல் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிக் கொண்டிருக்கிறது.

நாகர்கோவில்
18—8—67 மு. தம்பையா

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor: T. Sadasivam.

REGISTERED No. M. 4393
Registered as a Newspaper in Ceylon

